போதைப் பொருளற்ற தேசத்தை நோக்கி...
என்ற தொனிப்பொருளிலான
மீள்பார்வைக் கலண்டர்
நவம்பர் மாதம் வெளியாகிறது

மஹிந்தவுடன் அரசியல் செய்வது ஹராம் என உலமா சபை பத்வா வழங்கினால் நான் அவருக்கு ஆதரவு வழங்க மாட்டேன்



**அப்துல் சத்தார்**
தேசிய அமைப்பாளர் முஸ்லிம் முற்போக்கு முன்னணி

07

மீள்பார்வை
මීල්පාර්වෙ
සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்
Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038
Meelparvai Fortnightly
www.meelparvai.net
இதழ் - 354 • 21 ஒக்டோபர் 2016 வெள்ளிக்கிழமை • முஹர்ரம் 1438 • விலை 40.00




# முஸ்லிம்கள் தொடர்பில் அரசாங்கம் இரட்டை நிலைப்பாடு

முஸ்லிம்களது பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்காத நிலையில் பலஸ்தீன் விவகாரத்தில் அரசாங்கம் எடுத்த இரட்டை நிலைப்பாடு முஸ்லிம் சமூகத்துக்கு மத்தியில் ஆச்சரியத்தை கிளப்பியிருக்கிறது.

இலங்கை - பலஸ்தீன் பாராளுமன்ற நட்புறவுக் கமிட்டியின் தலைவரும், நல்லாட்சி அரசாங்கத்தின் சுகாதார அமைச்சருமான டொக். ராஜித சேனாரத்ன அண்மையில் பலஸ்தீனுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

(பக்.13)



இலங்கை-பலஸ்தீன் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவர் Dr. ராஜித சேனாரத்ன அவர்களின் தலைமையிலான குழுவொன்று பலஸ்தீனில் அமைந்துள்ள ஜாமிஅதுல் குத்ஸ் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்தது. இதில் பலஸ்தீனத்துக்கான இலங்கைப் பிரதிநிதி பௌஸான் அன்வரும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

## சகவாழ்வு பேசியதால் அநாதரவாகியுள்ளேன்



வாழ்க்கையில் பாதியை நான் இனங்களுக்கிடையேயான சகவாழ்வு தொடர்பில் பேசியே கழித்திருக்கிறேன். குறிப்பாக முஸ்லிம் சமூகம் அண்மைக் காலங்களில் எதிர்நோக்கிய முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளின் போது நான் முஸ்லிம் சமூகத்துக்காகக் குரல் கொடுத்திருக்கிறேன். இப்போது நான் அநாதரவான நிலையில் இருக்கிறேன் என ஜாதிக பல சேனாவின் பொதுச் செயலாளர் வட்டரக்க விஜித்த ஹிமி தெரிவித்தார். (பக்.13)

## எம்.ஐ.எம். முகைடீனுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கக் கோரிக்கை

(ஏ.எல்.ஆஸாத்)



முஸ்லிம்களின் உரிமை மீறல்கள் தொடர்பில் பல புத்தகங்களையும் ஆவணப்படுத்தல்களையும் மேற்கொண்டுள்ள எம்.ஐ.எம். முகைடீனுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்க தென்கிழக்குப் பல்கலைக்கழகம் முன்வர வேண்டும் என கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எம்.ஐ.எம்.முகைடீன் என்பவர் தொடர்பிலும் அவர் இலங்கை முஸ்லிம்களுக்கு செய்த பணி தொடர்பிலும் எமது அவதானத்தை செலுத்த வேண்டியுள்ளது. இலங்கை முஸ்லிம்கள் தொடர்பில் அவர் எழுதிய புத்தகங்கள் தான் இன்று முஸ்லிம்கள் மீதான உரிமை மீறல்களுக்கான ஆவணங்களாகவும் சாட்சிகளாகவும் உள்ளன.

(பக்.13)

## கொழும்பு நிதி நகர திட்டத்தில் இணையுமாறு இந்தியாவுக்கு சீனா அழைப்பு



இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் இலங்கை திணறிக் கொண்டிருக்கும் தருணத்தில், இலங்கையை அபிவிருத்தி செய்வதில், குறிப்பாக கொழும்பு நிதி நகரத்திட்டத்தில், இணைந்து கொள்ளுமாறு சீனா இந்தியாவைக் கோரியுள்ளதாக பாகிஸ்தானிய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு நிதி நகரத் திட்டத்தில் இலங்கை சீன தரப்புகள் தவிர்ந்த மூன்றாம் தரப்பினரையும் முதலிடுவதற்காக நாங்கள் எதிர்பார்க்கிறோம். இந்தியாவுடன் ஏற்கனவே உள்ள வர்த்தகத் தொடர்புகளை வைத்து இந்தியாவையும் (பக்.13)

## மலையக தமிழர்கள் தனி இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்



இலங்கையில் அரசியல் சாசனத்தில் இந்திய வம்சாவளியினரான மலையக மக்களுக்கு மலையக தமிழர்கள் என்ற இன ரீதியான தனித்துவ அங்கீகாரம் தேவை என மலையக தமிழ் சிவில் அமைப்புகளினால் ஐ.நா. மனித உரிமை ஆணைய சிறுபான்மையினர் உரிமைகள் தொடர்பான பிரதிநிதியிடம் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையின் சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான அறிக்கையாளர் ரீட்டா இஷாக் நாடியுடன் இடம் பெற்ற சந்திப்பின் போது மலையக தமிழ்

(பக்.13)




## பருத்திக்கான முக்கிய மையமாக இந்தியா இலங்கையை மாற்றும்

2016- 2017 வருடங்களில் இந்தியாவின் தென் மாநிலத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலைகள் இலங்கையிலிருந்து அதிகமான பருத்தியை (கொட்டன்) இறக்குமதி செய்வதன் மூலம், இலங்கை பருத்திக்கான முக்கிய மையமாக (Hub) மாற்றப்படவிருக்கிறது. சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தைத் தாண்டி இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.


(பக்.13)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்.கி. பல்கலைக்கழகத்துக்கு ஜும்மா பள்ளிவாயல்





புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீலங்கா ஹிரா பௌண்டேஷன் தலைவருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் முயற்சியில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஜும்மா பள்ளிவாயல் 14.10.2016 வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையுடன் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் எம்.எம்.எம்.நாஜிம், ஹிரா பௌண்டேஷன் செயலாளர் மும்தாஸ் மதனி, மௌலவி அலியார் பலாஹி, மௌலவி அமீன் பலாஹி, முன்னாள் தவிசாளர் அஸ்பர் ஜே.பி. உட்பட பலரும் கலந்து கொண்டதோடு, ஜும்மா உரையினை தென்கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர் அஷ்ஷைக் அலியார் றியாதி நிகழ்த்தியிருந்தார்.

## கல்வித்துறையின் அபிவிருத்தி ஆசிரியர் பணியிலேயே தங்கியுள்ளது

ஒரு பாடசாலையின் முன்னேற்றம் அதன் அதிபர், ஆசிரியர்களின் சீரான வழிகாட்டலிலேயே தங்கியுள்ளது. அரசியல்வாதிகளால் பாடசாலைக்குத் தேவையான வளங்களை மட்டுமே பெற்றுக்கொடுக்க முடியும். வருங்கால வளமான, ஆளுமையுள்ள மாணவ சமுதாயமொன்றின் உருவாக்கத்துக்கு முன்னோடியாக ஆசிரியர்களே திகழ்கின்றார்கள். இவ்வாசிரியர் பணியினை பொறுப்புணர்வுடன் மேற்கொள்ள வேண்டும் என மேல் மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எம். சகாவுல்லாஹ் தெரிவித்தார். கடந்த ஒக்டோபர் பதினோராம் திகதி நீர்கொழும்பு அல் பலாஹ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதன் அதிபர் ஹுஸ்னி ஷரப் தலைமையில் நடைபெற்ற சிறுவர் தினம், ஆசிரியர் தினம், மாணவ தலைவர் சின்னம் சூட்டுதல் ஆகிய நிகழ்வுகளின் ஒருங்கிணைந்த முப்பெரும் விழாவிலேயே மேற்கூறப்பட்ட கருத்தை மேல் மாகாண சபை உறுப்பினர் தெரிவித்தார்.







பிரதம அதிதியாக மேல் மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எம். சகவுல்லாஹ்வும், விசேட அதிதியாக அல் பலாஹ்வின் பழைய மாணவரும், தற்போதைய புறக்கோட்டை வர்த்தக சங்கத்தின் தலைவருமான, பிரபல வர்த்தக தனவந்தர் அல்ஹாஜ் எம்.வை.எம். நஜிமுடீன் ஆசிரியர் அவர்களும், கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியரும், அல் ஹிமா வங்கியின் போருதொட்ட கிளையின் நிறைவேற்று அதிகாரியுமான அல்ஹாஜ். சலீம் ஆசிரியர் அவர்களும் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர்.

பாடசாலை அதிபர், ஆசிரியர் குழாம், மாணவர்கள் உட்பட பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பாடசாலை பழைய மாணவர்கள் மற்றும் மாணவிகள் சங்கங்களின் ஒத்துழைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இம்முப்பெரும் விழா இனிதே சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

## தெல்தோட்டையில் மாணவர்கள் பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்

கண்டி கல்வி வலயத்திற்கு உட்பட்ட தெல்தோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரியில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி 17.10.2016 திங்கட்கிழமை ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றது.

கடந்த 3 வருடங்களுக்கு மேலாக இப்பாடசாலையில் கணிதம், விஞ்ஞானம், கணக்கியல், வணிகக் கல்வி போன்ற பாடங்களுக்கு வெற்றிடம் நிலவி வருகின்றது. அத்துடன் 15 வருடங்களுக்கு மேலாக சிங்களம் மற்றும் சித்திர பாடங்களுக்கு ஆசிரியர் நியமிக்கப்படவில்லை. இதனைக் கண்டித்து இவ்வார்ப் பாட்டம் இடம்பெற்றது.

இப்பாடசாலையில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

காலை 7.30 மணியளவில் பாடசாலை ஆரம்பிக்கப்படும் போது மாணவர்கள் பாடசாலைக்குள் செல்லாது நுழை வாயிலுக்கு வெளியில் இருந்து ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தனர். இதனையடுத்து பெற்றோர்களும் பழைய மாணவர்களும் பாடசாலைக் கருகே வைத்தியசாலை வீதியில் நின்று பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொண்டனர்.

மதியம் ஒன்றரை மணி வரை 6 மணித்தியாலங்கள் தொடர்ந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அவர்கள் 'கல்வி அமைச்சரே, மத்திய மாகாண



முதலமைச்சரே எமக்கு ஏன் இந்த பாரபட்சம்' 'வேண்டும் வேண்டும் கணிதம், விஞ்ஞான ஆசிரியர்கள் வேண்டும்', 'கல்வியற் கல்லூரி ஆசிரியர் நியமனத் தின்போது எமது பாடசாலைக்கு ஆசிரியர்கள் நியமிக்காதது ஏன்', '3 வருடங்களாக விஞ்ஞான கணித ஆசிரியர்கள் எமக்கு இல்லையா?', 'எமது கல்வியில் அக்கறை செலுத்தி ஆசிரியர்களை நியமிப்பீர்களா?' உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய சுலோகங்களை ஏந்தியிருந்தனர். ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற வேளை, மத்திய மாகாண சபை உறுப்பினரும் பாத்த ஹேவாஹெட்ட தேர்தல் தொகுதி ஐ.தே.க. அமைப்பாளருமான சாந்தினி கோங்ஹகே அவ்விடத்திற்கு வந்து மாணவர்களினதும் பெற்றோரினதும் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

## அரசியலமைப்பு மாற்றம் மற்றும் புதிய தேர்தல் முறை குறித்து மக்கள் தொடர் விழிப்புணர்வு

தற்போது நாட்டில் அரசியல் முக்கியத்துவம் பெற்ற விடயமாக இருப்பது அரசியலமைப்பு மாற்றமும் தேர்தல் சீர்திருத்தமும் ஆகும். இது குறித்து அரசியற் கட்சிகளும் அரசியல் ஆய்வாளர்களும் பல்வேறு வகையான கருத்துக்களை முன்வைத்து வரும் நிலையில் மக்கள் இவ்விடயம் குறித்து ஆழமாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர்.

ஆனால் தேசிய முக்கியத்துவமிக்க இவ்விடயம் குறித்து போதியளவு விழிப்புணர்வோ விளக்கங்களோ பொது மக்களுக்கு கிடைக்காமல் இருப்பது துரதிஷ்டமாகும் அத்துடன் வெளிப்படைத் தன்மையில்லாமல் மேற் கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கைகள் நல்லாட்சி விழுமியங்களுக்கும் முரணானதாகும்.

எனவே மேற்படி



விடயங்களைக் கருத்திற் கொண்டு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அரசியலமைப்பு மாற்றம் மற்றும் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் தொடராக நிகழ்ச்சிகளை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு இலவச அங்கத்துவம் வழங்கும் நிகழ்வு





தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சம்மாந்துறை அமீர் அலி பொது நூலகத்தில் 100 பாடசாலை மாணவர்களுக்கு இலவச அங்கத்துவம் வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவி ஒருவருக்கு அங்கத்துவப் படிவம் வழங்கப்படுவதையும், நூலக நூல் பட்டியல் கணனி தரவுத் தளம் சம்மாந்துறை பிரதேச சபை செயலாளரும், விஷேட ஆணையாளருமான ஏ.ஏ.சலீம் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படுவதையும், கலந்து கொண்ட அதிகாரிகளையும் படத்தில் காணலாம். **(பழுலுல்லாஹ் பர்ஹான்)**

## காத்தான்குடி மீடியா போரத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுக்கு அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு

**(மிப்றாஹ் முஸ்தபா)**

கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக சிறப்பான முறையில் இயங்கி வருகின்ற காத்தான்குடி மீடியா போரம் அதன் அங்கத்தவர்களுக்கு டீ சேர்ட் மற்றும் மடிக் கனணிப் பைகளை வழங்கும் நிகழ்வு 21-10-2016 வெள்ளிக் கிழமை மாலை 4 மணிக்கு காத்தான்குடி விம்பிள்டன் சர்வதேச கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இளம் கொடையாளர் தஸ்லீம் ஹாஜியார் காத்தான்குடி ஊடகவியலாளர்களுக்கு மேற்படி அன்பளிப்புக்களை வழங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

காத்தான்குடி மீடியா போரத்தின் தலைவர் மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா பலாஹியின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர், காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் உட்பட ஊர்ப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளதாக மீடியா போரத்தின் செயலாளர் எம்.எச்.எம் அன்வர் தெரிவித்தார்.

## ஸாவியா மகளிர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா - 2016





காத்தான்குடி ஸாவியா மகளிர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா - 2016 அண்மையில் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் வித்தியாலய அதிபர் மௌலவிய்யா ஐ.என்.அப்துல் சலாம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் 2015 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ சித்தி பெற்ற மாணவி யூ.பேகம் ஹனானா, தற்போது பல்கலைக்கழகத்திற்கு வைத்தியத் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட இப் பாடசாலையின் பழைய மாணவி எஸ்.பாத்திமா சஹினா ஆகியோர் பெற்றோர்கள் சகிதம் மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வினால் நினைவுச் சின்னமும், பரிசும் வழங்கி கௌரவிக்கப்படுவதை படங்களில் காணலாம். **(பழுலுல்லாஹ் பர்ஹான்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஸ்ஜிதுல் அக்ஸா மீதான இஸ்ரேல் அட்டூழியங்கள் தொடர்பான யுனெஸ்கோ வாக்கெடுப்பின் போது இலங்கை மாயம்

## இலங்கை முஸ்லிம்களுக்கும் உலக முஸ்லிம்களுக்கும் இழைக்கப்பட்ட அவமானம்

• லத்தீப் பாரூக்

ஒரு காலத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட பலஸ்தீன மக்களின் உரிமைக்காக சர்வதேச அரங்குகளில் ஓங்கி ஒலித்த குரல் இலங்கையின் குரல். ஆனால் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பின் கீழுள்ள ஜெரூஸலம் நகரில் அல் குத்ஸ் வளாகத்துக்குள் உள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவின் ஹரம் அல் ஷரீப் பகுதியில் இஸ்ரேல் இழைத்து வரும் கொடுமைகளைக் கண்டிக்கும் வகையில் 2016 அக்டோபர் 13 இல் யுனெஸ்கோ அமர்வில் ஒரு தீர்மானம் முன்வைக்கப்பட்டபோது இலங்கையின் குரல் மௌனித்துப் போய்விட்டது.

மிகவும் கௌரவமான முறையில் நடுநிலையான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த இலங்கையின் இந்த முடிவு அதிர்ச்சியளிப்பதாகும். இது இலங்கை முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி உலகம் முழுவதும் வாழும் ஒட்டுமொத்த 1.5 பில்லியன் முஸ்லிம்களுக்கும் இழைக்கப்பட்ட அவமானமாகும். இலங்கையில் யார் ஆட்சியில் இருந்த போதிலும் சரி இந்த நாட்டு மக்களுக்கு ஒரு பிரச்சினை என்று வருகின்றபோது உலக முஸ்லிம் சமுதாயம் தொடர்ந்து நேசக்கரம் நீட்டி வந்துள்ளது. இருந்தாலும் கூட துரதிஷ்டவசமாக இந்த நாட்டின் பிரதான ஊடகங்கள் இந்த விடயத்தை அவ்வளவு தூரம் வெளிப்படுத்தியதில்லை.

இந்த வாக்கெடுப்பின்போது இலங்கை கலந்து கொள்ளாமையானது நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ள, கண்மூடித்தனமாக அமெரிக்காவைப் பின்பற்றுகின்ற நல்லாட்சி அரசின் குறுகிய நோக்கு கொண்ட வெளிநாட்டு கொள்கையின் வங்குரோத்து நிலையையே பிரதிபலிக்கின்றது. இதன் மூலம் முஸ்லிம் உலகத்தின் மீது யுத்தக் குற்றம் புரிந்து வரும் ஏனைய அமெரிக்கா தலைமையிலான ஐரோப்பிய நாடுகள் மற்றும் இஸ்ரேலின் வரிசையில் இலங்கையும் இணைந்து கொண்டுள்ளது.

மேலும் அமெரிக்காவையும் இஸ்ரேலையும் சந்தோஷப்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசு இந்த நாட்டு முஸ்லிம்கள் இந்த ஆட்சியின் உருவாக்கத்துக்கு வழங்கிய பங்களிப்பை தட்டிக் கழித்துள்ளது. சுமார் 24 தேர்தல்களில் அடுத்தடுத்து தோல்விகளைச் சந்தித்த ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி பீடம் ஏற முஸ்லிம்கள் வழங்கிய பங்களிப்பு மகத்தானதாகும்.



யுனெஸ்கோ (ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பு) அதன் தீர்மானத்தில் இஸ்ரேலின் எல்லை மீறிய ஆக்கிரமிப்பு அதன் சட்டவிரோத செயற்பாடுகள் என்பன வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்பு சக்தியான இஸ்ரேல் குறிப்பிட்ட இடத்தின் வரலாற்று பெருமைகளையும் அந்தஸ்த்தையும் மதித்து அது மேற்கொள்ளும் சட்டவிரோத நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் வலதுசாரி தீவிரவாதிகளாலும் சீருடை அணிந்த படையினராலும் ஹரம் அல் ஷரீப் பகுதி தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாவதை இந்தத் தீர்மானம் வன்மையாகக் கண்டித்துள்ளது. மலை ஆலயம் மற்றும் மேற்கு மதில் பகுதிகளின் மீதான யூத பிணைப்பை இந்தத் தீர்மானம் நிராகரித்துள்ளது.

ஜெரூஸலம் நகரின் புராதன பகுதிகளுக்கு அவற்றின் பண்டைய முஸ்லிம் பெயர்களே இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆத்திரமூட்டும் துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகளில் இஸ்ரேல் ஈடுபட்டு இந்தப் பகுதிகளின் ஒருமைப்பாட்டுக்கும் புனிதத் தன்மைக்கும் களங்கம் ஏற்படுத்துவதாக குறிப்பிட்டு இஸ்ரேலின் செயற்பாடுகள் மிக வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தீர்மானத்தின் ஆரம்பத்திலேயே ஏக தெய்வக் கோட்பாடுடைய மூன்று சமயங்களுக்கும் பழைய ஜெரூஸலம் நகரின் முக்கியத்துவமும் அவற்றின் சுவர்களின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதன் பிறகு இஸ்ரேல் மீதான கண்டனங்கள் தொடர்கின்றன. அதன் பிறகு ஒவ்வொரு இடத்திலும் இஸ்ரேல் ஒரு ஆக்கிரமிப்புச் சக்தியாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக அது இழைத்து வரும் தவறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இஸ்ரேலின் வலது சாரி தீவிரவாதிகளால் அல் அக்ஸா, அல்ஹரம் மீதான தொடர் தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளன. மலை ஆலய வளாகம் மற்றும் அதற்குள் வரும் பள்ளிவாசல் என்பனவற்றை குறிக்க முஸ்லிம்கள் பயன்படுத்தும் பெயர்களே இவையாகும்.

மேற்கு பகுதி வோல் பிளாஸா பிரதேசத்தில் இஸ்ரேல் மேற்கொள்ளும் பணிகளும் இந்தத் தீர்மானத்தில் கண்டிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொல் அல் புறாக் பிளாஸா என்பதாகும். இது முஸ்லிம்களால் பயன்படுத்தப்படும் சொல் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் மக்காவின் மஸ்ஜிதுல் ஹரம் மதீனாவின் மஸ்ஜிதுன் நபவி என்பனவற்றுக்குப் பின் மூன்றாவது புனித பிரதேசமாக கருதப்படும் இடமே இந்த மஸ்ஜிதுல் அக்ஸாவாகும். எனவே இது உலக முஸ்லிம்களின் உள்ளங்களுக்கு மிகவும் நெருக்கமான பிரதேசமாகும்.

1967 ஜூனில் இஸ்ரேல் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தின் மூலம் ஜெரூஸலத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து வன்முறைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. அல் அக்ஸாவுக்கு தொழுவதற்காக வரும் மக்கள் மீதும் இந்த வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

'நிராயுதபாணிகளான பலஸ்தீனர்கள் தொடர்ச்சியாக தாக்கப்பட்டு வருகின்றனர். ஜெரூஸலம் பள்ளிவாசலுக்கு வருகை தரும் மக்கள் மீதான அடக்குமுறைகள் தொடருகின்றன. இந்த வன்முறைகளை கட்டவிழ்த்து விடும் யூத தீவிரவாத குழுக்களுக்கு இஸ்ரேல் பக்கபலமாக உள்ளது. அல் அக்ஸா பள்ளிவாசலைத் தகர்த்து விட்டு அந்த இடத்தில் மூன்றாவது ஆலயம் ஒன்றை நிறுவுவதே இவர்களின் நோக்கம்' என்று மஆம் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

கைக்குண்டுகள், கண்ணீர் புகை குண்டுகள், இறப்பர் தோட்டாக்கள், ஜீவ தோட்டாக்கள் என சகல விதமான ஆயுதங்களும் இறை வழிபாட்டுக்காக வரும் பலஸ்தீன மக்கள் மீது பாவிக்கப்படுகின்றன. இவை அன்றாட நிகழ்வுகளும் ஆகிவிட்டன. தாக்குதல் நடத்தும் தீவிரவாத சக்திகளுக்கு ஜெரூஸலம் மாநகர சபையும் அரசாங்க அமைச்சுக்களும் உத்தியோகப்பூர்வமாக முழு ஆதரவையும் வழங்கி வருகின்றன.

பலஸ்தீன தொண்டர்களுக்கு இந்தப் பிரதேசத்துக்குள் பிரவேசிக்க தொடர்ச்சியான தடைகளை விதித்து இஸ்ரேல் மிகவும் தந்திரமாக தீவிரவாத குழுக்களுக்கு ஆதரவளித்து வருகின்றது.

இஸ்ரேல் இந்த வளாகத்தை யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் என பௌதிக ரீதியாக இரண்டாகப் பிளவுபடுத்தலாம் என்பதே தற்போது எதிர்நோக்கப்பட்டுள்ள உடனடி அச்சமாகும். 1994 இல் இந்த சூத்திரத்தை ஹெப்ரூன் நகரில் உள்ள இப்றாஹிமி பள்ளி வாசலில் பிரயோகித்தது. அமெரிக்காவில் பிறந்த யூத குடியேற்றவாசி ஒருவர் இந்தப் பள்ளிவாசலில் புனித றமழான் மாதத்தில் தொழுகையில் ஈடுபட்டிருந்த 29 பலஸ்தீனர்களை ஈவு இரக்கமின்றி கொன்று குவித்ததை அடுத்து இஸ்ரேல் அந்தப் பள்ளிவாசலை இரண்டாகப் பிரித்தது.

இவ்வாறான பின்னணியில் யுனெஸ்கோ தீர்மானம் நீதியை நிலைநாட்டும் வகையில் அமைந்துள்ளது. இஸ்ரேலிய ஆக்கிமிப்பு படைகளின் கொடூரங்களையும் சட்டவிரோத செயற்பாடுகளையும் வன்மையாகக் கண்டிக்கும் வகையில் இந்தத் தீர்மானம் அமைந்துள்ளது.

இவ்வாறான அநீதியான பின்னணியில் இஸ்ரேலுக்கு எதிரான (பக்.14)

---

**லண்டனை தளமாகக் கொண்ட துப்பறியும் ஊடகவியல் பணியகமொன்று (Bureau of Investigative Journalism), 'போலி செய்திகளும் பொய்யான டிவிடி (DVD) க்களும்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள திடுக்கிடும் தகவல்கள்.**

# ஈராக் மீதான அமெரிக்க யுத்தம்:

## மனித குலத்திற்கு எதிரான திட்டமிடப்பட்ட போர்

• எம்.எம். ஸுஹைர்
(ஜனாதிபதி சட்டத்தரணி)

அல்காயிதா தலைவர்கள் வீடியோக்களில் தோன்றி, அமெரிக்கக் கூட்டணி மத்திய கிழக்கு நாடுகளை ஆக்கிரமிப்பதற்கு பதிலடியாக, மேற்கு நாடுகளின் தலைநகரங்களில் தாக்குதல் மேற்கொள்வதாக எச்சரித்த பயங்கரமான வீடியோக்கள் உங்களுக்கு நினைவிருக்கின்றனவா? வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் தலைகளை வெட்டுவதற்காக, கையில் கத்தி ஏந்திய வண்ணம் காட்சி தந்த ஐ.எஸ்.ஐ.எஸ் கொலையாளிகளின் புகைப்படங்கள் நினைவிருக்கின்றனவா?

இதுபோன்ற வெறுக்கத்தக்க வீடியோக்களும், புகைப்படங்களும் உலகெங்கும் பரவியுள்ளதை நீங்கள் பல தடவைகள் பார்த்திருப்பீர்கள். ஆனால், உண்மையில் கொலை செய்யப்படும் காட்சிகளைக் கொண்ட வீடியோக்களை நான் இன்னும் பார்த்ததில்லை. கொலை செய்யப்பட்டதன் பின்னர் எடுக்கப்பட்ட வீடியோக்களை கூட நான் பார்த்ததில்லை. கொலை செய்வதற்கு முன்னர் மாத்திரம் வீடியோ எடுப்பதற்கோ, புகைப்படம் எடுப்பதற்கோ அவர்கள் எவ்வாறு அனுமதிக்கப்பட்டனர்?

ஐ.எஸ்.ஐ.எஸ்.இன் மிருகத்தனங்கள் வெளிக்காட்டப்பட வேண்டுமாயின், கொலை செய்யப்படும் காட்சிகள் அல்லது கொலை செய்யப்பட்டதன் பின்னர் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தான் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்று ஒருவர் சிந்திக்கலாம். உண்மையில் கொலை செய்யப்படவில்லை என்பது தான் காரணமா?

ஈராக் ஆக்கிரமிக்கப்பட்டபோது, ஈராக்கில் அமைக்கப்பட்ட கேம்ப் விக்டரியில் (Camp Victory), அமெரிக்க பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து பணிபுரிந்த ஒரு பிரித்தானிய கம்பனி, பொய்யான செய்திகளையும், பொய்யான டிவிடிக்களையும் (DVD) தயாரித்து வந்துள்ளதாக, பிரித்தானியாவை தளமாகக் கொண்ட பிரபல ஊடகவியல் பணியகமொன்று தெரிவிக்கின்றது. எவ்வாறாயினும், இந்த பெருமளவிலான போலி செய்திகளின் உள்ளடக்கம் இன்னும் தெளிவற்றதாகவே உள்ளது.

லண்டனை தளமாகக் கொண்ட துப்பறியும் ஊடகவியல் பணியகமொன்று (Bureau of Investigative Journalism), 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி இந்த அறிக்கையை வெளியிட்டிருந்தது. அவ்வறிக்கையில், அமெரிக்கா தலைமையில் ஈராக்கில் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தின்போது, அமெரிக்காவின் பென்டகன், ஒரு பிரித்தானிய கம்பனியிடம், (அ) ஈராக் குறித்த போலி செய்திகள், (ஆ) அல்காயிதாவின் போலி பிரசார டிவிடிக்கள் (DVD), (இ) அரபு செய்தி நிறுவனங்களின் பாணியில் உருவாக்கப்பட்ட செய்திகள் `என்பவற்றை தயாரிப்பதற்காக ஒப்பந்தங்கள் மேற்கொண்டிருந்ததாகச் சுட்டிக்காட்டப்பட்டு அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

லண்டனைத் தளமாகக் கொண்ட, இந்த இலாப நோக்கற்ற துப்பறியும் ஊடகவியல் பணியகம், 'போலி செய்திகளும் பொய்யான டிவிடிகளும்' என்று தலைப்பிட்டு வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில், அமெரிக்காவின் பென்டகன் சர்ச்சைக்குரிய பிரித்தானிய கம்பனிக்கு, ஈராக்கில் மிக இரகசியமான பிரசார திட்டங்களுக்காக, 540 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது. இங்கு பிரசாரம் என்ற சொல் மூலம், தவறாக வழிநடத்தும் செய்திகளும், உண்மையற்ற தகவல்கள் என்று கருதப்பட வேண்டும்.

'ஈராக்கிய கிளர்ச்சி கடும் சீற்றம் கொண்டிருந்த வேளையில், இந்த பிரித்தானிய நிறுவனத்தின் பணியாட்கள், அமெரிக்க இராணுவத்தின் முக்கிய புள்ளிகளுடன் ஈராக்கின் கேம்ப் விக்டரி (Camp Victory) தலைமையகத்தில் பணியாற்றினர்.' பென்டகனுடன் இணைந்து செயற்பட்டுள்ள இந்த நிறுவனத்தின் பெயர் Bell Pottinger என்பதாகும். அதன் தலைவர் லோர்ட் டிம் பெல் (Lord Tim Bell) என்பவரின் தகவல்களின் படி, இந்நிறுவனம் பென்டகன், சீ.ஐ.ஏ (CIA) மற்றும் தேசிய பாதுகாப்பு கவுன்ஸில் என்பவற்றுடன் இணைந்து செயற்பட்டுள்ளது. துப்பறியும் ஊடகவியல் பணியகத்தின் அறிக்கை வெளிவருவதற்கு முன்னர், கடந்த ஆகஸ்ட் 26 ஆம் திகதி, இவர் தனது தலைமைப் பதவியிலிருந்து நீங்கியுள்ளார்.

இவ்விவகாரம் குறித்து, துப்பறியும் ஊடகவியல் நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றிய சண்டே டைம்ஸ் (UK Sunday Times) என இந்தியாவில் பிரசுரமாகும் பத்திரிகைக்கு கருத்து தெரிவித்துள்ள லோர்ட் டிம் பெல், பல்வேறு உடன்படிக்கைகளால் மூடப்பட்ட, இரகசிய இராணுவ நடவடிக்கைகளுக்காக, தனது நிறுவனம் பணியாற்றியுள்ளதாக உறுதிப்படுத்தியுள்ளார்.



'2007 மே மாதம் முதல் 2011 டிசம்பர் வரையிலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்களின்படி, தகவல் நடவடிக்கைகள் மற்றும் உளவியல் நடவடிக்கைகளுக்காக, பென்டகன் Bell Pottinger நிறுவனத்துக்கு 540 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கொடுத்துள்ளதாகவும், 2006 ஆம் ஆண்டில், இதேபோன்று மேலதிகமாக 120 மில்லியன் அமெரிக்க டொலருக்கான ஒப்பந்தமும் அமுலில் இருந்துள்ளது என்று துப்பறியும் ஊடகவியல் பணியகம் அடையாளம் கண்டுள்ளது' என்று துப்பறியும் ஊடகவியல் பணியகத்தின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. இப்பணியகம் அடையாளம் கண்டுள்ள பணப் பரிவர்த்தனை 660 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். (80 பில்லியன் இலங்கை ரூபா.)

அமெரிக்க இராணுவத்தின் ஒப்பந்தக் கணிப்பீடுகள், பாதுகாப்பு திணைக்களத்தின் மத்திய கொள்வனவு பரிவர்த்தனைப் பதிவுகள், Bell Pottinger நிறுவனத்தின் பதிவுகள், இராணுவ பிரசாரம் குறித்த விசேட வெளியீடுகள் என்பவற்றின் மூலம் இத்தகவல்கள் திரட்டப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக துப்பறியும் ஊடகவியல் பணியகம் தெரிவித்துள்ளது. அத்தோடு, ஈராக்கில் தகவல் நடவடிக்கைகளில் செயற்பட்ட முன்னாள் அதிகாரிகள், ஒப்பந்தக்காரர்கள் 6 பேரை நேர்கண்டதாகவும் துப்பறியும் ஊடகவியல் பணியகம் தெரிவித்துள்ளது.

இப்பணியகம் மேலும் இவ்வாறு குறிப்பிடுகின்றது. 'அமெரிக்க இராணுவத்தின் தகவல் செயற்பாடுகளுக்கான செயலணியின் Information Operations Task Force (IOTF) கீழ், Bell Pottinger நிறுவனம், கூட்டணி படைகளை நேரடியாக மூலாதாரமாகக் கொண்டும், சிலபோது அவ்வாறன்றியும் சில விடயங்களை தயாரித்து, தமக்காக செயற்பட்டதாக, பென்டகன் உறுதிப்படுத்தியுள்ளது. தகவல் நடவடிக்கைகளுக்கான செயலணியின் அனைத்து வெளியீடுகளும் உண்மையானவை என்று அவர்கள் வலியுறுத்தினர்.' இப்பணியகத்தின் ஆராய்வின்படி, அவர்கள் சொல்லும் 'உண்மைத் தன்மை' உண்மைக்கு புறம்பானதாக உள்ளது.

துப்பறியும் ஊடகவியல் பணியகத்தின் தகவல்களின்படி, Bell Pottinger நிறுவனத்தின் வெளியீடுகள், ஈராக்கில் கூட்டணி படைகளின் அப்போதைய தளபதியாக இருந்த ஜெனரல் டேவிட் பெட்ரஸ் (David Petraeus) என்பவரின் ஒப்புதலின் பேரிலேயே வெளிக்கொணரப்பட்டுள்ளது. இவர் 2011 ஆம் ஆண்டு, மீளழைக்கப்பட்டு சீ.ஐ.ஏவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். பின்னர், ஓர் ஊடகவியலாளருடனான சர்ச்சைக்குரிய நடத்தை காரணமாக இராஜினாமா செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. டேவிட் பெட்ரஸ் ஒப்புதல் வழங்காத விடயங்கள், வெள்ளை மாளிகையின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

2013 இல் ஈராக்குக்கு எதிராக சட்டபூர்வமற்ற, நியாயமற்ற யுத்தத்தை ஆரம்பித்த அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் அனுமதி, இந்த போலி வீடியோக்களுக்கும், போலி செய்திகளுக்கும் கிடைக்கப் பெற்றுள்ளன என்பது அம்பலமாகின்றது. எனினும், இந்த அறிக்கை அவ்வாறு சுட்டிக்காட்டவில்லை.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## பயங்கரவாத முறியடிப்புச் சட்டம் (CTA)

உலகில் பயங்கரவாதத்தை ஒழித்த ஒரே நாடு என மார்தட்டிக் கொள்கிறது நாடு. தனது சொந்தக் குடிமக்களுக்கு எதிரான போராட்டத்தை பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தமாக முப்பது வருட காலமாக நடத்திச் சென்று, அதிலே வெற்றிபெற்று அது சாதனை படைத்திருக்கிறது. பயங்கர வாதத்தை வெல்லவென இலங்கை மக்கள் ஏறக்குறைய 30 ஆண்டுகள் அவசர கால நிலைமையின் கீழ் ஆளப்பட்டனர்.

2011 ஆம் ஆண்டில் அவசர கால நிலை நீக்கப்பட்டு பயங்கரவாத தடுப்புச் சட்டம் நாட்டிலே அமுல்படுத்தப் பட்டது. இந்தச் சட்டத்தினூடாக நீதிமன்றத்தின் அனுமதி இன்றியே வீடுகளில் சோதனை நடத்தும் அதிகாரத்தினை பொலிசாரும் இராணுவத்தினரும் பெற்றனர். நீதிமன்ற உத்தரவின்றியே யாரையும் நீண்டகாலம் தடுப்புக் காவலில் வைப்பதற்கு அவர்கள் அதிகாரம் பெற்றனர். சந்தேகமான வர்களாக தாம் கருதும் எவரையும் விசாரிக்கவும் கைது செய்யவும் தடுத்து வைக்கவும் ஆட்சியிலுள்ளவர்களுக்கு இந்தச் சட்டம் மூலம் முடியுமாகவிருந்தது.

முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளால் நாட்டையே கொந்தளிக்கச் செய்தவர்களை சுதந்திரமாகச் செயற்பட விட்டு விட்டு, தனக்கு வந்த டுவிட்டர் செய்தியொன்றை பரிமாறியதன் மூலம் கலவரத்தைத் தூண்ட முயற்சித்தார் என்ற பெயரில் அஸாத் சாலியை கைதுசெய்ய வைத்ததும் இந்தச் சட்டம்தான்.

தற்பொழுது இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) போதாதென பயங்கரவாத முறியடிப்புச் சட்டத்தை (CTA) கொண்டுவருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யிருக்கிறது. இந்தச் சட்டம் இலங்கையின் மனித உரிமைக் கடப்பாடுகளுடன் முற்றாகப் பொருந்திப் போகும் எனவும், பயங்கரவாதத்தை முறியடிப்பதற்குப் போதுமான முன்னேற்பாடுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் பிரதமரின் முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் தனது வடிவை மாற்றியிருப்பதனாலும், உள்நாட்டுப் பயங்கரவாத்திலிருந்து அது உலகம் தழுவிய பயங்கரவாதமாக வளர்ந்திருப்பதனாலும் இந்தச் சட்டம் தேவைப்படுவதாக ஊடகப் பிரதி அமைச்சர் கருணாரத்ன பரனவிதாரன தெரிவித்திருக்கிறார்.

பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கான உலகளாவிய வியூகம் (Global Counter Terrorism Strategy) ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகரிக்கப்பட்டு செப்டம்பர் 08 ஆம் திகதியுடன் 10 வருடம் பூர்த்தியாகிறது. பயங்கரவாதத்துக்கு எதிராக தேசிய ரீதியாகவும் ஏனைய நாடுகளுடன் இணைந்தும் நடவடிக்கை எடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப் புரிமை நாடுகள் இதன்போது ஒத்துக் கொண்டிருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் கடந்த கால செயற்பாடுகளைப் பார்க்கின்றபோது பயங்கரவாதம் என்பதற்கான அதனது வரைவிலக்கணம் நீதியானதாகத் தெரியவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களையே புறந்தள்ளி விட்டு அடுத்த நாடுகள் மீது அத்துமீறுகின்ற, அப்பாவி மக்களை வகைதொகையின்றிக் கொன்று குவிக்கின்ற வல்லரச சக்தி களை இந்தச் சபை கண்டுகொள்வதில்லை. மாறாக தமது நாட்டின் விடுதலைக்காக, நாட்டிலே ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக போராட்டம் நடத்துகின்றவர்களே ஐ.நா.வின் அகராதியில் பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

ஐ.நா.வின் பயங்கரவாத முறியடிப்பு வியூகங்கள் இதே பொருள்கோடலுடன் தான் இலங்கையிலும் பிரயோகிக்கப் படுமா என்பதிலே தான் நாட்டு மக்களின் அச்சம் கவிழ்ந்தி ருக்கிறது. இலங்கைப் புலனாய்வுப் பிரிவின் அண்மைக்கால நடவடிக்கைகளின்படி சர்வதேச பயங்கரவாதமான ஐ.எஸ். அமைப்பு இலங்கையில் ஊடுருவாத வண்ணம் கவனமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். ஆனால் மியன்மாரில் பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விட்ட, டைம்ஸ் சஞ்சிகையினால் பௌத்தப் பயங்கரவாதம் என வர்ணிக்கப்பட்ட அசின் விராது தேரரின் 969 அமைப்பு இலங்கையில் கால் பதித்ததை இவர்கள் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். குஜராத்தில் படுகொலையில் ஈடுபட்ட சிவ சேனா அமைப்பும் கூட இலங்கையில் தமது அமைப்பினை ஆரம்பித்திருப்பதாக பத்திரிகைகள் தெரிவிக்கின்ற செய்திகள் தொடர்பிலும் யாரும் கண்டுகொள்ளவில்லை.

நாடு கடந்து வந்து செயற்படுகின்ற இந்தப் பயங்கரவாத அமைப்புக்களும் பயங்கரவாத முறியடிப்பு வட்டத்துக்குள்ளால் உள்ளடக்கப்படாமல் விடப்படுமானால், பயங்கரவாதம் என்பதற்கு மேற்குலகம் கொடுக்கின்ற அர்த்தத்திலேயே இலங்கையும் செயற்படும் என்று நாட்டிலே நிலவுகின்ற அச்சம் உண்மைப்படுத்தப்படும்.

இந்த அச்சத்தை நீக்கும் வகையில் அரசாங்கம் உத்தர வாதம் வழங்காவிட்டால், உள்நாட்டிலே தமக்கு வேண்டாத வர்களை போட்டுத் தள்ளுகின்ற PTA சட்டத்துக்குப் பதிலாக, வெளிநாட்டுச் சக்திகளுக்கு வேண்டப்படாதவர்களை போட்டுத் தள்ளுகின்ற சட்டமாகவே CTA அமையும் என்று தான் அர்த்தம் கொள்ள வேண்டியிருக்கும்.

# தேசிய ஒற்றுமை கனவாகுமா?



• திஸரணீ குணசேகர

இலங்கையில் ஈழப் போராட்டம் நடை பெற்று வந்த முப்பது வருட காலப்பகுதியில் சீ.வீ. விக்னேஷ்வரன் நீதிமன்ற சேவையில் பணியாற்றி வந்தார். மாவட்ட நீதிபதி பதவி முதல் உயர் நீதிமன்ற நீதியரசர் பதவி வரை யிலான நீண்ட பயணத்தில் அவர் தீவிரவாத கொள்கையை பின்பற்றியிருக்கவில்லை. தனது பதவிக்குப் பொருந்தாத எந்தவொரு செயலிலும் ஈடுபட்டிருக்கவுமில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வட மாகாண முதலமைச்சர் பதவி வேட்பாளராக தெரிவு செய்த விக்னேஷ்வரன், 2013 இல் நடை பெற்ற தேர்தலில் அமோக வெற்றி பெற்றார். மூன்று தசாப்த கால யுத்தத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டு, மிகவும் நிர்க்கதியான நிலை யிலுள்ள மக்கள் வாழும் வடக்கின் அடிப் படை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விக் னேஷ்வரன் அவ்வளவு கரிசனை செலுத்துவ தில்லை என்பதும் அவரது முக்கிய நோக்கம் தமிழ் மக்களின் புதிய தலைவராக மேலெ ழுவது என்பதும் தற்பொழுது நிரூபணமாகி யுள்ளது.

அக்குறிக்கோளை நிறைவேற்றிக்கொள் ளும் நோக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப் பினை சிதைத்து தனது தலைமைத்துவத்தின் கீழான கட்சியொன்றை உருவாக்குவதற்கு அவர் தயாராகி வருவது விளங்குகிறது. கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 'எழுக தமிழ்' (Tamil Arise) பேரணி அத்திட்டத்தின் துவக்க கட்ட நடவடிக்கை என குறிப்பிடலாம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் விக் னேஷ்வரனுக்குமிடையில் உள்ள இப்பிளவு பற்றிய தகவலை முதன் முதலில் The New India Express என்னும் இந்திய பத்திரிகை வெளிப்படுத்தியிருந்தது. TNA and Wignes waran may be Heading for a split என்னும் தலையங்கம் தீட்டப்பட்ட கட்டுரை இற் றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் வெளி யானது. அதாவது 2015 ஆகஸ்ட் 5ம் திகதி.

ராஜபக்ஷ காலப்பகுதிக்குப் பிந்திய தவ ணையில் தமிழர்களின் பிரச்சினை தொடர் பில் மத்தியஸ்த நிலைப்பாட்டை நோக்கி பிரவேசித்திருந்த TNA அமைப்புக்கும் கஜேந் திர குமார் பொன்னம்பலமின் TNPE கட்சியின் அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ள விக்னேஷ்வர னுக்குமிடையில் கருத்து மோதல்கள் உக்கிர மடைந்திருப்பதாக இக்கட்டுரையில் குறிப் பிடப்பட்டிருந்தது.

தனக்கேயுரிய சுயாதீன அரசியல் இலக் கொன்றை தகவமைத்துக் கொண்டுள்ள விக் னேஷ்வரன், அவ்விலக்கினை அடைந்துகொள் வதற்கு மிகவும் தீவிர நிலைப்பாடுகளுக்கு வந்திருப்பதாகவும் இது தொடர்பில் அமெ ரிக்காவின் துணை இராஜாங்க செயலாளர் நீஸா பீஸ்வால் விக்னேஷ்வரனுக்கு எதிர் ப்பை தெரிவித்திருந்ததாகவும் மேற்படி கட் டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப் பிளவே இன்று எழுக தமிழ் பேரணிக்கூடாக அரசியல் தளத்திற்கு வந்துள்ளது.

நடுநிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்ற தன்படி, இப்பேரணியில் 3000 இற்கும் 5000 இற்கும் இடைப்பட்டவர்கள் கலந்துகொண் டுள்ளனர். மக்கள் பங்குபற்றலை நோக்கும் பொழுது இப்பேரணி எதிர்பார்த்தளவு வெற் றியை பெறவில்லை என்பது தெளிவானது.

இந்நிலையில், குறுகிய மனப்பான்மைக் கூடாக தமது அரசியல் எதிர்காலத்தை செழிப்பாக்குவதற்கு முயற்சிக்கின்ற தமிழ் அரசியல் தலைமைகள், தமிழ் தேசியக் கூட்டமைப்பினை பிளவுபடுத்தி விக்னேஷ் வரனின் தலைமையிலான 'தமிழ் மக்கள் கவுன்ஸிலு'க்கூடாக (Tamil Peoples Council) புதிய கட்சியொன்றை உருவாக்குவதற்கு முயற்சி எடுப்பதனை காணமுடிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பிளவு படுத்துவதற்கு தான் எதிர்பார்ப்பதில்லை என விக்னேஷ்வரன் கூறினாலும், சுதந்திரக் கட்சி யினை பிளவுபடுத்த மாட்டேன் என ராஜ பக்ஷ வழங்குகின்ற வாக்குறுதிகளுக்கு மாற்ற மில்லை.

விக்னேஷ்வரனின் கடும்போக்குவாதச் செயல்கள் தெற்கிலுள்ள சிங்கள அடிப்படை வாதிகளுக்கு கொளுத்த தீனியாய் அமைந் துள்ளது. தேசிய கொடி, தேசிய கீதம், சிங்ஹ லே ஸ்டிகர் போன்ற பல்வேறுபட்ட நாட கங்களை அரங்கேற்றி தோற்றுப் போயுள்ள இவ்வினவாதிகள் விக்னேஷ்வரனின் 'எழுக தமிழ்' பேரணிக்கு புத்துயிர்க் கிடைத்தாற் [illegible]

ஒரு இணையதளத்தில் வெளியிடப் பட்ட செய்தியொன்றில், சிங்களவர்கள் இன்னும் இத்தகைய அநீதிகளை பொறுத் துக்கொள்ள மாட்டார்கள் என்றும், நாட் டில் இன்று உருப்பெற்றுள்ள நிலைமை களுக்கு ஆயுதங்களை கையில் ஏந்தத் தயார் என்பதாக சிங்கள இளைஞர்கள் முக நூலில் பகிரங்கமாகக் கூறியிருப்ப தாகவும் பொது பலசேனா வின் பொதுச் செயலாளர் ஞானசார தெரிவித்துள்ளார்.

மறுதினம், பொதுபல சேனா, ராவணா பலய போன்ற சிங்கள பௌத்தத் தீவிரவாத அமைப்புக்கள் வவுனியாவில் ஆர்ப் பாட்டமொன்றை நடாத் தியிருந்தன. நானே தமிழர்களின் உண்மை யான பிரதிநிதி என்கின்ற போலி நம்பிக் கையை சர்வதேச ரீதியில் பரப்புவதற்கு வவுனியா ஆர்ப்பாட்டம் விக்கிக்கு பக்க பலமாக அமையும். வவுனியா ஆர்ப்பாட் டக்காரர்கள் விக்கியை புலித் தலைவர் பிரபாகரனுக்கு ஒப்பிட்டிருந்தார்கள். இது விக்கியின் அரசியல் குறிக்கோளை அடை ந்து கொள்ளக் காரணமாக அமையும்.

ஏனெனில் புலிகளின் தலைவருக்குப் பின்னர், தமிழ் மக்களுக்காக உருப்பெற் றுள்ள ஒப்பற்ற தலைவர் தான் என்பதா கவே விக்கியின் அபிப்பிராயமாக உள்ளது. தமிழ் அரசியலுக்குள் தமிழ் தீவிரவாதம் பலம் பெறுவதனைப் பொறுத்தே விக்கி யின் அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப் படுகிறது.

தெற்கில் சிங்கள அடிப்படைவாதம் தலைதூக்குவதே தமிழ் அடிப்படைவாதம் பலம்பெறுவதற்கு அவசியமான நிபந்தனை யாக உள்ளது. இரு தரப்புத் தீவிரவாதங்க ளும் போஷிக்கப்படாமல் இரு தரப்புத் தீங்குகளும் பலம் பெறுவது கடினமானது.

2015 ஜனவரி ஆட்சி மாற்றத்தின் பெறு பேறொன்றாக தெற்கில் தீவிரவாதம் பாரி யளவில் அரசியல் தோல்வி கண்டதனை குறிப்பிடலாம். அவ்வேளையில் வடக்கின் பிரதான அரசியல் சக்தியாக உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் நடுநிலைப் போக்குடையவர்கள் மிகவும் பலம்பெற்ற வர்களாக மாறினார்கள். அதன் பின்னர், அதிகார மையத்தில் விளிம்பு நிலையில் காணப்பட்ட தெற்கிலுள்ள தீவிரவாதப் போக்குடையவர்கள் ராஜபக்ஷ அணியைச் சூழவும் வடக்கிலுள்ள தீவிரவாத எண்ணம் படைத்தவர்கள் விக்கியை சூழவும் ஒன்று திரண்டார்கள்.

தெற்கிலுள்ள தீவிரவாதிகள் வடக்கில் முதலாவது வெடிச் சத்தம் கேட்கும் வரை யிலும் வடக்கிலுள்ள தீவிரவாதிகள் தெற் கில் முதலாவது வெடிச் சத்தம் கேட்கும் வரையிலும் காத்துக் கொண்டுள்ளனர். முத லமைச்சர் விக்கியின் எழுக தமிழ் பேரணி யில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்ட TNA இன் உயர் மட்டத் தலைவர்கள் கலந்துகொள்ள வில்லை. அதுமாத்திரமல்ல, இந்நிகழ்வை TNA தலைவர்கள் கடுமையாக விமர்சித் திருந்ததும் குறிப்பிடத்தக்கது. வடக்கிலுள்ள தமிழ் புத்திஜீவிகளும் சிவில் சமூக செயற் பாட்டாளர்களும் இப்பேரணி தீவிரவாத த்தை விதைக்கும் செயல் என்பதாகக் கண்டித்திருந்தார்கள்.

இலங்கையில் வாழ்கின்ற எந்த இனப் பிரிவாக இருந்தாலும் நாட்டிற்கு ஒரு எதிர் காலம் இருக்கும் பொழுதே அவ்வினங் களுக்கும் எதிர்காலம் இருக்கும். ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து அடுத்த சமூகத்துடன் புரிந்துணர்வுடன் வாழ்வதன் மூலமே நாட்டிற்கு எதிர்காலம் ஒன்று இருக்கும். வடக்கில் ஏற்பட்ட யுத்தத்தினா லும் தெற்கில் மூண்ட ஆயுதப் போராட் டத்தினாலும் நாட்டிற்கு பாரிய இழப்புக் களை சந்திக்க நேர்ந்தது.

தமிழீழத்திற்காக வேண்டி தங்களது முழு வாழ்வையும் அர்ப்பணித்த ஆயிரக் கணக்கி லான இளைஞர் யுவதிகளுடைய உயிர்கள் காவுகொள்ளப்பட்டமையினால் கல்வி, கலாசாரம் போன்ற துறைகளில் இலங்கைக்கும் முழு ஆசியாவிற்கும் ஆப ரணமாக விளங்கிய தமிழ் சமூகம் இன்று படிப்பறிவின்மை, வேலைவாய்ப்பின்மை மற்றும் போதைப் பொருள் பாவனை போன்ற பிரச்சினைகளை எதிர்கொண்டு [illegible]

குழந்தை-பெற்றோர், சகோதர-சகோதரி கள், கனவன்-மனைவி போன்றவர்களில் ஒரு வராவது இறக்காத வீடொன்று வடக்கில் இல்லா மல் இருக்காது. 30 வருட கால யுத்தம் இடம் பெற்று வந்த வேளையில், கொழும்பில் இலங்கை நீதிமன்ற சேவையில் பணியாற்றி வந்த விக்னேஷ்வரன், அக்கொடிய நிகழ்வை தமிழ் மக்களுக்கு மீளவும் உரித்தாக்குவதற் காகவா முயற்சிக்கின்றார்?

தெற்கிலுள்ள இளைஞர்கள் ஆயுதம் ஏந்தத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கின்ற ஞான சாரவுக்கு 1987-1989 புரட்சியினால் ஏற்பட்ட அழிவுகள் மறந்து போயுள்ளதா? பொது பல சேனா மற்றும் ராவணா பலய போன்ற அமைப்புக்கள் தமிழ் எதிர்ப்பைத் தூண்டி, தெற்கினை மீண்டும் எரிப்பதற்கு முயற்சிப் பது அக்கொடிய இரத்தக் கரை படிந்த வர லாற்றை மீள உருவாக்குவதற்கா?

**யாருடைய நாடு?**

நவீன ஜனநாயக முறைமைக்குள் ஒரு நாடு சகல பிரஜைகளுக்கும் உரித்தாகின்றது. அது பெரும்பான்மை பிரஜைகளுக்கு மாத்திரம் சொந்தமில்லை. இன, மத வேறுபாடுகளினால் ஒரு பிரிவினருக்கு கூடுதல் உரிமையும் மற்று மொரு பிரிவினருக்கு குறைந்தளவு உரிமை யும் கிடைப்பதில்லை. தேசியப் பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் மிகவும் வரவேற்கத்தக்கது.

நாட்டிலும் அரசியல் சமூகத்திற்குள்ளாலும் இனவாதம் முற்றாக ஓரங்கட்டப்படா விடி னும் அரசாங்கம் இனவாதத்தைத் தூண்டி அதன் மூலம் அரசியல் இலாபம் அடைய முயற்சிப்பதில்லை. தமிழ் கட்சிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் வடக்கிற்கு சிற ந்த தீர்வொன்றை வழங்குவதே அரசின் நோக்கம்.

ஜனாதிபதி அவர்கள் கடந்த வாரம் அமைச் சரவையில் முன்வைத்த 11 கொள்கைத் திட்ட அறிக்கையானது, இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் முயற்சியின் ஆரம்ப கட்டம் எனக் குறிப்பிடலாம். இக்கொள்கைத் திட்டத்தினை ஆய்வு செய்து, அதற்கு பதில் வழங்கும் முகமாக வடக்கிலும் தெற்கிலும் அறிவுபூர்வ மான கலந்துரையாடல்கள் இடம்பெற வேண் டும்.

இலங்கை அரசாங்கம் இனவாதத்தை ஆரத் தழுவிக் கொள்ளாதது விக்னேஸ்வரன் போன்ற வர்களுக்கு பாரிய பிரச்சினையாக உள்ளது. தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதான அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் தீவிரவாதத்தை எதிர்த்து வருவது ராஜபக்ஷ அணியினருக்கும் அதன் அடிவருடிகளுக்கும் பாரிய சிக்கலாக உள்ளது.

அரசாங்கம் இனவாத்தை ஆதரித்தால் அது விக்கி போன்றவர்களுக்கு சாதகமாக அமை யும். அதை வைத்து தேசிய ரீதியில் மக்கள் பலமொன்றை உருவாக்குவதற்கும் சர்வதேச வரவேற்பையும் நிதி உதவிகளையும் பெற்றுக் கொள்வது இலகுவான காரியமாக அமையும்.

தமிழ் கூட்டமைப்பு இனவாதம் படைத்த கட்சியாக இருக்கும் காலமெல்லாம் அது ராஜபக்ஷவினருக்கு ஆசிர்வாதமாக அமையும். அதை வைத்து தெற்கில் சிங்கள் பௌத்த வாக்குகளை உறுதிப்படுத்திக் கொள்ள முடி கிறது. அரசாங்கம் இனவாதத்தை போசிப்பது அல்லது தமிழ் கட்சி இனவாதத்தை விரும்பு வது நாட்டில் நல்லிணக்கத்தை கட்டியெ ழுப்புவதற்கும் தேசிய இனமொன்றை உரு வாக்குவதற்கும் தடங்கலாக அமையும்.

வடக்கில் எட்டுக்கு எட்டாக இராணுவ முகாம்களை நிறுவியிருப்பதனாலும் அரசாங் கம் சிங்கள மக்களை வடக்கில் குடியமர்த்து வதனாலும் பௌத்தர்கள் இல்லாத

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




றவூப் ஸெய்ன்

# சுயாதீன ஆணைக்குழுக்கள் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளதா?

## ஜனாதிபதி கூற வருவது என்ன?

கடந்த வார அரசியலில் ஜனாதிபதி மைத்ரி பால சிறிசேன பகிரங்க உரையொன்றின்போது தெரிவித்திருந்த கருத்துக்கள் பாரிய அதிர்வலை களை உருவாக்கியது. இலங்கை மன்றக் கல்லூரியில் ஒக்டோபர் 12 ஆம் திகதி ஜனாதிபதி ஆற்றிய உரையொன்றில், குற்றவியல் விசாரணைத் திணைக்களம் (CID), நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு (FCID) மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இது சீரியஸான சில கேள்விகளை எழுப்பியுள்ளது. தேர்தல் பிரச்சாரத்தின் போது மைத்ரி மக்களுக்கு அளித்த வாக்குறுதியிலிருந்து அவர் தெளிவாக விலகிச் செல்கிறார் என்பதும், ஐ.தே.க.வுக்கும் மைத்ரிக்கும் இடையில் ஓர் அரசியல் உராய்வு ஆரம்பித்துள்ளது என்பதும் ஜனாதிபதியின் உரையிலிருந்து தெளிவாகின்றது.

மக்களுக்கிடையில் ஜனாதிபதியின் கருத்து பெரும் குழப்பத்தை உருவாக்கியுள்ளது. குற்றவியல் விசாரணைத் திணைக்களமோ நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவோ அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப இயங்க முடியாது. சட்டம் எல்லோருக்கும் சமமானது.

இந்நிறுவனங்கள் ஜனாதிபதி குறிப்பிடுவது போன்று அரசியல் மயமாக்கப்பட்டிருந்தால் அதற்கெதிரான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும். இவற்றில் பணியாற்றுகின்றவர்களின் பொறுப்புக்களும் கடமைகளும் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும்.

தேசிய பாதுகாப்பு, இராணுவ நிருவாகம், மற்றும் முகாமை குறித்து அறியாதவர்கள் சிந்திக்காமல் பாரிய தவறுகளை இழைக்கக் கூடும். இது குறித்து அரசாங்கம் உடனடியாகச் செயற்பட வேண்டும்.

ஜனாதிபதிதனது உரையில், "மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் உயரதிகாரிகள் எனக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் தமது பணிகளின் முன்னேற்றம் குறித்து அறிவிப்பது அவர்களின் பொறுப்பாகும். சிலர், இவை அனைத்தும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்ற வகையில் அவ்வாறு அறிவிக்க வேண்டியதில்லை என நினைக்கலாம். ஆணையாளர்கள் கூட அரசியலமைப்புச் சபையினால் நியமிக்கப்படுகின்றனர். ஜனாதிபதி என்ற வகையில் நானே இவற்றின் தலைவர்களை நியமிக்கின்றேன்'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி முன்வைக்கும் இக்கருத்து மிகவும் சீரியஸானது. சுயாதீன ஆணைக்குழுக்களே சுயாதீனமாக செயற்படவில்லை எனவும், அரசியல்மயப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதியே கூறுவதாயின், நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழலுக்கு எதிரான பொறிமுறை எந்தளவு அரசியல்மயப்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

ஊழல் மோசடிக்கு எதிரான மைத்ரியின் அரசாங்கமே ஊழல் மிக்கது என்பதை அவரது சொற்கள் ஏற்றுக்கொள்கின்றன. ஜனாதிபதி இதன் மூலம் எதைச் சொல்ல வருகின்றார் என்பது தெளிவு படுத்தப்பட வேண்டும். சுயாதீன ஆணைக்குழுக்கள் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளன என்பதன் அர்த்தம் என்ன?

அவர் தனது உரையில், லஞ்ச ஊழல் ஆணைக்குழுவை -குறிப்பாகச் சுட்டிக்காட்டினார். அதில் இடம்பெறும் இரண்டு வழக்குகளையும் கோடிட்டுக்காட்டினார். அதில் ஒன்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷவோடு தொடர்பானது. மேலும் 3 கடற்படை கொமாண்டர்களோடு



சம்பந்தப்பட்டவை. இரண்டாவது வழக்கு, ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவை கடத்தி கொன்றமை தொடர்பானது.

இச்சம்பவங்களைக் குறிப்பிட்ட அவர், அதிகாரிகள் எந்த இடத்தில் தவறுவிட்டுள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்தவில்லை. இவ்வழக்குகளின் விபரங்களை தனக்கு அறிவிக்கவில்லை என்பதை அவர் குறிப்பிட்டார். அது எவ்வாறு அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கவில்லை.

ஊழல் மோசடிக்கு எதிரான பொறிமுறையை அவர் குறைத்து மதிப்பிடவில்லை என்பது தெளிவானது. ஏனெனில், அவரது ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின்போது அவர் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் அதுவும் ஒன்று. அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மீள அறிமுகப்படுத்தியவரும் அவரே. அதன்படி நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழித்து, சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதாக மக்களுக்கு அவர் வாக்குறுதியளித்தார்.

100 நாள் வேலைத் திட்டத்தில் கடைசி இலக்காக இருந்தது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பது. ஆயினும், நல்லாட்சி எனப்படும் புதிய அரசாங்கம் தோன்றி, 500 நாட்கள் கடந்த நிலையிலும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படவில்லை. அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் முக்கியமானவை நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில், சுயாதீன ஆணைக்குழுக்கள் சுயாதீனமானச் செயற்படவில்லை என்று அவர் அங்கலாய்ப்பது நல்லாட்சி அரசாங்கம் பற்றிய மக்கள் நம்பிக்கையை உடைத்தெறிவதாக உள்ளது. ஏற்கனவே, குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை என்பது தொடர்பாக முன்வைத்த அறிக்கைகள் ஊழல் மோசடி ஒழிப்பு குறித்த மக்கள் நம்பிக்கையின் மீது மண்ணை வாரியுள்ளது.

அதன் பின்னணியிலேயே லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவர் தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்க தனது ராஜினாமா கடிதத்தை (17 ம் திகதி) ஜனாதிபதி மைத்ரிக்கு அனுப்பி வைத்துள்ளார். ஜனாதிபதியின் உரையில் லஞ்ச ஊழல் ஆணைக்குழு குறித்த அதிருப்தி தெளிவாக முன்வைக்கப்பட்டு ஐந்து நாட்களின் பின்னர் தில்ருக்ஷியின் இராஜினா கடிதம் முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும் மூன்று ஆணையாளர்கள் இவ்வாறு ராஜினா கடிதங்களை கையளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லஞ்ச ஊழல் ஆணையாளரின் ராஜினாமா குறித்து கூட்டு எதிர்க்கட்சியினர் பல்வேறு வகையான புரளிகளை எழுப்புகின்றபோதும், ஜனாதிபதியின் கூற்றே இதற்குரிய உடனடிக் காரணம் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

(பக்.14)

# அத்தியவசிய மருந்துகளின் விலை குறைப்பு எப்பொழுது அமுலுக்கு வரும்?

இலங்கையின் சுகாதாரத் துறை அபிவிருத்தி அடைந்து வரும் ஏனைய நாடுகளுக்கு ஒரு முன்னுதாரணமாகும். கடந்த காலங்களில் பல நாடுகள் கட்டுப்படுத்துவதற்குத் திணறிக் கொண்டிருந்த அபாயகரமான தொற்று நோய்களை இலங்கை சிறந்த திட்டமிடலின் மூலமும் கொள்கைகள் மூலமும் கட்டுப் படுத்தியுள்ளது.

எனினும், தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தல் இலங்கை சுகாதாரத் துறை எதிர்கொண்டுள்ள பாரிய சவாலாகும். அதேபோன்று மருந்தகத் துறையில் செயல்பட்டு வரும் மருந்தக மாபியா நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதும் இன்னொரு சவாலாகும்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இழுத்தடிக்கப்பட்டு வந்த மருந்து ஒழுங்கமைப்பு அதிகார சட்ட மூலம் 2015 செப்டம்பரில் நிறைவேற்றப்பட்டமை ஒரு மைல் கல்லாகும். வினைத்திறன், தரம், பாதுகாப்பு என்பவற்றை உறுதி செய்யும் மருந்துகளே இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் என்பதோடு, மருந்துகளின் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கமும் இச்சட்டமூலத்திற்குப் பின்னால் உள்ளது.

சாதாரண மனிதர்கள் பணம் செலுத்தி வாங்கக் கூடிய வகையில் மருந்துகளின் விலைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வந்தது. அதேவேளை, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் மருந்துகளை பரிசீலனை செய்து, சந்தையில் அவற்றை விற்பனை செய்வதற்கான உறுதிப்பத்திரத்தை வழங்கும் நோக்கில், தேசிய மருந்தக தர உறுதிப்பாட்டு ஆய்வு கூடம் (National Drug Quilty Assurance Labouratry) ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. ஆயினும் அது முறையாக இயங்கவில்லை.

தற்போது இலங்கை மருந்தகத் துறையில் சுகாதார அமைச்சு முன்னேற்றகரமான தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது. தொற்றா நோய்களுக்கான மருந்துகளின் விலைகளை குறைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பேராசிரியர் சேனக பிபிலே ஞாபகார்த்தப் பேருரையில், சுகாதார அமைச்சர் ராஜித, கொலஸ்ரோல் மற்றும் நீரழிவு நோய்களுக்கான சந்தையிலுள்ள மருந்துகளின் புதிய விலைகளை அறிவித்துள்ளார். அதன்படி, வாழ்க்கையைப் பாதுகாக்கும் 50 அத்தியவசிய மருந்துகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. இதற்கான புதிய விலைப் பட்டியல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இக்குறிப்பிட்ட மருந்துகள் சந்தையில் மிகவும் விலை கூடியவை என்று கடந்த பல தசாப்தங்களாக விவாதிக்கப்பட்டு வந்தது. சில மருந்துகளின் விலை 50%ஆல் குறைக்கப்பட்டுள்ளது.



ஆகக் குறைந்தது 29%ஆல் சில மருந்துகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

மிகப் பிரதான தொற்றா நோய்களான நீரழிவு மற்றும் இதய நோய்கள், உயர் குருதியமுக்கம், உயர் கொலஸ்ரோல், ஆஸ்மா போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படும் அன்டிபயடிக் மருந்துகளின் விலைகள் உள்ளிட்டு, பொதுவான உளவியல் நோய்களுக்கான மருந்துகளின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் ஏற்பாடு செய்த பேராசிரியர் சேனக பிபிலே நினைவேந்தல் நிகழ்வில் சுகாதார அமைச்சர் ராஜித இவ்வறிவிப்பை வெளியிட்டார். இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இவ்வைபவம் நடைபெற்றது.

சேனக பிபிலே 1970களில் இலங்கையில் பிரபலம் பெற்றிருந்த மருத்துவர் ஆவார். இலங்கைக்கென்று ஒரு தேசிய மருந்தகக் கொள்கை அவசியம் என்று வலியுறுத்தியவர். உலக சுகாதார அமையத்தின் சுகாதாரக் கொள்கை வகுப்பில் பங்குகொண்டவர். 1970 களில் இலங்கைக்கு 2100 வகை மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டன. அப்போது 630 தர அடையாள (Brand) மருந்துகளே போதுமானவை என்று அவர் பரிந்துரை செய்தார்.

இப்பிரச்சாரத்தை அவர் சர்வதேச அளவில் முன்னெடுத்தார். அதனால், அவரது மரணம் மர்மமான வகையில் நிகழ்ந்தது. பல்தேசிய மருந்துக் கம்பனிகள் அவரைக் கொன்றிருக்கலாம் என்ற சந்தேகம் இன்று வரை நீடிக்கின்றது.

தற்போது இலங்கையில் 10,000 மருந்து விற்பனை நிலையங்கள் இயங்குகின்றன. அவற்றில் 10,000 தர அடையாள மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன. கூடினால் இலங்கை நோயாளர்களுக்கு 2500 ப்ரேன்ட் மருந்துகள் போதுமானவை. ஆனால், தனியார் மருந்தக இறக்குமதி கம்பனிகள் சில வகை மருந்துகளை பல்வேறு பெயர்களில் விற்பனை செய்து வருகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவது சுகாதார அமைச்சு எதிர்நோக்கியுள்ள பாரிய சவாலாகும்.

### நீரிழிவு, உயர் இரத்த அழுத்தத்திற்கான மருந்துகளின் விலைகள்

| Product | Brands | Retail range (Rs.) | MRP(Rs.) | Reduction (%) |
|---|---|---|---|---|
| AMLODIPINE 5mg | 8 | 21.00-2.00 | 15.32 | 29% |
| LOSARTAN 50mg | 23 | 28.00-2.00 | 10.30 | 64% |
| ATORVASTATIN 20mg | 18 | 41.80-4.90 | 17.63 | 58% |
| CLOPIDOGREL 75mg | 4 | 20.50-6.80 | 15.27 | 26% |
| METFORMIN 500mg | 22 | 10.00-1.75 | 3.75 | 63% |
| GLICLAZIDE 80mg | 28 | 19.00-3.80 | 9.28 | 54% |

| Product | Dosage | Current Cost (Rs.) | | MRP | Cost (Rs.) |
|---|---|---|---|---|---|
| AMLODIPINE 5mg | daily | 21.00 | 21.00 | 15.32 | 15.32 |
| LOSARTAN 50mg | daily | 28.00 | 28.00 | 10.30 | 10.30 |
| ATORVASTATIN 20mg | daily | 41.00 | 41.00 | 17.63 | 17.63 |
| CLOPIDOGREL 75mg | daily | 20.50 | 20.50 | 15.27 | 15.27 |
| METFORMIN 500mg | 3xday | 10.00 | 30.00 | 10.00 | 11.25 |
| GLICLAZIDE 80mg | daily | 19.00 | 19.00 | 9.28 | 9.28 |
| COST per day | | | Rs. 159.50 | | Rs. 79.05 |
| COST per month | | | Rs. 4,785.00 | | Rs. 2,371.50 |



மருந்து விற்பனையிலுள்ள தனியாதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திரி முழு அளவில் போராடியும் வெற்றிபெறவில்லை. இப்பின்னணியில் தேசிய மருந்தக ஒழுங்குபடுத்தல் அதிகார சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டிருப்பது நல்லாட்சியில் நிறைவேறிய முக்கிய திருப்பமாகும்.

புதிய மருந்தகங்களின் விலைப் பொறிமுறை விரைவில் அமுலுக்கு வரும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படுவதாக சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய மருந்துகள் கட்டுப்பாட்டு அதிகார சபைத் தலைவர் பேராசிரியர் அசித டி சில்வா, "47 அத்தியவசிய மருந்துகளின் விலைக் குறைப்பு ஆகக் குறைந்த சில்லறை விலை அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்முறை 2013 இலேயே இந்தியாவில் அமுலுக்கு வந்தது. அத்தியவசிய மருந்துகளின் விலைகள் மீது இதன் நேர்ப்படியான தாக்கம் அதிகமாக இருக்கும். அரச வர்த்தமானியில் விலை குறைப்பு தொடர்பான அறிவித்தல் வெளியிடப்படுவதற்கு முன்பாக மேலும் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்'' எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் நீரிழிவு மற்றும் இதய நோயாளர்கள் மாதாந்தம் தமது வருமானத்தில் மூன்றில் ஒன்றை அல்லது நான்கில் ஒன்றை மருந்துகளுக்காக செலவுசெய்கின்றனர். இந்நிலமை புதிய விலைக் குறைப்பினால் மாற்றமடையவுள்ளது. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் விலை நிர்ணயக் குழுவில் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் அதன் தலைவராக பாலித அபே கோன் இலங்கை மருந்தகைத்தொழில் சபையின் அதிகாரிகள், இறக்குமதியாளர்கள் என பலரும் உள்ளடங்குகின்றனர்.

ஒப்பீட்டு ரீதியில் இலங்கையில் மருந்துகளின் விலை உயர்வானதாகும். குறிப்பாக, தொற்றா நோய்களுக்கான மருந்துகளின் விலை ஆசியாவின் ஏனைய நாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கையிலேயே அதிகமாகும். அரசாங்கத்தின் புதிய மருந்து விலை குறைப்பினால் நோயாளிகளின் மீதான சுமை பெருமளவு குறையுமென்று எதிர்பார்ப்பதாக வைத்தியர் பாலித அபேகோன் தெரிவித்தார்.

-நன்றி: சண்டே டைம்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை



# சமூகத்தை உலுக்கிவிட்டும் ஆதிலின் ஆன்மா!



ஒரு ஆன்மீகத் தலைவரின் மறைவு முழு நாட்டிலும் துயரத்தை மேலெலச் செய்து அதன் வடுக்கள் ஆற முன்னரே சர்வதேசத்தையும் சேர்த்து துயரத்தால் உலுக்கிவிட்டது ஆதில் பாக்கீர் மாக்காரின் மரண சேதி!

பாக்கிர் மாக்கார் பேருவளை மருதானையை பிறப்பிடமாகக் கொண்டவர். பேருவளை சீனங்கோட்டையில் திருமணம் செய்தார். சட்டத்தரணியாக இருந்தவர். இலங்கை அரசியல் வரலாற்றில் இடம்பிடித்தவர். பாராளுமன்றத்தில் சபாநாயகராகவும் வீற்றிருந்தார். பேருவளையிலேயே கடைசிவரை வாழ்ந்து மரணித்தார்.

அவரது மகனார்தான் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார். தந்தையை போன்று அரசியலில் ஈடுபாடு கொண்டவர். ஒரு சட்டத்தரணி. முக்கிய அமைச்சுப் பதவிகளையும் வகித்தவர். கண்டிப் பகுதியில் திருமணம் முடித்தார். தற்போது குடும்பத்தார் சகிதம் கொழும்பில் வாழ்கின்றார்.

அவரது ஐந்து மகன்மாரில் (அஸாப், அஸாம், பாதில், ஆதில், இன்சாப்) நான்காமவர்தான் ஆதில். இவரும் சட்டத்தரணி மாத்திரமல்லாமல் அரசியல் சார்ந்த கற்கைகளில் ஈடுபாடுடையவர்.

மிகவும் இளம் வயதில் முழு நாட்டு மக்களின் பார்வையையும் தன் பக்கம் ஈர்ந்தெடுத்த ஆதில் கொழும்பு, ரோயல் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்திலே திறமையுள்ள மாணவராகவும், துடிப்பானவராகவும் இருந்தவர். சிறு வயதிலேயே கல்வியிலே உயர்நிலையை அடைந்து, தலைமைத்துவம் சார்ந்த பல்வேறு அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகித்தவர்.

இளைஞர் சமூகத்துக்கு அவர் தன்னால் முடிந்தளவில் பணியாற்றி இருக்கின்றார். இளம் சட்டத்தரணியான அவர், ஐக்கிய நாடுகள் அமையத்தின் இளைஞர் அமைப்பின், இலங்கைப் பிரதிநிதியாக இருந்து, இளைஞர்களுக்கு வழிகாட்டியவர். தலைமைத்துவ பண்பிலே சிறந்து விளங்கியதனால் இளைஞர் பாராளுமன்றத்துக்கும் தெரிவானார்.

கடந்த செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி பொருளாதாரத் துறையில் பட்டப்படிப்புக்காகப் புலமைப்பரிசில் பெற்று லண்டன் சென்றிருந்தார்.

சட்டத்தரணி ஆதிலுக்கு பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் வழங்கிய ஒரு வருட புலமைப்பரிசிலைப் பெற்றே அவர் லண்டன் சென்றார். ஒரு வருடத்தில் ஒரு மாதம் கூட முடிவதற்குள் ஆதிலுக்கு இறைவனிடமிருந்து அழைப்பு வந்திருந்தது.

கொழும்பு றோயல் கல்லூரி, ஆசியாக்கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்ற ஆதில் லண்டன் எல்.எல்.பி. பட்டம் பெற்று இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து தனது குடும்பத்தில் மூன்றாம் பரம்பரையின் ஒரே சட்டத்தரணியானார்.

படிக்கும் காலத்திலிருந்து தனது தந்தையின் அரசியல் மற்றும் சமூகப்பணிகளுக்கு உதவி வந்த ஆதில், தந்தை இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நேரடி அரசியலிருந்து ஒதுங்கிய பின் மேற்கொண்ட சமூகப் பணிகளுக்கு உறுதுணையாக செயற்பட்டார்.

பலஸ்தீன ஒருமைப்பாட்டு இயக்கம் தேசிய ஐக்கியத்திற்கான பாக்கீர் பாக்கார் நிலையம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு பின்னணியிலிருந்து சிறப்பான பங்களிப்பை செய்தார்.

நாட்டில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்பவதற்காக பாக்கீர் மாக்கார் நிலையம் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக ஆற்றிய வருகின்ற பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு தன் அன்பு தந்தைக்கு ஒரு முக்கிய இணைப்பாளராக இவர் பணிபுரிந்தார்.

நல்லாட்சி அரசு பதவியேற்றபின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழுள்ள தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவராக அவர் நியமிக்கப்பட்டார். தேசிய இளைஞர் சேவை மன்றம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதற்பணிப்பாளர் சபையின் தனது தந்தை ஒரு அங்கத்தவராக இருந்ததமையால் ஆதில் அதன் வளர்ச்சிக்கு மன்றத் தலைவர் எரங்கவுடன் இணைந்து சிறப்பான பங்களிப்பை செய்தார்.

தேசிய இளைஞர் சேவை மன்றம் தலைவர் அவரை தொடர்பு கொண்டு இந்த அமைப்புக்கு உங்கள் உதவி கண்டிப்பாக தேவை. உங்களுக்கு சர்வதேச தொடர்புகள் அதிகமாக இருப்பதால் உங்கள் உதவி பயனுள்ளதாக அமையும் என்று கூறி சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பாக நியமித்தார். தேசிய இளைஞர் சேவை மன்றம் அவருக்கு வழங்கிய பிரியாவிடை உரை இங்கு நினைவுகூரத்தக்கது.

2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் இளைஞர் மாநாட்டில் கலந்துகொள்ளும் இரு பிரதிநிதிகளில் ஒருவராக தெரிவு செயப்பட்டார்.

அப்போதைய இளைஞர் விவகார அமைச்சசராக இருந்த டலஸ் அழகப்பெரும இத்தெரிவு பற்றி குறிப்பிட்டபோது, உங்களுடைய குடும்ப அரசியலையும் பார்க்காது உங்களுக்குள்ள திறமையின் காரணமாகவே உங்களை இத்தூதுக் குழுவிற்கு தெரிவுசெய்துள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

இனைளஞர்களாகிய எங்களை மெல்ல வழிகாட்டும் ஐ.தே.க.வுக்கு அகவை 70 என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரை நாட்டில் மும்மொழி பத்திரிகையிலும் கிட்டிய அண்மைக் காலத்தில் வெளியாகியிருந்தது.

தீவிர சமயப் பற்று கொண்ட ஆதில், தனது பெற்றார் திருமணம் பற்றிப் பேசும்போது ஏழைக் குடும்பமொன்றிலே தான் திருமணம் செய்ய விரும்புவதாகவும், சமய ரீதியாக தன்னை வழிகாட்டக் கூடிய ஒருவரே தனது துணைவியாக பெற விரும்புவதாகவும் கூறியதை அறியக் கிடைத்தது.

இறுதியாக, ஒக்டோபர் 12 ஆம் திகதி லண்டன் பல்கலைக்கழகத்தில் தனது அறையில் திடீர் சுகவீனம் காரணமாக மரணமானார் ஆதில். அந்த 26 வயதுடைய ஜனாஸா ஒக்டோபர் 26 அன்று இலங்கை கொண்டுவரப்பட்டு, கொழும்பு ஜாவத்தை மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அரசியல்வாதி ஒருவரின் பிள்ளை எப்படி வளர வேண்டும் என்பதற்கு ஆதில் ஓர் சிறந்த உதாரணம். அன்னாரை இறைவன் பொருந்திக் கொள்வானாக! இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் குடும்பத்திற்கும் உங்கள் பிரார்த்தனைகளை வேண்டியவனாக.. அல்லாஹும் மஹ்பிர்லஹு வர்ஹம்ஹு!

- அனஸ் அப்பாஸ் -

# முஸ்லிம்களுக்கு இந்நாட்டில் அபாயம் அண்மித்திருக்கிறது

சமாதானம், ஐக்கியம், சகவாழ்வு பற்றிப் பேசுவதை விட அவற்றைப் பேசியதால் ஏற்பட்ட இழப்புகளைப் பற்றித்தான் நான் இப்போது பேச வேண்டியிருக்கிறது.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சமாதானத்திற்காகப் பேசி வந்திருக்கிறேன். முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களுக்கு எதிராக குரல் கொடுத்திருக்கிறேன். இதனால் இப்போது முஹம்மத் வட்டரக்க என்றுதான் என்னை அழைக்கிறார்கள். அறிந்தவர்கள், அறியாதவர்கள் என எல்லோரும் அப்படித்தான் அழைக்கின்றார்கள்.

சகவாழ்வுக்காகவும் சமாதானத்திற்காகவும் பேசுபவர்களை பயப்படச் செய்ய என்னைத்தான் உதாரணமாக எடுக்கிறார்கள். சமாதானம் பேசினால் வடரக்கவிற்கு நடந்ததுதான் நடக்கும் என்கிறார்கள். சகவாழ்வு தொடர்பில் அதிகம் பேசிய என்னைப் போன்ற ஒரு தேரர் இருக்க மாட்டார். அந்தளவுக்கு பேசியிருக்கிறேன். செய்ய வேண்டிய அட்டூழியங்கள் அனைத்தையும் செய்தார்கள்.

ஏச்சு வாங்கியிருக்கிறேன், அடிவாங்கியிருக்கிறேன். எப்போது மரணிப்பேன் என்று சொல்ல முடியாது. மரணம் என்னைத் துரத்துகிறது. மரணத்தின் பின்னர் சோபித தேரருக்காக ஒன்று திரண்டதைப் போல் திரள்வார்கள். தன்சல் கொடுப்பார்கள், பதாகைகள் அடிப்பார்கள், இறுதிக் கிரிகைகளை செய்வார்கள்.

நாட்டில் பெரும்பாலானவர்கள் நல்லிணக்கத்தை விரும்புகிறார்கள். ஆனால், இதுபோன்ற செயற்பாடுகளின் காரணமாக அதற்காக வேண்டி முன்நிற்பதற்கு மக்கள் அச்சப்படு கிறார்கள். புதிதாக 'மஹசோன் பலகாய' உருவாக்கப்பட்டுள்ளது. இதுவும் பொது பல சேனா, சிஹல ராவய, ராவணா பலய போன்ற கொலைக்கார கும்பல்தான்.

கடந்த காலப்பகுதிகளில் சிங்களக் கடும்போக்குவாத அமைப்புகள் இரத்தக் காட்டேரிகளாக நாட்டில் அரங்கேற்றிய கொடுமைகள் ஏராளம். பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார, நிப்போன் ஹோட்டலுக்கு அத்துமீறி பிரவேசித்து நாம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிற்கு தடங்கல் விளைவித்தார். நான் நீண்ட காலமாக தேடி வருகின்ற இரை தான் வட்டரெக என்பதாக கூறினார். மிகவும் அச்சுறுத்தல் மிக்க சுயரூபத்துடனேயே ஞானசார அன்று செயற்பட்டிருந்தார்.

சிறுபான்மையினரின் மத வழிபாட்டுத் தளங்கள் தாக்கப்பட்ட பொழுது அதற்கெதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தார்களா? நான் 3 வருடங்களாக மறைந்து கொண்டு இருந்தேன். எனக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலும் அதற்கொரு காரணம். இவ்வாறிருந்தும், அவற்றுக்கெதிராக எவராவது கிளர்ந்தெழுந்தார்களா?

எனவே தான் மக்களின் உள்ளத்தில் நல்லிணக்கம் குடிகொண்டுள்ளது, ஆனாலும் அது செயல்பாட்டில் இல்லை என்கிறேன். கடும்போக்குவாதிகளின் செயற்பாடு காரணமாக சகவாழ்வு பற்றிப் பேசுவதற்கு அவர்கள் அஞ்சுகிறார்கள். சிங்கள சமூகத்தில் குறைந்த பட்சம் மஹாநாயக்க தேரர் கூட கடும்போக்குவாத அமைப்புக்களை கண்டிப்பில்லை.

தம்பர அமில, பத்தேகம சமித தேரர்கள் போன்ற ஓரிருவர் கதைத்தார்கள். மஹாநாயக்க தேரர் சிங்கள இனவாத கும்பலை கண்டிக்காமல் விட்டது அவர்களை ஆசிர்வதித்தது போலத்தான் உள்ளது. இது அவர்களுக்கு உந்து சக்தியாக அமைந்தது. நீங்கள் வீதிக்கிறங்கி போராடுவது நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்கே என அந்தக் கும்பலுக்கு மல்வத்த [illegible]



இலங்கையில் சகவாழ்வு, நல்லிணக்கம் தொடர்பாக ஜாதிக பல சேனாவின் பொதுச் செயலாளர் வட்டரக்க விஜித்த ஹிமி மீள்பார்வைக்குத் தெரிவித்த கருத்துக்களில் இருந்து...

**சிங்களவர்களை எழுந்து நிற்குமாறு அன்று கூறப்பட்டது. இன்று விக்னேஷ்வரன் தமிழர்களை எழுந்து நிற்குமாறு கூறுகிறார். ஆனால் முஸ்லிம்களை எழுந்து நிற்குமாறு கூறுவதற்கு ஒருவருமில்லை என்கின்ற கவலை எனக்குள்ளது. அஷ்ரபுக்குப் பிறகு இந்த நாட்டிலே முஸ்லிம்களுக் கென ஒரு தலைமை இல்லை. இந்நாட்டில் முஸ்லிம்கள் கட்சிகளாக சிதறிப் போயுள்ளார்கள். முஸ்லிம் சமூகத்தை ஒழுங்குபடுத்த வேண்டிய அவசர நிலையேற்பட்டுள்ளது.**

வழங்கினார். அக்கோஷ்டியினருக்கு அரச பாதுகாப் புள்ளது. மகாநாயக்க தேர்களின் ஆசிர் வாதங்கள் உள்ளன. எனவே வீதிக் கிறங்கி போராடுகிறார்கள். பொதுமக்க ளும் அவர்களின் பின்னால் செல்கிறார்கள்.

நாட்டின் பொதுவான சட்டத்தின் கீழ் அவர்களை சிறைப்பிடிக்கலாம். தேரர்களை சாசனத்திலிருந்து விரட்டலாம். மகா சங்க நீதிபதி கூட நாட்டிலே நியமிக்கப்பட்டுள்ளார். அவர் சும்மா இருந்து சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார். பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த நீதிமன்றம் எதுவும் செய்வதில்லை. அவர் பெயரளவு அதிகாரியாகவே உள்ளார்.

பிக்குகள் ஒழுக்கச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தது. ஆனால் அதனைத் தடுத்தார்கள். இன்று பௌத்த சமயத்தில் பல நிகாயாக்கள் உள்ளன. ஒருவருக்கொருவர் குரோத மனப்பான்மையில் செயற்படுகிறார்கள். பெரும்பாலான தேரர்கள் மதுபானம் அருந்துகிறார்கள். இன்னும் சிலர் பெண் துஷ்பிரயோகக்காரர்கள். இன்னும் சிலரோ சண்டியர்கள். இவ்வாறு பௌத்த சமயத்தில் இன்று முறையான தலைமைத்துவம், ஒழுக்க நெறிகள் இல்லாமல் சிறுகச் சிறுக அழிவுநிலையை அடைந்து வருகிறது.

அநகாரிக தர்மபால சிங்களவர்களே எழுந்திருங்கள் என்று கூறினார். அதாவது அவர்கள் குடிகாரர்களாகவும் பொருளாதாரத்தில் கீழ்நிலையிலும் காணப்பட்டார்கள். அதனாலேயே அவர் சிங்களவர்களை உற்சாகப் படுத்தினார். விக்னேஷ்வரன் தமிழ் மக்களை எழுந்திடுமாறு கோரினார். அவர் அவ்வாறு கூறியதில் தவறில்லை. ஏனெனில், வடக்கில் தமிழ் மக்களை மீளக் கட்டியமைக்க வேண்டியுள்ளது. வடக்கிலேயே கூடுதலாக மதுபானம் உற்பத்தி செய்யப் படுவதாக ஜனாதிபதி கூறியிருந்தார். அங்குள்ள சமூகம் போதைக்கு அடிமைப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முதலமைச்சருக்கு தெரியும் அதனாலேயே மக்களை ஒன்று திரளச் செய்தார். பாரிய அழிவுகளை கைவிட்டு விட்டு எழுந்திருங்கள் என்றார். மறுதினம் பொதுபலசேனா, ராவணா பலய போன்ற அமைப்புக்கள் வவுனியாவில் விக்னேஷ்வரனின் கருத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தன. அதனை இனவாதக் கண் கொண்டு பார்த்தார்கள். இது தவறான அணுகுமுறையாகும்.

சிங்களவர்களை எழுந்து நிற்குமாறு அன்று கூறப்பட்டது. இன்று விக்னேஷ்வரன் தமிழர்களை எழுந்து நிற்குமாறு கூறுகிறார். ஆனால்

(பக்.13)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவுடன் அரசியல் செய்வது ஹராம் என உலமா சபை பத்வா வழங்கினால் நான் அவருக்கு ஆதரவு வழங்க மாட்டேன்

- **முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கி வருவதற்குரிய காரணங்கள் என்ன?**

ஆரம்பத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆதரவு வழங்கினேன். 1983 கலவரத்தின்போது நான் பண்டாரவளையில் இருந்தேன். அங்கு என் கண் முன்னாள் சில தமிழர்களை கோவிலொன்றுக்குள் வைத்து எரித்தார்கள். இச்சம்பவம் என்னுள் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. 1986 இல் தமிழ் இயக்கங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக அட்டகாசம் புரிய ஆரம்பித்தன.

1983 போன்றதொரு கலவரம் முஸ்லிம்களுக்கும் ஏற்படலாம் என்றதொரு சிந்தனை எம்முள் தோன்றியது. அப்போது தமிழர்கள் இந்தியா சென்றார்கள். இன்னும் சிலர் யாழ்ப்பாணம் சென்றார்கள். ஆனால் முஸ்லிம்களாகிய எமக்கு ஒரு இடத்திற்கும் போக முடியாததொரு நிலை காணப்பட்டது. அன்றிருந்த அரசாங்கம் உங்களுக்கான பாதுகாப்பை நீங்களே ஏற்படுத்திக்கொள்ளுங்கள் என்று கூறியது.

அப்போது நாம் முஸ்லிம் ஆயுத அமைப்பொன்று பற்றி யோசித்தோம். எமது சமூகத்தை பாதுகாக்கக் கூடிய ஏதாவதொரு வழிமுறைக்குச் செல்ல வேண்டும் என்ற நோக்கில் அப்போது நான் இராணுவத்தில் இணைந்தேன். பொலிஸ் சப் இன்ஸ்பெக்டராகவும் சேவையாற்றினேன்.

இவ்வாறு இருக்கும் பொழுது 1987 இல் முஸ்லிம் காங்கிரஸ் உருவானது. ஆயுத ரீதியான நம்பிக்கைகளைக் கைவிட்டு விட்டு அரசியல் ரீதியில் எமது பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை பிறந்தது. 1993 வரையில் காங்கிரஸுடன் அரசியல் செய்தேன். எம்மால் தனியொரு கட்சியாக இருந்து கொண்டு அரசியல் உரிமைகளை வெல்ல முடியாது, பெரும்பான்மைக் கட்சியொன்றுடன் இணைய வேண்டும் என்ற கருத்துக்கள் மேலெழ, கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டில் 12 மாகாண சபை உறுப்பினர்கள் ஐ.தே.க.வில் இணைந்தார்கள்.

அப்போது பிரேமதாஸவின் ஆட்சிக் காலம். அவர் 1993 இல் கொல்லப்பட்டார். 1994 இல் அரசாங்கம் மாறியது. நாம் தொடர்ந்தும் ஐ.தே.க.வில் இருந்தோம். முதன் முதலாக நான் 1997 மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.க.வில் போட்டியிட்டேன். அதனைத் தொடர்ந்து 2 மாகாண சபைத் தேர்தல்களில் எனக்கு போட்டியிடுவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டது.

எமது தொகுதியில் நாம் கஷ்டப்பட்டு உழைத்து வரும் பொழுது ஐ.தே.க. முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஒருவரை நிறுத்தி எம்மை துண்டித்துவிடும். இவ்வாறு அரசியல் தொடர்பில் விரக்தியில் இருந்தேன். 2006 தேர்தலில் போட்டியிடும் நோக்கம் என்னிடம் இருக்கவில்லை. அப்போது மஹிந்த ராஜபக்ஷ என்னை அழைத்தார். 2006 இல் நான் சுதந்திரக் கட்சியில் இணைந்தேன். சிறி லங்கா சுதந்திரக் கட்சி குருநாகல் மாவட்ட அமைப்பாளர் பதவி எனக்குக் கிடைத்தது. இப்பதவியை வைத்து நான் பல சேவைகளை செய்தேன். அன்று முதல் எனக்கு ராஜபக்ஷ தொடர்பில் நல்லதொரு அபிப்பிராயம் இருந்து வருகிறது.

மஹிந்தவுக்கு ஆதரவு வழங்குகின்றமை தொடர்பில் கடந்த காலப்பகுதியில் பலர் என்னை திட்டினார்கள். சிலர் ஹராம் என்று கூறினார்கள். மஹிந்தவை சில முஸ்லிம்களுக்கு பிடிக்காது. மஹிந்தவுடன் இருப்பதும் அவரோடு இணைந்து அரசியல் செய்வதும் ஹராம் என்பதாக உலமா சபை பத்வா வழங்கினால் நான் மஹிந்தவுக்கு ஆதரவு வழங்க மாட்டேன்.

- **நாட்டில் கடந்த காலப்பகுதிகளில் அரங்கேற்றப்பட்ட இனவாதச் செயல்களின் காரணமாகத்தானே ராஜபக்ஷ ஆட்சி பீடம் பதவி கவிழ்க்கப்பட்டது?**

இன்று முஸ்லிம்கள் சர்வதேச ரீதியிலான சூழ்ச்சிக்கு அகப்பட்டுள்ளார்கள். இச்சூழ்ச்சி இன்று பல நாடுகளில் அரங்கேற்றப்படுகின்றது. இது எமது நாட்டிற்கும் விதிவிலக்கல்ல. இந்தியாவின் ரோ போன்ற உளவு அமைப்புக்கும் மேற்கு நாடுகளுக்கும் ராஜபக்ஷ மிகவும் தலையிடியாக இருந்தார். எப்படியேனும் அவரை ஆட்சி கவிழ்க்க வியூகம் வகுத்தார்கள். பல திட்டங்களைத் தீட்டினார்கள். அவருக்குள்ள பெரும்பான்மை பலத்தினை குறைக்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

யுத்தத்தை தொடர்ந்து மஹிந்தவுக்கு தமிழ் வாக்குகள் காணப்படவில்லை. எனவே முஸ்லிம்கள் இலக்கு வைக்கப்பட்டார்கள். தம்புள்ளை பள்ளி விவகாரத்தில் துவங்கி பொது பல சேனா உள்ளிட்ட இனவாத அமைப்புக்களின் தோற்றம் வரையில் சர்வதேசத்தின் சூழ்ச்சி அரங்கேறியது.



**அப்துல் சத்தார்**
தேசிய அமைப்பாளர் முஸ்லிம் முற்போக்கு முன்னணி

**நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி**

- **பொதுபல சேனா உருவாக்கத்துடன் ராஜபக்ஷ ஆட்சிக் கூட்டணிக்கு தொடர்பு இல்லையா?**

பொது பல சேனாவின் உருவாக்கமும் மேற்கத்தேய நாடுகளின் சூழ்ச்சியொன்றாகும். ஞானசார தேரருக்கு சிங்கள சமூகத்தில் வரவேற்பில்லை. முஸ்லிம்களே ஞானசார தேரரை ஊக்குவித்தார்கள். நாட்டில் 35,000 பௌத்த பிக்குகள் உள்ளார்கள். பௌத்த பிக்குகள் எனும் பொழுது சிங்கள மக்கள் அவர்களை கும்பிட்டு வணங்கி கௌரவப்படுத்துவார்கள். ஆனால் ஞானசாரருக்கு இந்த வரவேற்பில்லை.

பௌத்தப் பெரும்பான்மை நாட்டில் தேர்தலில் போட்டியிட்ட ஞானசாரருக்கு வெறும் 5000 வாக்குகள் மாத்திரமே கிடைத்தன. இதன் மூலம் சிங்கள சமூகத்தில் அவருக்குள்ள வரவேற்பு விளங்குகிறது. மஹிந்தவை பொறுத்த வரையில் அவர் ஒரு அரசியல்வாதி. எமது சமூகத்தில் பல அமைப்புக்கள் உள்ளன. என்னை அரசியல்வாதி என்ற வகையில் ஏதாவது ஒரு அமைப்பு முக்கிய வைபவமொன்றுக்கு அழைக்கும்போது நான் செல்வேன். அதுபோன்று தான் காலியில் பொது பல சேனாவின் கட்டிடமொன்றை திறந்து வைப்பதற்கு பண்ணும் எனக் கருதி அப்போதைய DIG அனுர சேனாநாயக்க நீதிமன்ற அனுமதியை வேண்டினார். களுத்துறை மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த ஆயிஷா ஆப்தீன், இதை நான் நிறுத்தினால் தனக்கும் முஸ்லிம்களுக்குப் பிரச்சினை வரும் எனக் கருதி அனுமதி வழங்கினார்.

இவ்விடயம் சரியென நான் சொல்ல வரவில்லை. மஹிந்த அன்று வெளிநாட்டிலிருந்து வந்ததும் உடனடியாக அளுத்கமைக்கு விரைந்தார். அங்கு போய் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அன்று தொடக்கம் அவர் நாட்டிலுள்ள சகல பள்ளிவாயல்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு உத்தரவு பிறப்பித்தார். இந்தப் பிரச்சினை இதற்கு மேல் செல்லாமல் பாதுகாத்தார்.

1983 இல் தமிழர்களுக்கு பிரச்சினை ஏற்பட்ட பொழுது ஜே.ஆர். ஒரு வாரம் பொலிஸாருக்கு விடுமுறை வழங்கினார். கிரீஸ் யகா சம்பவத்தின்போது புத்தளத்தில் முஸ்லிம் கிராமமொன்றிற்குள் நுழைந்த இரண்டு சிங்களவர்களை மக்கள் வெட்டிச் சாய்த்தார்கள். அப்போது அதை கார்ணமாக வைத்து அரசாங்கம் முஸ்லிம்களை தாக்கியிருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அதற்கு வழிவிடவில்லை. அளுத்கம சம்பவம் தொடர்பில் ஞானசாரவினை கைது செய்திருந்தால் அவ்விவகாரத்தை வேறொரு பக்கத்திற்கு மாற்றியிருப்பார்கள். தேரர்களை ஒன்று திரட்டி ஆர்ப்பாட்டம் செய்திருப்பார்கள்.

தற்பொழுது புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது. ஜனக பண்டாரவினை காணிப் பிரச்சினை தொடர்பில் கைதுசெய்தார்கள். ஆனால் அளுத்கம விவகாரம் தொடர்பில் ஏன் ஞானசார கைதுசெய்யப்படவில்லை. இதில் முக்கிய ஒருவராக இருந்த சம்பிக ரணவக்க இன்று அரசாங்கத்தில் உள்ளார். முஸ்லிம்களுக்கு ஆதரவு வழங்கியதாகக் கூறிய ராஜிதவும் அரசாங்கத்தில் உள்ளார். இச்சம்பவத்தில் இலாபம் பெற்ற ரிஷாதும் ஹக்கீமும் அரசாங்கத்தில் உள்ளார்கள். நல்லாட்சி அரசாங்கத்தினால் எமது சமூகத்திற்கு ஒரு விடிவு கிடைத்ததா என்றால் இல்லை.

- **முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாக நீங்கள் எவற்றை அடையாளப்படுத்துகின்றீர்கள்?**

இன்று முஸ்லிம் சமூகத்தின் கல்வி நிலை வீழ்ச்சி கண்டுள்ளது. 25 வீதமான முஸ்லிம்கள் சிறையில் உள்ளார்கள். போதைப் பொருள் பாவனை மற்றுமுண்டான சமூக விரோதச் செயல்களில் முன் நிற்பவர்கள் முஸ்லிம்கள். எமது சமூகத்திற்கு சரியானதொரு தலைமைத்துவம் இல்லை. இன்று ஒரு பள்ளிவாயலுக்கு சென்று எப்படி தொழுவதென்பதை தீர்மானிக்க முடியாதுள்ளது.

பல அமைப்பு சார்ந்த பள்ளிவாயல்கள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு பள்ளியிலும் ஒவ்வொரு விதமாக தொழுகிறார்கள். அடிப்படையான மார்க்க பிரச்சினைகளில் சிக்குண்டுள்ளார்கள். ஒரு குறிக்கோளற்ற சமூகமாக எமது மக்கள் காணப்படுகிறார்கள். தேர்தல் வந்தால் நாம் ஐ.தே.க.வுக்கு வாக்களிக்கிறோம். அது எதற்காக வாக்களிக்கிறோம் என்பது கூட தெரியாது. முஸ்லிம் காங்கிரஸோ அல்லது ரிஷாதின் கட்சியோ அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கச் செல்லும்போது எங்களுக்கு எத்தனை பாடசாலைகளை தருவீர்கள், எங்களுக்கு எத்தனை தொழில் வாய்ப்புக்களை தருவீர்கள் அல்லது எமக்கு ஒரு முஸ்லிம் ஊடகமில்லை, ஒரு ஊடகம் தேவை என்பதாகக் கேட்பதில்லை.

**தேர்தல் வந்தால் நாம் ஐ.தே.க.வுக்கு வாக்களிக்கிறோம். அது எதற்காக வாக்களிக்கிறோம் என்பது கூட தெரியாது. முஸ்லிம் காங்கிரஸோ அல்லது ரிஷாதின் கட்சியோ அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கச் செல்லும்போது எங்களுக்கு எத்தனை பாடசாலைகளை தருவீர்கள், எங்களுக்கு எத்தனை தொழில் வாய்ப்புக்களை தருவீர்கள் அல்லது எமக்கு ஒரு முஸ்லிம் ஊடகமில்லை, ஒரு ஊடகம் தேவை என்பதாகக் கேட்பதில்லை.**

மஹிந்த அழைக்கப்பட்டு அவருக்கு முடியாமல் போக, கோத்தாபய அங்கு சென்றிருந்தார்.

அக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பு மிலிந்த மொரகொடவிடமிருந்து வந்தது. மொரகொடவின் வேண்டுகோளுக்கிணங்கவே அவர் அங்கு சென்றிருந்தார். அவர் பொது பல சேனா கட்டிட திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டதனால் அவர் பொதுபல சேனாவுக்கு ஆதரவானவர் எனக் கூற முடியாது. பிற்காலத்தில் வழக்கொன்று இடம்பெற்று பொது பல சேனாவுக்கு அவ்விடம் கிடைக்காமல் போனது.

- **கடந்த அரசாங்கம் அளுத்கம விவகாரத்தை ஏன் வளர்ந்தது?**

அளுத்கம சம்பவம் இடம்பெறுகின்ற பொழுது மஹிந்தவும் கோட்டாவும் நாட்டில் இருக்கவில்லை. பசில் மாத்திரமே இருந்தார். அளுத்கமையில் பொது பலசேனாவின் கூட்டத்தை நடாத்துவதற்கான அனுமதியினை மதப் பாதுகாப்புச் சபையின் செயலாளரே வேண்டியிருந்தார். அவர் சம்பிக ரணவக்கவின் செயலாளர். இவ்விவகாரம் பிரச்சினையை உண்டு

மாறாக எங்களுக்கு எத்தனை அமைச்சுப் பதவிகள், எத்தனை திணைக்களங்கள், எத்தனை வாகனங்கள் என்பதையே கேட்கிறார்கள். இவர்களால் எமது சமூகத்திற்கு ஒரு நன்மையும் கிடைக்கப் போவதில்லை. இன்று பாடசாலைகளில் முஸ்லிம் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இன்று அநேகமான சிங்களப் பகுதிகளிலுள்ள வீதிகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருக்கும். ஆனால் எமது (பக்.13)



## எழுவாய், பயமிலை

அபூ ஷாமில்

## தீர்வு தருமா குத்பாக்கள்?

நமது நாட்டில் நடைபெறுகின்ற குத்பாக்கள் சமூக மட்டத்திலே தாக்கம் செலுத்தியமை வெகு குறைவு என்பதுதான் பலரதும் அபிப்பிராயமாக இருக்கிறது. பள்ளிவாசல் பேஷ் இமாமே கதீபாகவும் கடமையாற்றுகின்ற பள்ளிவாசல்களில் மிகுதியை அடுத்த வாரம் எதிர்பார்க்க வேண்டிய தொடர் குத்பாக்கள் நடைபெறுகின்றன. இன்னும் பல இடங்களில் வாரா வாரம் மாறி மாறி வருகின்ற கதீப்மார் சிலவேளைகளில் கடந்த வாரம் குத்பா ஓதிய கதீப் சொன்ன விடயங்களையே மீட்டி விட்டுச் செல்கின்றனர். இன்னும் சில இடங்களில் வெளி ஊர்களில் இருந்து வரவழைக்கப்படுகின்ற கதீப்மார் கடந்த வாரம் வேறு ஊரொன்றில் பேசிய இந்த ஊருடன் எந்தச் சம்பந்தமுமில்லாத விடயங்களைப் பேசி புதிய பிரச்சினைகளை ஊர்களிலே விதைத்து விட்டுச் செல்கின்றனர்.

இலங்கை வெள்ளிக்கிழமை விடுமுறையாக அனுஷ்டிக்கப்படும் அரபு நாடு அல்ல. பிஸியான வேலை நாளொன்றில் தமது வியாபாரத்தலங்களை மூடிவிட்டே பலரும் குத்பாவுக்காக வருகின்றார்கள். முஸ்லிமல்லாத வேலை நிறுவனங்களில் விரும்பியோ விரும்பாமலோ கொடுக்கப்படுகின்ற நேரத்தில் குத்பாவுக்காக வருகின்ற ஊழியர்கள் இருக்கிறார்கள். தத்தமது அன்றாட அலுவல்களை விட்டு விட்டு தமது பெறுமதியான நேரங்களை குத்பாவுக்கென ஒதுக்கி வருகின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள்.

மக்களில் யாரும் பிரச்சினைகள் இல்லாதவர்கள் இல்லை என்ற வகையில் ஜும்ஆவிலே ஒன்று கூடுகின்றவர்களில் ஏராளமானவர்கள் பெரும் பெரும் பிரச்சினைகளையும் தமது தலையிலே சுமந்து கொண்டு தான் வருகிறார்கள். குடும்பப் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், கடன் சுமைகள் என தனிமனிதன் சுமந்து வரும் பிரச்சினைகள் அனைத்தும் சமூகக் கட்டமைப்புடன் தொடர்புடையதாகவே இருக்கின்றன. இதனால் சமூகமே ஒன்று கூடுகின்ற இடத்தில் ஆன்மீகப் பெறுமானங்களுக்கு மேலதிகமாக சமூகப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை மக்கள் தமது பெறுமதியான நேரத்தில் எதிர்பார்க்கிறார்கள்.

துரதிர்ஷ்டவசமாக இவர்களுக்கான தீர்வுகளைச் சொல்கின்ற அளவுக்கு நமது குத்பாக்கள் இருப்பதில்லை. தனிமனிதனுடைய ஆன்மீகப் பெறுமானங்களை மட்டுமே இவை பேசுகின்றன. தற்போதைய குத்பாக்களில் ரஸூல் (ஸல்) அவர்கள் கூட ஆன்மீக வழிகாட்டியாக மட்டுமே சித்திரிக்கப் படுகின்றார். இந்த வகையில் மக்களின் பொது வாழ்வுக்கான வழிகாட்டல்களை, தீர்வுகளை இன்றைய பல குத்பாக்கள் பேசுவதில்லை.

இந்த வகையில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் தலைவர் ரிஸ்வி முப்தி அவர்கள் அண்மையில் கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலில் நடத்திய குத்பாப் பேருரை முன்னுதாரணமாக அமைந்திருந்தது. சமூகத்தில் மலிந்து வருகின்ற ஒரு தீமைக்கான தீர்வாக நிகாபை கடமையாக்கு வதை அவர் தமது குத்பாவிலே பேசியிருந்தார். இது ஒரு தீர்ப்பாக முன்வைக்கப்பட்டதிலும், இந்தத் தீர்ப்பு சமூகத்துக்குப் பொருத்தமானதா இல்லையா என்று தீர்மானிப்பதிலும் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் துணிச்சலாக தனது கருத்தை வெளிப்படையாக முன்வைத்த ஜம்மியதுல் உலமா தலைவரின் முன்மாதிரியை கதீப்மார் பின்பற்ற வேண்டும்.

சமூகம் நாளுக்கு நாள் புதிய புதிய பிரச்சினைகளை எதிர்நோக்கும் போதெல்லாம் அல்லாஹ்வும் ரஸூலும் தீர்ப்புகளை வழங்கிக் கொண்டிருக்கப் போவதில்லை. இதனால் தான் நபிமார்களின் வாரிசுகளான உலமாக்களிடம் மக்கள் சமூகப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் வழிகாட்டல் களையும் எதிர்பார்க்கிறார்கள். இந்த வகையில் சமூகப் பிரச்சினைக்கான தீர்வுகளை குர்ஆன் ஹதீஸ் ஒளியில் நின்று தமக்குக் கிடைக்கின்ற குத்பாவைப் பயன்படுத்தியேனும் எங்களுடைய உலமாக்கள் முன்வைக்க வேண்டும் என சமூகம் எதிர்பார்க்கிறது.

இப்படித் தாம் தேடியறிந்த தீர்வுகளை சமூகத்தின் முன்வைக்கின்ற போதுதான் அது சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் பேசுபொருளாக மாறும். குறித்த கருத்து அல்லது முன்வைக்கப்பட்ட தீர்வு தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் நடைபெறும். மக்கள் தெளிவு பெறுவார்கள். இறுதியில் ஆரோக்கியமான ஒரு தீர்வை நோக்கி சமூகம் நகர முடியுமாக இருக்கும். உலமாக்களை நபிமார்களின் வாரிசுகளாக அப்போதுதான் சமூகம் ஏறெடுத்துப் பார்க்கும்.

இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு விடயமும் இருக்கிறது. யாராவது தேடித் தெரிந்து தமது பக்கத் தீர்வை முன்வைத்தால் அவரைக் குத்திக் குதறி மிம்பர்களை இறைச்சிக் கடையாக்குகின்ற உலமாக்களும் நம்மிடையே இருக்கின்றார்கள். தமது கருத்தை முன்வைக்கின்றவர்களை அழிவுச் சத்தியம் செய்ய அழைத்து அல்லது விவாதத்துக்கு அழைத்து இழிவுபடுத்தி, சமூக ஊடகங்களிலே அவரையும் அவரைச் சார்ந்தவர்களையும் மானபங்கப்படுத்தி மார்க்கப் பணி புரியும் உலமாக்களும் நமக்குள்ளால் இருக்கிறார்கள்.

தாம் நினைத்து வைத்திருப்பதுதான் மார்க்கம் எனக் கருதி தனது மனோஇச்சைப்படி நடக்கும் விதமாக பள்ளிவாசல்களை ஆக்கிரமித்து வைத்துள்ள நிர்வாக மையத்தின் அடாவடிகளைத் தாண்டியே உலமாக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க வேண்டியிருக்கிறது.

இவை அனைத்தையும் தாண்டி யாராவது குத்பாக்களிலே தீர்வு சொல்ல முன்வந்தால்.. சுவர்க்கத்திலே அல்லாஹ்வைச் சந்திக்கின்ற பாக்கியத்தை அல்லாஹுதஆலா அவர்களுக்கு வழங்குவானாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்பார்வை விளையாட்டு

1884ம் ஆண்டு நவம்பர் 15ம் திகதி சித்திலெப்பை, வாப்பிச்சி மரிக்கார், ஒராபி பாஷா போன்ற அறிஞர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது முஸ்லிம் பாடசாலையே கொழும்பில் அமைந்துள்ள ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரி. தற்போது இக்கல்லூரியின் அதிபர் எம்.எஸ்.எம். பைஸல் அவர்களின் வழிகாட்டலோடு தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலமாக 2500க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருவதோடு 130 ஆசிரியர்களும் இங்கு கடமையாற்றி வருகின்றனர்.

இக்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் பிரகாசித்துக் கொண்டிருப்பதானது தேசிய ரீதியாக ஹமீத் அல் ஹுஸைனி தேசிய பாடசாலை பெயர் பெறுவதற்கு மிகப் பிரதான காரணமாகும். குறிப்பாக அண்மைக்காலமாக தேசிய ரீதியாக இடம்பெற்று வரும் கால்பந்தாட்டத் தொடர்களில் இக்கல்லூரியின் 15,17,19 வயதுக்குட்பட்டோர் அணிகள் அதி சிறந்த பெறுபேறுகளை பெற்று வருகின்றமை இக்கல்லூரியின் வரலாற்றில் ஒரு மைற்கல்லாக நோக்கப்படுகிறது.

## மாவட்ட சம்பியனானது 15 வயதிற்குட்பட்டோர் அணி



இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சம்மேளனம் நடாத்தும் இவ்வாண்டுக்கான சமபோஷ கால்பந்தாட்ட தொடரின் 15 வயதிற்குட்பட்டோர் பாடசாலை அணிகளுக்கிடையிலான போட்டியில் கொழும்பு மாவட்ட சம்பியன் பட்டத்தை ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரி தனதாகிக்கொண்டது.

கொழும்பு மாவட்டத்தின் 36 பாடசாலைகள் கலந்துகொண்ட இந்தப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 13ம் திகதி வெள்ளவத்தை குரே-பார்க்கில் இடம்பெற்றது. விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியை 3:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்த ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரி தேசிய ரீதியாக இடம்பெறவுள்ள சமபோஷ கால்பந்தாட்டத் தொடருக்கு தகுதி பெற்றது. இந்தப் போட்டிகள் எதிர்வரும் 28ம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சொந்தமாக மைதானம் இல்லாத நிலையிலும் தேசிய கால்பந்தாட்டப் போட்டிகளில் பிரகாசித்து வரும்

# ஹமீத் அல் - ஹுஸைனி கல்லூரி

## வரலாறு படைத்த 19 வயதுக்குட்பட்டோர் அணி





கல்வியமைச்சினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் கொழும்பு ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரியின் 19 வயதுக்குட்பட்டோர் அணி 2016ம் ஆண்டுக்கான சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றி சாதனை படைத்திருக்கின்றது.

தேசிய ரீதியாக இடம்பெற்ற இப்போட்டிகளில் தலை சிறந்த கால்பந்தாட்ட அணிகளைக் கொண்ட பல்வேறு பாடசாலைகள் கலந்து கொண்டன. இதன் இறுதிப் போட்டி கடந்த மாதம் 11ம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. எம்.அமான் தலைமையில் களம் இறங்கிய ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரியின் 19 வயதுக்குட்பட்டோர் அணி இறுதிப்போட்டியில் கொழும்பு ஸாஹிரா கல்லூரியை சந்தித்தது. ஆக்ரோஷமாக மோதிக் கொண்ட இவ்விரு அணிகளும் நேரமுடிவில் 1:1 என்ற கோல் கணக்கில் சமமாக இருந்தன. பெனால்டி முறை மூலமாக 5:4 என்ற கோல் கணக்கில் ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரி சம்பியனானது.

## இரண்டாம் இடத்தைப் பிடித்தது 17 வயதுக்குட்பட்டோர் அணி



அதே போன்று கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதிற்குட்பட்டோர் அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டி கடந்த மாதம் 11ம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலை மைதானத்தில் இடம்பெற்றது. இறுதிப்போட்டியில் ஹமீத் அல் ஹுஸைனி மற்றும் கந்தான டீ மெஸனோல்ட் கல்லூரிகள் மோதிக்கொண்டன. போட்டி முடிவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாததால் பெனால்டி முறை மூலம் கந்தான டீ மெஸனோல்ட் கல்லூரி (4:2) வெற்றி பெற்றது. இந்தத் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்று கொண்ட ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரி அரை இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் சென் பெட்ரிக்ஸ் கல்லூரியை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியிருந்தது. அரை இறுதிப் போட்டியின் போது அணியின் 7 வீரர்கள் காயம் அடைந்தமையே இறுதிப் போட்டியில் எமது கல்லூரி தோல்வியடையக் காரணமென அணியின் தலைவர் ஸப்ரின் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சம்மேளனம் நடாத்தி வருகின்ற இவ்வாண்டுக்கான பாடசாலைகளுக்கான கால்பந்தாட்ட தொடரின் (Under 17) காலிறுதிப் போட்டி 17.10.2016 கொட்டஹேன ரத்னம் பார்க்கில் இடம்பெற்றது. இப்போட்டியில் ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரி கொழும்பு இசிப்பத்தான கல்லூரியை 3:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அரை இறுதிக்கு முன்னேறியது. இப்போட்டியில் ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரி சார்பாக அபிசேகன் 2 கோல்களையும் சதாம் 1 கோலையும் பெற்றுக்கொடுத்தனர்.

## சாதனைகளுக்குப் பின்னால்...



அதிபர் எம்.எஸ்.எம். பைஸல்

அண்மைக்காலமாக கொழும்பு ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரி பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்று வரும் மாவட்ட, மாகாண, தேசிய ரீதியான போட்டிகளில் முத்திரை பதித்து வருகின்றது. பல திறமையான வீரர்கள் அணியில் உள்ளமை, அணியின் ஒற்றுமை, இம்றான் ஹுஸைனின் பயிற்றுவிப்பு, பாடசாலை விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர் பியந்தவின் வழிகாட்டல், பாடசாலை பழைய மாணவர் அமைப்பு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை முகாமைத்துவ சபை ஆகியவற்றின் அர்ப்பணிப்பு என்பனவே இந்தக் கல்லூரியின் சாதனைகளுக்குப் பின்னாலுள்ள ரகசியமாகும்.

என்றாலும் இந்தக் கல்லூரிக்கென சொந்தமாக மைதானமொன்று இல்லாமல் வீரர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பில் இக்கல்லூரியின் கால்பந்தாட்ட அணியின் பயிற்சியாளர் இம்றான் ஹுஸைன், எமது வீரர்கள் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு சொந்த மைதானமொன்று கிடையாது. மாளிகாவத்தை சிறிசேன பார்க் மற்றும் குணசிங்கபுர பிரைஸ் பார்க் என்பவற்றிலேயே அவர்கள் பயிற்சிகளில் ஈடுபடுகின்றனர். சொந்த மைதானமொன்று இல்லாததால் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலேயே பயிற்சிகளில் ஈடுபடக்கூடிய நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று இக்கல்லூரியின் அதிபர் எம்.எஸ்.எம். பைஸல், விளையாட்டுத் துறையில் தமது கல்லூரி மாணவர்களின் தேசிய ரீதியான அடைவுகள் மகிழ்ச்சியைத் தருகின்ற அதேவேளை மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளிலும் ஆர்வத்தோடு ஈடுபடவேண்டும். மேலும் சொந்த மைதானமொன்றை இக்கல்லூரிக்கு பெற்றுத் தருவதற்கு மாவட்டத்திலிலுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள், தனவந்தர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.





மிப்றாஹ் முஸ்தபா
பட உதவி: அனஸ் அப்பாஸ்





நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட தெல்தோட்டை மக்களுக்கான குடிநீர் வசதிகளை MFCD நிறுவனம் CARE நிறுவனத்துடன் இணைந்து வழங்கியது.





சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மியகம பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட பாலர் பாடசாலைகளுக்கான கண்காட்சியில் பெரும் நன்மதிப்பை பெற்ற மல்வானை, றக்ஸபான அல் பலாஹ் பாலர் பாடசாலையின் கண்காட்சி பொது மக்களின் பார்வைக்காக 2016.10.09ம் திகதி பாலர் பாடசாலை வளாகத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எகிப்து - சவூதி முறுகல்

கெய்ரோவுக்கான சவூதி தூதுவர் முன்னறிவித்தலின்றி கெய்ரோவை விட்டு கடந்த 15 ஆம் திகதி திடீரென வெளியேறியமை இரு நாடுகளுக்கும் இடையிலான முறுகலின் பிரதிபலிப்பு எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிரியா தொடர்பில் பாதுகாப்புச் சபையில் ரஷ்யா கொண்டு வந்த பிரேரணைக்கு எகிப்து ஆதரவாக வாக்களித்தமையே முறுகல் நிலைக்கான உடனடிக் காரணம் என அறிவிக்கப்படுகின்றது. இதன் பின்னணியிலேயே வெளிநாட்டுத்தூதுவரின் வெளியேற்றம் அமைந்துள்ளது.

எதிர்வரும் ஒரு மாதத்திற்கான பெற்றோலிய ஏற்றுமதியையும் சவூதி அரசாங்கம் நிறுத்தி வைத்துள்ளது. இதனால் எகிப்து பெற்றோலியத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கலாம் எனக் கருதப்படுகின்றது.



இதேவேளை, குவைத்தின் முன்னாள் தகவல் துறை அமைச்சர் கெய்ரோவின் இம்முடிவை அறபு நாடுகள் கண்டிக்க வேண்டும் எனவும் ஸீஸி அரசாங்கத்தைத் தனிமைப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவப் புரட்சிக்குப் பின்னர் எகிப்தில் உருவாக்கப்பட்ட ஸீஸி தலைமையிலான இராணுவ அரசாங்கத்தோடு இணங்கிச் செயற்பட்ட சவூதி அறேபியாவுக்கும் எகிப்துக்கும் இடையில் கடந்த பல ஆண்டுகளாக நெருக்கமான உறவு நீடித்தது. தற்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் பாரிய விரிசல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## யெமனில் போர் நிறுத்தம்



யெமனில் 72 மணித்தியால போர் நிறுத்தமொன்றை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புகளும் உடன்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வகையில் யெமன் இராணுவம், ஹூதி கிளர்ச்சியாளர்கள், சவூதி தலைமையிலான வளைகுடா ஒத்துழைப்பு நாடுகளின் அமையம் என்பவை 3 நாள் போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டுள்ளன.

கடந்த வாரம் ஜனாஸா ஊர்வலமொன்றின் மீது ஒத்துழைப்பு நாடுகளின் அமையம் மேற்கொண்ட வான் தாக்குதலில் 140 பேர் கொல்லப்பட்டதை அடுத்து, சவூதி தலைமையிலான இராணுவக் கூட்டமைப்பின் மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் உடனடிப் போர் நிறுத்தமொன்றுக்கு அனைத்துத் தரப்பும் இணங்க வேண்டும் எனக் கோரியிருந்தன.

ஹூதி கிளர்ச்சியாளர்கள் உடன்பட்டால் சவூதி தயாராக உள்ளது என அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஆதில் ஜுபைர் தெரிவித்திருந்தார். தற்போது தாஇஷ் மாகாணத்தில் பொது மக்கள் எதிர்நோக்கியுள்ள உணவு, மற்றும் மருந்துப் பொருட்களின் பற்றாக் குறையை நீக்குவதற்கு இத்தற்காலிக போர் நிறுத்தம் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சர்வதேசப் பார்வை

## ஈராக்கின் மௌசூல் நகரை மீட்கும் போர் தீவிரம்



ஐசிஸ் பயங்கரவாதிகளிடமிருந்து ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மௌசூலை மீட்கும் தாக்குதலை ஈராக்கிய அரசாங்கம் தீவிரப்படுத்தியுள்ளது. 17 ஆம் திகதி இத்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த 3 ஆண்டுகளாக இந்நகரம் ஐசிஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றது.

ஈராக்கின் அரச படைகளுக்கு ஆதரவாக அமெரிக்க வான் படை களத்தில் இயங்கி வருவதாக ஈராக் தெரிவித்துள்ளது. சுமார் 1 இலட்சம் மக்கள் மௌசூலிலிருந்து அகதிகளாக இடம்பெயரலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. அதுவரையான முன்னகர்வில் 200 சதுர கி.மீ. பரப்பை ஐசிஸ் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டியுள்ளதாக ஈராக்கிய படையினர் தெரிவித்துள்ளனர்.

## ஹூதிகளுக்கு நாம் ஆதரவளிக்கவில்லை - ஓமான்



யெமனில் பிரிவினைவாதப் போரில் இறங்கியுள்ள ஹூதி தீவிரவாதிகளுக்கு வெளிப்படையாக நாம் எவ்வித ஆதரவையும் வழங்கவில்லை என ஓமான் சுல்தான் காபூஸ் தெரிவித்துள்ளார்.

ஹூதி பயங்கரவாதிகளுக்கு லெபனானைத் தளமாகக் கொண்ட ஹிஸ்புல்லாஹ் மற்றும் ஈரான் ஆகியன பகிரங்கமாக ஆதரவளித்து வருகின்றன. ஓமான் அரசாங்கமும் இக்கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவளித்து வருவதாக எழுந்த குற்றச்சாட்டை ஓமான் நிராகரித்துள்ளது.

வளைகுடாவில் காணப்படும் மிகச் சிறிய நாடான ஓமான், மிகக் குறைந்த சனத்தொகையைக் கொண்டிருப்பதோடு, பொருளாதாரத்தில் முன்னேற்றகரமான நிலையில் உள்ளது.

## மொன்டநீக்ரோ தேர்தலில் சோசலிஸ ஜனநாயக மக்கள் கட்சி வெற்றி



பேர்ல்கன் பிராந்திய நாடுகளுள் ஒன்றான மொன்டநீக்ரோவின் பாராளுமன்றத் தேர்தலில் ஜனநயாக சோசலிஸக் கட்சி வெற்றியீட்டியுள்ளது. இக்கட்சி 31 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஆட்சியமைப்பதாயின் குறைந்தது 42 ஆசனங்கள் அவசியமாகும். இந்நிலையில், அந்நாட்டிலுள்ள சிறுபான்மைக் கட்சிகளோடு சோசலிஸ மக்கள் கட்சி பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது.


சேர்பியா தலைமையிலான யூகொஸ்லாவியாவில் பலாத்காரமாக இணைக்கப்பட்டிருந்த மொன்டநீக்ரோ 2000 களின் தொடக்கத்தில் தனித் தேசமாகப் பிரிந்து சென்றது. 620,000 மக்களைக் கொண்டுள்ள இந்நாடு பொஸ்னியா, சேர்பியா, அல்பேனியா, ஸ்லோவேனியா என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ளது.

மொன்டநீக்ரோ நேட்டோ அணியில் இணைவதா அமெரிக்காவுடன் இணைவதா என்பது குறித்து வாக்காளர்களிடையே பாரிய கருத்து பேதம் நிலவுவதை தேர்தல் முடிவுகள் காட்டுவதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## பிரிக்ஸ் நாடுகளை இந்தியா தவறாக வழிநடாத்துகின்றதா? பாகிஸ்தான் கேள்வி

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்ட பிரிக்ஸ் அமைப்பின் மாநாடு சமீபத்தில் இந்தியாவின் உல்லாசத்துறை நகரான கோவாவில் நடைபெற்றது. இதன் பொழுது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்ட கருத்துக்கள் பிராந்தியத்தில் பெரும் சர்ச்சையை எழுப்பியுள்ளது.

மோடி ஆற்றிய உரையில், பாகிஸ்தான் பயங்கரவாதத்தின் தாயகம் என்று வெளிப்படையாகத் தெரிவித்தமை பாகிஸ்தான் அரசியல் வட்டாரத்தில் கோபத்தைக் கிளறியுள்ளது. இதற்குப் பதிலளித்துள்ள பாகிஸ்தான். பாகிஸ்தான் மண்ணிலும் காஷ்மீரிலும் இந்தியா கட்டவிழ்த்து வரும் பயங்கரவாதத் தாக்குதல்களை மூடி மறைப்பதற்கு மோடி இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் என்று கூறியுள்ளது.



பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சின் ஆலோசகர் இந்தியா பயங்கரவாதம் குறித்துப் பேசுவதற்கு எவ்வித தார்மீக அருகதையும் அற்ற நாடு என்று மோடியைச் சாடியுள்ளார்.

## அலெப்போ வான் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் கொலை



சிரியாவின் அலெப்போ நகர் மீது ரஷ்ய, சிரிய கூட்டுப் படையினர் மேற்கொண்டு வரும் வான் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 உறுப்பினர்கள் கொல்லப்பட்டமை அதிர்ச்சியளித்துள்ளது. கிழக்கு அலெப்போவிலேயே கடந்த 17 ஆம் திகதி இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அலெப்போ நகரைக் கைப்பற்றும் தீவிர இராணுவ நடவடிக்கையில் ரஷ்ய, சிரிய கூட்டுப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒன்றரை மாத குழந்தைகள் இருவரும் எட்டு வயதுக்குக் குறைவான சிறுவர்களும் உள்ளடங்குவர். இதுவரை சிரிய யுத்தத்தில் 4 இலட்சம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பஹ்ரைனில் எதிர்க்கட்சியினருக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை குறித்து விமர்சனம்

பஹ்ரைனில் ஆளும் அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்பட்டு வரும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் சிறையிடப்பட்டுள்ளனர். இது குறித்து மனித உரிமை நிறுவனங்கள் தமது விமர்சனங்களை எழுப்பியுள்ளன.

2011 அறபு வசந்தத்திற்குப் பின்னர் பஹ்ரைனில் செயற்படும் ஷீஆ அரசியல் இயக்கங்கள், சுன்னி அரசாங்கத்திற்கு எதிரான வீதி ஆர்ப்பாட்டங்களையும் மறியல் போராட்டங்களையும் நடத்தி வருகின்றன. இந்நடவடிக்கைகள் அரசியல் ஸ்திரத்தை குலைக்கும் செயல்பாடுகள் என அரசாங்கம் குற்றம் சாட்டுகின்றது. இப்பின்னணியிலேயே கைது நடவடிக்கைகள் இடம்பெறுவதாக அரச தரப்பில் நியாயம் தெரிவிக்கப்படுகிறது.



பஹ்ரைன் ஷீஆ பெரும்பான்மையைக் கொண்ட நாடாகும். மிக நீண்டகாலமாக சுன்னிகள் அதிகாரத்தில் நீடிக்கின்றனர். ஈரான் ஷீஆ எதிர்க்கட்சியினரை அரசாங்கத்திற்கு எதிராகத் தூண்டி வருவதாக பஹ்ரைன் அரசாங்கம் குற்றம் சுமத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## தென் சூடானில் கடும் மோதல்



சூடானிலிருந்து பிரிந்து சென்ற தென் சூடானில் அரச படையினருக்கும் சூடான் மக்கள் தேசிய இயக்கத்திற்கும் இடையில் நடைபெறும் கடும் சமரில் ஒரே நாளில் 56 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் தென் சூடான் அரச படையினரும் உள்ளடங்குவதாக வடுதலை இராணுவத்தின் பேச்சாளர் பிரிகேடியர் ஜெனரல் லுல் ஹுவாய் தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்காத நிலையில், மீண்டும் மோதல்கள் எழுந்துள்ளன. தென் சூடானின் இரண்டாவது மிகப் பெரிய நகரான மலக்கால் நகரில் மோதல்கள் தீவிரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன் நிலமும் சமூகமும்



அறபு மூலம் : கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ்
தமிழில்: யூ.கே.றமீஸ் (விரிவுரையாளர், பாதிஹ்.)

கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ், பலஸ்தீன் வரலாறு மற்றும் அரசியல் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். பலஸ்தீனின் பண்டைய வரலாறு முதல் சமகால அரசியல் போக்கு வரை நீண்டு செல்லும் அவரது ஆய்வுகள் நான்கு பாகங்களைக் கொண்ட நூல்களாக வெளிவந்துள்ளன. 2002 இல் மலேசியாவின் கோலாலம்பூரில் மீள்பதிப்பைக் கண்ட அவரது நூலின் முதற் பாகம் இங்கு தமிழில் பெயர்க்கப்படுகின்றது.

## பலஸ்தீனர்கள் தமது நிலங்களை யூதர்களுக்கு விற்றார்களா?

1917-1948 காலங்களில் பலஸ்தீன் பிரித்தானிய ஆக்கிரமிப்பின் கீழ் காணப்பட்டது. இவர்கள்தான் சியோனிச திட்டங்களை நடைமுறைப்படுத்தினார்கள். யூதர்களுக்கான இனவாத நாட்டை உருவாக்கி கொடுத்தார்கள். காலனித்துவ பிரித்தானியா வழங்கிய அனைத்து நலன்களையும் யூதர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள்.

பலஸ்தீன தேசியவாத அமைப்புகள் இந்த யூத குடியேற்றங்களை தடுத்து நிறுத்துவதற்காக தன்னாலான அனைத்து பொருளாதார, அரசியல், ஊடக எதிர்ப்புகளை முன்னெடுத்தார்கள். பல புரட்சிகள், போராட்டங்களில் ஈடுபட்டார்கள். ஆனால், எதுவும் கைகூடவில்லை. பிரித்தானிய ஆக்கிரமிப்பின்போது 1380000km² (5.1%) பலஸ்தீன நிலம் யூதர்களுக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் பலஸ்தீனர்களால் விற்கப்பட்டவையா? பிரித்தானிய அரசாங்கம் அரச காணியை (அமீரக நீலம்) யூதர்களுக்கு வழங்கியது. (அல்லது) வெளிநாடுகளில் வசித்துவந்து பலஸ்தீனர் அல்லாத பெரும் நிலச்சுவாந்தர்கள் அதனை விற்றார்கள். இந்த சில உரிமையாளர்கள் தமது நிலங்களில் நுழைவதை உத்தியோக பூர்வமாக அல்லது நடைமுறை ரீதியாக தடுத்துவிட்டார்கள். இதன் காரணமாகத்தான் அதனை அவர்கள் விற்பனை செய்தார்கள். 1869களில் உஸ்மானிய சாம்ராஜ்யம் அரச நிலங்களை விற்று பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க முனைந்தது. சில லெபனான் செல்வந்த குடும்பங்கள் அவற்றை கொள்வனவு செய்தன. இக் குடும்பங்கள் சுமார் 625000km² நிலத்தை விற்றார்கள். ஸர் ஸக் என்ற குடும்பம் மாத்திரம் 2 லட்சம் km² நிலத்தை சியோனிச யூதர்களுக்கு மரஜ் இப்னு ஆமிர் என்ற பிரதேசத்தில் விற்பனை செய்தது. 22 பலஸ்தீன கிராமங்களை சேர்ந்த 2746 குடும்பங்கள் அடித்து விரட்டப்பட இது காரணமாகியது. உண்மையில் இவை நூற்றுக்கணக்கான வருடங்கள் விவசாயம் செய்யப்பட்ட வளமான நிலங்களாகும்.

இதேபோன்றுதான் வட பலஸ்தீனில் பகீரா பிரதேசத்தில் 120000km² நிலம் விற்கப்பட்டது. இவை 15000 பலஸ்தீனர்கள் வெளியேற்றப்பட காரணமாகியது. ஆலு ஸலாம், ஆலு தயான், ஆலு கப்பானி, ஆலு யூசுப், ஸபா, துவைனி, ஜஸாஇர்லி, ஷம்ஆ, கூதலி, மார்தினி போன்ற குடும்பங்கள்தான் தமது நிலங்களை சியோனிச யூதர்களுக்கு விற்பனை செய்தவர்களாவர். இவர்கள் பெரும்பாலும் லெப்னானிய (அல்லது) சிரியா நாட்டு குடும்பங்களாகும்.

1920 முதல் 1936 வரை இவ்வாறு பெற்றுக்கொண்ட நிலங்களில் 55.5% நிலங்கள் விவசாய நிலங்களாகும்.

இவ்வாறு விற்பனை செய்தது மாத்திரமல்ல நில உரிமையாளர்கள் நிலத்தில் பிரவேசிப்பதை தடுத்து விட்டார்கள். குறிப்பாக பலஸ்தீனை விட்டும் சிரியா, லெபனான் போன்ற நாடுகளை பிரித்தானியாவும் லெபனானும் சேக்ஸ்-பேகோ உடன்பாட்டின் மூலம் பிரித்துக் கொண்டதன் பின்னர் அந்நியர்கள், வேறு நாட்டை சேர்ந்தவர்கள் என்று அவர்களை தடுத்து விட்டார்கள். இது நிலத்தை கொள்ளையடிக்க ஏதுவாகியது.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் பலஸ்தீன அரபிகள் விற்பனை செய்ததன் மூலம் யூதர்கள் கையகப்படுத்தியது 260000km² நிலமாகும். பலஸ்தீன விவசாயிகளை பிரித்தானிய காலணித்துவம் நெருக்கடிக்குள்ளாக்கியதன் மூலமாகவே இதனை செய்து கொண்டார்கள். அரபு உரிமையை பரித்தெடுத்து யூத நலன்களை நிறைவேற்றிக் கொடுத்தார்கள். ஒரு சிறிய குழுவினர் பணத்தை காட்டி ஏமாற்றப்பட்டனர். இவ்வாறான ஆசை வார்த்தைகளுக்கு சிலர் ஏமாறுவதென்பது சாதாரண ஒரு நிலமைதான். இதனை வைத்து பலஸ்தீனர்களை குறைகூறி குறைத்து மதிப்பிடுவது ஏற்க முடியாத ஒரு விடயமாகும். ஆனால், பெருவாரியான பலஸ்தீனர்கள் இதனை எதிர்த்து போராடினார்கள். பெரும் புரட்சிகளைகூட மேற்கொண்டார்கள். சிலர் கொல்லப்பட வேறு சிலர் நாடுகடத்தப்பட்டார்கள். 1936முதல் 1939வரை இதுபோன்று பல நிகழ்வுகளை அடையாளப்படுத்தலாம்.

1948வரை பலஸ்தீனர்களிடமிருந்து யூதர்கள் பெற்றுக்கொண்ட நிலம் 1%ஐ தாண்டாது. திட்டமிடப்பட்ட இடப்பெயர்வுகள், குடியேற்றங்கள், கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் யூதர்களால் முடியவில்லை. பலஸ்தீனர்கள் இலகுவாக தமது நிலங்களை விட்டுக் கொடுக்கவுமில்லை.

நிலவேட்டைக்கு எதிராக 30 களில் பலஸ்தீனர்கள் கடுமையாக இயங்கினார்கள். அல்ஹாஜ் அமீனுல் ஹுஸைனியின் தலைமையில் செயல்பட்ட இஸ்லாமிய உயர் சபை (மஜ்லிஸுல் இஸ்லாமி அல் அஃலா)யும் பலஸ்தீனின் அறிஞர்களும் இவ்விடயத்தில் நுணுக்கமாக செயல்பட்டார்கள்.

1935 ஜனவரி 25ம் திகதி நடைபெற்ற பலஸ்தீன் அறிஞர்கள் சபையின் மாநாட்டில் **"ஒரு சான் பலஸ்தீன் நிலத்தை யூதர்களுக்கு விற்பனை செய்வது கூட ஹறாம்"** என்ற பத்வாவை ஏகோபித்த முடிவுடன் (இஜ்மா) வெளியிட்டார்கள். நில விற்பனை செய்பவர், அதற்கான தரகு வேலைகளில் ஈடுபடுபவர், இவற்றை ஆகும் என்று கருதுபவர்கள் மார்க்கத்திலிருந்து தடம்புரண்டு விட்டவர்களாவும், முஸ்லிம்களைவிட்டு நீங்கி விட்டவர்களாகவும், முஸ்லிம் மையவாடிகளில் இத்தகையவர்களை அடக்கம் செய்ய கூடாது என்றும், இவர்களை பகிரங்கப்படுத்த வேண்டும். அவர்களுடன் உறவுகளை துண்டிக்க வேண்டும் என்றும் மார்க்க தீர்ப்புகள் வழங்கப்பட்டன. நில விற்பனைக்கு எதிராக அனைத்து பலஸ்தீன நகர்களிலும், கிராமங்களிலும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டார்கள். தமது நிலங்களைவிட்டுக் கொடுக்க மாட்டோம் என்ற உடன்படிக்கைகள் பொது மக்களுடன் மேற்கொள்ளப்பட்டன.

விற்பனை செய்யப்படலாம் என்ற அபாயத்திற்கு உட்பட்டிருந்த அதிகமான நிலங்களை பாதுகாத்துக்கொள்ள இதன் மூலம் முடியுமாய் இருந்தது. தீர் அம்ர், ஸீதா அதீல், தீரா போன்ற நிலங்களை இஸ்லாமிய உயர்சபை விலை கொடுத்து வாங்கியது. யாபாவில் மாத்திரம் 60 கிராமங்களை இவ்வாறு விற்பதனை தடுத்து நிறுத்தினார்கள். சுன்தூகுல் உம்மா என்ற பெயரில் அஹ்மத் ஹில்மி பாஷாவின் தலைமையில் இயங்கிய தேசிய அமைப்பு இவ்விடயத்தில் பெரும் பங்காற்றியது. 300000km² நிலத்தை வடகிழக்கு பலஸ்தீனில் காப்பாற்ற இவர்களால் முடியுமாய் இருந்தது.

உண்மையில் பலஸ்தீனர்கள் நிலங்களை விற்பதனால் ஏற்பட்ட இழப்பைவிட மிகவும் பாரிய இழப்புகள் 1948 யுத்தத்தின் தோல்வி காரணமாகவே ஏற்பட்டது. இதன் பின்னர்தான் 77% மான பலஸ்தீன நிலம் ஆக்கிரமிக்கப்பட்டது. நிலங்கள் சூறையாடப்பட்டன. 1967 யுத்தத்தைத் தொடர்ந்து எஞ்சியுள்ள நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டன. இன்றுவரை நிலங்களை விற்ற பலஸ்தீனர்கள் இழிவாகவே நோக்கப்படுகின்றார்கள்.

# பாலைவனச் சிங்கம்

(சுலைமான் ஹாதிர்)



வரலாற்று நவீனம் | அங்கம் - 18 | ஹமதானி

## பகலில் அஸ்தமித்த பகலவன்!

சுலைமானின் வாழ்க்கைப் புத்தகத்தில் இது ஒரு புதிய பக்கம், சிறைவாசம் என்பது அவனுக்குப் புதிய அனுபவமே! பாலைவனம் ஒன்றின் எல்லையை அண்மியதாக அமைந்திருந்தது அந்த சிறைகூடம், பாரிய குற்றங்கள் புரிந்த குற்றவாளிகளே அதில் அடைக்கப்பட்டிருந்தனர். சுலைமான் ஹாதிரும் கடந்த சில நாட்களாக ஆயுள் தண்டனை பெற்று அதில் தான் வாசம் செய்து வந்தான். பாழடைந்த அந்தச் சிறையில் ஒரே வௌவால் நெடி. அவன் அடைக்கப்பட்டிருந்த சிறை அறைக்கு அண்மையில் ஒரு சிறுநீர் கழிவுப் புறையும் இருந்தது. காற்று வீசும் போது அதிலிருந்து கிளம்பிய துர்நாற்றத்துடன் வௌவால் நெடியும் சேர்ந்து அவனுக்குக் குமட்டலை ஏற்படுத்தியது.

சுலைமான் ஹாதிர் ஒரு மூலையோரமாக அமர்ந்து ஏனைய குற்றவாளிகள் உரையாடுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான். ஒவ்வொரு குற்றவாளியும் தாம் தாம் செய்த வீரபிரதாபச் செயல்களைக் கூற மற்றவர்கள் அதனைக் கேட்டு உற்சாகம் அடைவதைக் கண்டான். அப்பொழுது சுலைமான் "சிறை கூடங்கள் என்பன குற்றவாளிகளை சீர்செய்து நெறிப்படுத்தி அவர்களை மீண்டும் சமூகத்திற்கு நல்ல மனிதர்களாக அனுப்பும் இடங்களன்று. மாறாக குற்றவாளிகள் தமது அநுபவங்களைப் பகிர்ந்து கொண்டு விடுதலை பெற்றுக் செல்லும் போது முன்பு இருந்ததை விட மோசமான குற்றவாளிகளாக வெளியேற்றும் இடமே" என ஒரு கணம் நினைத்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் சிறை கூடத்தின் புழக்கடைக் கதவு திறக்கப்பட்டது. சுமார் நாலைந்து பத்திரிகை நிருபர்கள் சுலைமானைப் பேட்டி காண்பதற்காக வந்தனர். அவர்கள் அனைவரும் யூதர்கள். வந்தவர்கள் சுலைமானை திருதிருவென விழித்துப் பார்த்தனர். அவனைப் பார்த்து கேலியாகப் பேசி தமக்குள் எள்ளி நகையாடினர்.

சுலைமானோ அமைதியாகவே இருந்தான். அப்பொழுது ஒரு பத்திரிகை நிருபர் (?) அவனை நெருங்கி, "உம்மைப் பேட்டி காண வந்திருக்கிறோம். எமது நிருபர்களின் கேள்விகளுக்கு உண்மையான பதில்களை எதிர்பார்க்கின்றோம்.." என்றான். சுலைமானோ விடை ஏதும் கூறாமல் மறுபுறம் பார்த்துக் கொண்டான். அவர்கள் உண்மையான நிருபர்கள் அல்ல என்பதை தன்மனதினால் அளவிட்டுத் தான் அவ்வாறு நடந்து கொண்டான். தொடர்ந்து நிருபர்கள் (?) கேட்ட கேள்விகளுக்கும் அவன் பதிலளிக்கவில்லை. அப்பொழுது தான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

அவர்களுள் ஒருவன், "எங்கள் நாட்டவர்களைக் கொன்ற உமக்கு இவ்வளவு திமிரா? என்றவாறு கத்திக் கொண்டு சுலைமானின் கன்னத்தில் "பளார்" என அறைந்தான். அந்த அடியால் சுலைமானின் முகம் கன்றிச் சிவந்துவிட்டது. அதற்குள் மற்றொருவன் அவனது புகைப்படக் கருவியைக் கையில் எடுத்து ஓங்கி சுலைமானின் தலையில் அறைந்தான். அந்தோ. அந்த யூதனின் கரங்கள் அழியட்டும்! அவனது இனமும் அழியட்டும்! சுலைமானின் கபாலம் வெடித்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது.



அவை அவனது முகத்தினூடே இரத்த வெள்ளமாகப் பாய்ந்தது. அதனையும் பொருட்படுத்தாமல் மற்றைய யூதர்கள் அவனை நையப்புடைத்தனர். சிறைக் காவலாளியோ இதனை மகிழ்வோடு பார்த்து நின்றான். சற்று நேரத்திற் கெல்லாம் சுலைமான் ஸ்மரணையற்றது போன்று மயங்கி வீழ்ந்தான்.

அப்பொழுது, அங்கே ஓர் இராணுவ வாகனம் வந்து நின்றது. இராணுவத்தினர் காயமடைந்த சுலைமானை சொஸ்தம் (?) செய்ய இராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். ஆஸ்பத்திரியை அடைந்த அரை மணித்தியாலத்தின் பின் சுலைமான் ஹாதிர் மயக்கம் தெளிந்து கண்திறந்து கொண்டான். அப்பொழுது கபாலத்தில் ஏற்ப்பட்ட காயத்தினதும் திரேகத்தின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட ஊமைக் காயங்களின் வலியை மெல்லமெல்ல உணரலானான்.

மயக்கம் தெளிந்த சுலைமானை இராணுவ ஆஸ்பத்திரியின் மற்றோர் அறைக்கு எடுத்துச் சென்றனர். அங்கு மூன்று இராணுவத்தினர் அவனைப் புடை சூழ நின்றிருந்தனர். அவர்களிலொருவன் சுலைமான் ஹாதிரின் கை, கால்களில் இரும்புத் தளையைப் பூட்டினான். மற்றைய இருவரும் என்ன செய்தனர்? நினைக்கவே நெஞ்சம் பதறும். அந்தப் பாதகச் செயலை யார் செய்தனர். வெந்த புண்ணில் வேல் குத்துவது போன்று காயப்பட்ட சுலைமானின் கைகால்களில் உள்ள நகங்களைப் பச்சையாகக் கழற்றுகின்றனரே! ஹாதிர் அத்தனை வேதனைகளின் மத்தியிலும் தணலிடைப் புழுவாகி, "அல்லாஹ் அல்லாஹ்" என்று விசும்பி அழுதான். அவனது வேதனை தாங்க முடியாத அந்தக் கதறலை வானத்து இரட்சகனைத் தவிர வேறு யார்தான் கேட்க..?

ஆனால் அவனது அந்தக் கதறலையும் நிறுத்த வாயில் துணியைத் திணிக்கின்றனரே அந்தப்பாவிகள்! சாட்டைகள் அவனது முதுகையும் அங்கங்களையும் ருசி பார்த்து இரத்தத்தை உமிழ்ந்து கொட்டியது. உடல் முழுவதிலிருந்தும் நரம்புகள் வெடித்து குருதி பீறிட்டுப் பாய்ந்தது. இருந்தும் வலிமையான சுலைமானின் யாக் கையிலிருந்து உயிர் பிரியவே இல்லை! ஆனாலும்.. கல்நெஞ்சம் படைத்த இராணுவத்தினராலும் அதனைப் பார்க்க சகிக்க முடியவில்லை போலும் ஐயோ அந்த இராணுவ முரடன் என்ன செய்கிறான்? அந்தப் பாதகனின் தொடுங்கரத்தை ஒழிக்க எவருமில்லையோ? ஆ..ஆ.. சுலைமானின் கழுத்திலே இரும்பு வாரைச் சுற்றி.. என்ன செய்கிறான்? கொடிய இரு கரங்களினாலும் இழுத்தான். சில கணங்களில் சுலைமான் ஹாதிரின் தூய ஆத்மா "லாஇலாஹஇல்லல்லாஹ்" என்று சொல்லிக் கொண்டு அவனது காயப்பட்ட உடம்பிலிருந்து புறப்பட்டுச் சென்றது! உடம்பின் துடிப்பு அடங்க அந்த முரடனின் பிடியும் தளர்ந்தது.

சுலைமான் ஹாதிரே நீ மரணித்து விட்டாயா? இல்லை இல்லை உனது தரிப்பிடம் நித்திய வாழ்விற்கான பயணத்தை அல்லவா மேற்கொண்டு விட்டாய்! இதோ உனது பரிசுத்த ஆத்மாவை சுமந்து செல்ல சுவர்க்கத்து சோபியர்களும் அப்ஸராஸ்திரீகளும் போட்டி போடுகின்றனரே!

சுலைமான் ஹாதிர் நீ இறக்கவில்லை. ஏனெனில் உனது பரிசுத்த இரத்தத்தையும் மாமிசத்தையும் இஸ்லாமிய விருட்சத்திற்கு நீராகவும் உரமாகவும் அளித்தாயே.. எனவே, இஸ்லாம் வாழும்பொழுதெல்லாம் முஸ்லிம் நெஞ்சங்களில் நீ வாழ்ந்து கொண்டு இருக்கிறாய்..!

சுலைமானே உனக்கு நாம் எதனைக் காணிக்கையாக வழங்க?! எதனைத் தான் சமர்ப்பிக்க? நபிகளார் தன் மகன் இஷ்ஹாக் மரணித்த போது கூறிய அந்த வார்த்தைகளையே நாமும் சமர்ப்பித்து, இன்ஷா அல்லாஹ் நீரும் வாசகர்களாகிய நாமும் ஜன்னதுல் பிர்தௌஸில் சந்திப்போம் எனக் கூறி விடைபெறுகின்றோம்.

إن العَيْنَ لَتَدْمَعُ وَإنَّ القَلْبَ لَيَحْزَنُ
وَلاَ نَقُوْلُ اِلاَّ مَا يَرْضَى اللهُ وَإنَّا عَلَى فِرَاقِكَ
يَا إبْرَاهِيْمُ (يَا سُلَيْمَانُ) لَمَحْزُوْنُوْن

நிச்சயமாக கண்கள் கண்ணீரால் பனித்துவிட்டன. உள்ளமோ தோயாது கவலை கொள்கிறது! அல்லாஹ் திருப்புதிப்படு பவற்றையே அன்றி நாம் எதனையும் கூறவே மாட்டோம். இப்றாகீமே! (சுலைமானே) உமது பிரிவால் நாம் மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்து விட்டோம்!"

முற்றும்.

அல்ஹம்துலில்லாஹ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• முஷாஹித் அஹ்மத்



# காஷ்மீர்:

# எரிந்துகொண்டிருக்கும் இமாலயப் பள்ளத்தாக்கு

முதலில் போரைத் தொடங்கியது இந்தியாவா? பாகிஸ்தானா?

முதலில் அணுவாயுதத்தைப் பயன்படுத்தப் போவது யார்?

அமெரிக்கா பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை

இரு நாடுகளுக்கும் இடையிலான ராஜதந்திர உறவுகள் பாதிக்கப்பட்டுள்ளது. எந்த நேரத்திலும் இரு நாடுகளுக்கும் இடையில் போர் மூழும் சாத்தியம்.

இப்படியான பரபரப்பான செய்திகளுக்குள் மறைக்கப் படும் விடயம்தான் காஷ்மீர் மக்களின் பிரச்சினை.

இந்திய அடக்குமுறையை எதிர்த்து மறியல் போராட்டம் நடத்தும் மக்கள் இந்தியாவின் பார்வையில் அத்துமீறுகின்றவர் கள், பயங்கரவாதிகள், ஊடுருவல்காரர்கள் என்று இந்திய ஊடகங்கள் பரப்புரை செய்கின்றன. பாகிஸ்தானே எல்லாப் பிரச்சினைக்கும் காரணம் என்பது அவர்களின் பிரச்சாரம். இன்னொரு பக்கம் காஷ்மீர் நெருக்கடிக்கு இந்தி யாவே முழுக் காரணம் என்பது பாகிஸ்தானின் பிரச்சாரம்.

இப்படி இரு நாடுகளினதும் அதிகாரக் கயிறுழுப்புக்கு காஷ்மீர் மக்கள் பலியாக்கப் பட்டு 60 ஆண்டுகள் கடந்து விட்டன. இந்திய-பாகிஸ்தான் பிரச்சினையை அடக்கப்பட்டு வரும் காஷ்மீர் மக்களின் நலனிலிருந்து பார்ப்பதற்கு எல்லோரும் தவறுகின்றனர். காஷ்மீர் மக்கள் இந்த இரு நாடுகளையும் ஆக்கிரமிப்பாளர் கள் என்று கூறிக் கொண்டிருக்க, மறுபுறம் இரு நாடுகளும் மாறி மாறி, பரஸ்பரம் ஆக்கிரமிப் பாளர்கள் என குற்றம்சாட்டிக் கொண்டிருக்கும் வினோதத்தைக் காண்கின்றோம்.

ஜம்மு காஷ்மீர் பிராந்தியம் 217,000 பரப்பைக் கொண்டது. இதனை விடச் சிறிய நாடுகள் 93 உலகில் உள்ளன. இதில் இந்தியா ஆக்கிரமித்துள்ள பகுதி 135 சதுர கி.மீற்றர். அதில் 1962 இலிருந்து சீனாவால் ஆக்கிர மிக் கப்பட்டுள்ள 35,000 சதுர கி.மீ. பரப்பும் உள்ளடங்கும். ஆஸாத் காஷ்மீர் எனும் 11,000 சதுர கி.மீ. பகுதி பாகிஸ்தானின் மறைமுக ஆக்கிரமிப்பில் உள்ளது. கில்கித் பாகிஸ்தான் எனும் 71,000 சதுர கி.மீ. பகுதி பாகிஸ்தானின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்த அத்தனை பகுதியிலு மாக 14 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இது உலகிலுள்ள 127 நாடுகளின் சனத்தொகையை விடவும் அதிகமாகும். இந்திய ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் 8.5 மில்லியன் மக்களும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட ஆஸாத் காஷ்மீர் மற்றும் கில்கித் பாகிஸ்தானில் முறையே 2.5 மில்லியன் மற்றும் 1.2 மில்லி யன் மக்கள் வாழ்கின்றனர். அவர்களுள் 77%மானோர் முஸ்லிம்களாவர். ஏனையோரில் 20% இந்துக்களாகவும் 3% சீக்கியர்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்களாகவும் உள்ளனர்.

தற்போதைய ஜம்மு காஷ்மீர் மாநிலம் என்பது இரண்டாவது ஆங்கில-சீக்கிய யுத்தத்தின் பின்பு பிரித்தானியர் காஷ்மீர் மீதான கட்டுப்பாட்டினை ஜம்முவி லிருந்து பட்டத்து மகாராஜா விடம் ஒப்படைத்ததன் மூலம் 1847 இல் உருவாக்கப்பட்டது. இப்படி ஒரு மாநிலம் உருவாக் கப்பட்டமைக்கு உள்நோக்கமும் உண்டு. இந்தியாவுக்கும் ஆப்கா னிஸ்தான், சீனா என்பவற்றுக் கும் இடையில் ஒரு தொங்கு அரசை (Buffer State) உருவாக் குதே இதன் நோக்கமாகும்.

இந்தியா சுதந்திரமடைந்த போது அப்போதைய கவர்னர் ஜெனரல் மொவ்ன்ட் பேர்ட்டன், பிரபுவின் நிர்ப்பந்தத்தினால் ஏராளமான சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைவது என்ற தீர்மானத்தை எடுத்தன. காஷமீரும் இணைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதன் பெரும் பகுதி மக்கள் முஸ்லிம்கள். ஆட்சியாளர்களோ இந்துக்கள். காஷ்மீர் தொடர்ந் தும் சுதந்திரமாக இருக்கும் என இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னர் கூட மகாராஜா ஹிரிஸ்சிங்கிற்கு நம்பிக்கை ஊட்டப்பட்டிருந்தது.

எனினும், ஆப்கானிலிருந்து பஸ்தூன்ஸ் இனக் குழுவினர் படையெடுத்ததைத் தொடர்ந்து இந்த நம்பிக்கை தளர்ந்தது. மகாராஜா ஹரிஸ்சிங் இந்தியா





வின் உதவியை நாடினார். இந்தியாவுக்கு இது சாதகமானது. இந்தியா தனது படையை அனுப்பியது. விளைவாக, 1947 ஒக்டோபர் 27 இல் காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் ஒப்பந்தத்தில் ஹரிசிங் கையொப்பமிட்டார். தொடர்ந்து இந்திய இராணுவம் காஷமீரில் குவிக்கப்பட்டது.

இன்று 11 காஷ்மீரியர்களுக்கு 1 இந்திய இராணுவம் என்ற விகிதத்தில் உலகிலேயே மிகச் செறிவாக இராணுவமயமாக்கப் பட்ட பிராந்தியம் காஷ்மீர் ஆகும். ஹரிசிங் ஒப்பமிட்ட இணைப்பு ஆவணத்தில் 7 ஆவது வாசகத்தின் பிரகாரம், இந்த ஆவணத்தில் ஏதேனும் ஏற்பாடு இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்பு எதனையும் ஏற்குமாறு என்னை வற்புறுத்து வது அல்லது அத்தகைய அரசியல் அமைப்பு எதன் கீழும் இந்திய அரசாங்கத்துடன் உடன் படிக்கை செய்து எனது சுதந்தி ரத்தை மட்டுப்படுத்துவது ஆகாது என்கிறது.

இந்த இணைப்பின் காரணமாகவே இந்திய அரசியலமைப்பின் 370 ஆவது உறுப்புரை சேர்க்கப்பட்டது. அதன்படி இந்திய அரசியலமைப்பு திருத்தங்கள் போது ஜம்மு காஷ்மீர் விடயத்தில் அந்த மாநிலத்தின் சம்மதமின்றி எந்த முடிவும் மேற்கொள்ள முடியாது. மட்டுமன்றி, காஷ்மீருக்கு மாத்திரம் இந்தியாவின் எந்த மாநிலத்திற்கும் இல்லாத வகையில் தனியான மாநில அரசிலமைப்பைக் கொண்டுள்ளது.

ஆரம்பத்தில் கண்ட உடன்பாட்டின்படி மாநிலத்தில் இணைப்பு விவகாரம் பிணக்கிற்கு உட்படுமானால் இணைப்பானது அந்த மாநில மக்களது விருப்பத்தின்படியே தீர்மானிக்கப்படும். காஷ்மீரைப் பொறுத்தமட்டில், அங்கு சட்ட மும் ஒழுங்கும் நிலைநாட்டப் பட்டு, படையெடுப்பாளர் அகற்றப்பட்டதும் இணைப்பு தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படும் என இந்தியத் தரப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டது. ஆனால், இன்றுவரை அப்படி யொரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. அதனை நடத்தாமல் இந்திய அரசு காஷ்மீரியர்களை ஏமாற்றி வருகிறது.

மேற்படி உத்தரவாதத்தில் ''படையெடுப்பாளர்கள் அகற்றப்பட்டதும்'' எனும் வாசகத்தை சாதமாக்கிக் கொண்டு வாக்கெடுப்பை இழுத்தடித்து வருகின்றது. 'படையெடுப்பாளர்களை' அகற்றுவதற்காகவே ஏற்கனவே 3 யுத்தங்களை இந்தியா மேற் கொண்டது. பாகிஸ்தானையே அது படையெடுப்பாளர்கள் என்கிறது.

சுதந்திரமான சர்வஜன வாக் கெடுப்பொன்றை நடத்தினால் அதன் முடிவுகள் எப்படியிருக் கும் என்பதை விளங்கிக் கொண்டே இந்தியா இன்னமும் நொண்டிச் சாட்டுக்களைக் கூறிக்கொண்டு வாக்கெடுப்பை இழுத்தடித்து வருகின்றது.

காஷ்மீர் மக்கள் ஏமாற்றப் பட்டதும், அவர்கள் மீது ஆயுத அடக்குமுறை கட்டவிழ்க்கப் பட்டதுமே ஜனநாயகக் கோரிக்கைகளை முன்வைத்து விடுதலை இயக்கங்கள் தோன்றுவதற்கான மூல காரணமாகும். இன்று இந்திய-பாகிஸ்தான் ஆதரவு இயக்கங்கள் உள்ளிட்டு, காஷ்மீர் தனிநாடாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இயக்கங்கள் வரை 43 ஆயுத இயக்கங்கள் இங்கு போராடுகின்றன.

எவ்வாறாயினும் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்கும் இரு நாடுகளுமே காஷ்மீர் மக்களைப் பொறுத்த வரை எதிரிகள்தான். இதுவரை இரு நாடுகளும் மக்களை நசுக்கு வதற்கு மேற்கொண்டு வரும் அட்டூழியங்களும் அடக்குமுறை களும் சொல்லில் மாளாதவை. குறிப்பாக, இந்திய இராணுவம் ஈடுபட்டு வரும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும் ஆட்கடத்தல்களும் நம்மைத் திடுக்கிட வைக்கின்றன.

உலகத்தின் பார்வையிலிருந்து இவற்றை மூடி மறைக்கும் மோசமான ஊடகக் கொள்கை யொன்றை இந்தியா பின்பற்று கின்றது. காஷ்மீர் மக்களின் விடுதலை உணர்வை பயங்கர வாதமாக முத்திரை குத்துவது காஷ்மீர் மக்களுக்கு மட்டுமன்றி, தெற்காசியப் பிராந்தியத்திற்கே இந்தியா இழைக்கும் பெரும் அநியாயமாகும்.

பாகிஸ்தானும் கௌரவப் பிரச்சினைகளை ஓரமாக வைத்து விட்டு, காஷ்மீரில் ஓடும் இரத்த வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும் ராஜதந்திரப் போரில் குதிக்க வேண்டும். இதுவே இரு நாடு களினதும் அதிகாரக் கயிறிழுப் புக்குப் பலியாக்கப்பட்டு வரும் காஷ்மீரியர்களின் ஒரே எதிர்பார்ப்பாகும்.

இந்தியாவா, பாகிஸ்தானா, முதலில் போரைத் தொடங்கப் பொவது யார் என்ற பரபரப்பான செய்தியல்ல காஷ்மீர் மக்களின் பிரச்சினை. 6 தசாப்தங்களாக இரத்தம் சிந்திக்கொண்டிருக்கும், பூலோக சுவர்க்கம் என வர்ணிக்கப்படும் காஷ் மீரின் உண்மையான விடுதலையே அவர்களின் ஒரே ஏக்கம்.

சர்வதேச சமூகமும் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு மதிப்பளித்து தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

# பொஸ்பரஸ் கரையினிலே...

## துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 07

சுல்தான் 2 ஆம் அப்துல் ஹமீதை நெருங்கிய யூதர்கள் பலஸ்தீனில் குடியேறுவதற்கு ஒரு பிரதேசத்தை ஒதுக்கித் தருமாறு கேட்டனர். சுல்தானின் கையில் ஐந்து மில்லியன் லீராக்களை அன்பளிப்பாகக் கொடுத்தனர். துருக்கியின் ஆட்சி யைப் பாதுகாக்க உதவுவதாக உறுதியளித்தனர். வெளிநாட்டுக் கடன்களை அடைப்பதற்கு ஒத்துழைப்புத் தருவதாக ஒப்புக் கொண்டனர். எவ்விலை கொடுத்தாயினும் பலஸ்தீனின் ஒரு பகுதியை உஸ்மானியப் பேரரசிடமிருந்து கபளீகரம் செய்வதே யூதர்களின் ஒரே குறியாய் இருந்தது.

ஆனால், யூதர்களின் எதிர்பார்ப்பு மீது மண்ணை அள்ளித் தூவினார் சுல்தான். அவர்களது மதுரமான வார்த்தைகளுக்கு அவர் மயங்கிவிடவில்லை. சுல்தானை வளைத்துப் போட சியோ னிஸ்டுகள் தீட்டிய திட்டம் பலிக்கவில்லை. அவர்களின் தங்கமோ லீராவோ சுல்தானை மதிமயக்கத்தில் ஆழ்த்தி விட வில்லை.

ஏனெனில், யூதர்கள் சுவிட்சர்லாந்தில் எடுத்த தீர்மானம் பற்றியும் ஜேர்மனியிலும் ரஷ்யாவிலும் யூதர்கள் வரைந்த திட்டங்கள் குறித்தும் சுல்தான் ஏற்கனவே அறிந்து வைத்தி ருந்தார். அதனால் அவரது பதில் இப்படியிருந்தது. யூதர்களை அது தலைகுனியச் செய்தது.


சுல்தான் 2ம் அப்துல் ஹமீத்

''எங்கள் மூதாதையர்கள் உயிரைப் பணயம் வைத்து போராடி வென்றெடுத்த வரலாற்றுச் சிறப்பு மிக்க எமது பலஸ்தீன் பூமியை, அற்ப சொற்ப திர்ஹம்களுக்காக என்னால் விலை பேச முடியாது. எமது குருதியை சிந்த நேர்ந்தாலும், உயிர்களைத் தியாகம் செய்ய நேரிட்டாலும் பலஸ்தீனத்தின் ஒரு சாண் நிலத்தையும் உங்களுக்குத் தர மாட்டேன். எனது உடலில் உயிர் இருக்கும் வரை யூதர்கள் பலஸ்தீனில் குடியேற ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்.''

இந்த வார்த்தைகள் யூதர்களின் செவிகளில் இடியாய் இறங்கியது. ஏமாற்றத்தின் இறுதி எல்லைக்குச் சென்ற அவர்கள், விரக்தி என்ற பள்ளத்தாக்கில் வீழ்ந்தனர். சுல்தான் எந்த யூதரையும் அங்கு குடியேற்ற வேண்டாம் என்று கண்டிப்பான கட்டளை பிறப்பித்தார். யூதர்கள் அழிவையும் சூழ்ச்சியையும் இலட்சியமாகக் கொண்டவர்கள்.

அப்துல் ஹமீதின் இந்த வார்த்தையும் அவர்களது உறுதியான நிலைப்பாடும் யூதர்களைக் கிலிகொள்ளச் செய்தாலும், அவர் கள் தமது சூழ்ச்சிக் கோட்பாடுகளிலிருந்து பின்வாங்கவில்லை. கிலாபத்தை உடைத்து விட்டால் தமது கனவு பலிக்கும் என்று கற்பனை செய்தனர். அதற்கான கைங்கரியங்களில் இறங்கினர். கிலாபத்தைத் துண்டாடும் ஆரம்ப முயற்சியாக அறபுத் தேசிய வாதத்தையும் பாரசீக இனவாதத்தையும் தூண்டினர்.

துருக்கியை ஒரு மதச்சார்பற்ற நாடாக மாற்றினால் இஸ் லாமிய உலகிற்கு தலைமை வழங்கும் பாத்திரத்திலிருந்து அதனைக் கழற்றி வீசலாம் எனக் கங்கணம் கட்டினர். அதற்கு அவர்கள் கண்டுபிடித்த முதல் ஆயுதம் முஸ்தபா கமால் எனப்படும் முஸ்லிம் முகமூடி அணிந்த ஒரு யூதராவார். இவனது தலைமையிலான குழுவே பிரிட்டன் படைகள் வெளியே றியதற்குப் பின்னர் 1923 மார்ச் 29 இல் துருக்கியின் ஆட்சியைக் கைப்பற்றியது.

முஸ்தபா கமால் என்பவன் துருக்கிய இராணுவத்தில் இருந்த ஓர் அதிகாரி. தௌனிமா எனப்படும் யூத இனத்தைச் சேர்ந்த வன். இவனது பிறப்பு, வளர்ப்பு, பெற்றோர் விபரங்களைத் தெளிவாக அறிய முடியாதுள்ளது. தான் ஒரு யூத இனத்தைச் சேர்ந்தவன் என்பதை சுய ஒப்புதல் மூலம் ஏற்றுக்கொண்டவன்.

முதல் உலகப் போரில் துருக்கி தோல்வியடைந்த பின்னர் மாசோனிய இயக்கம் (யூத சியோனிஸ அரசியல் இயக்கம்) கமாலை ஒரு கைக்கூலியாக அமர்த்தியது. ஏற்கனவே அங்கு தோன்றியிருந்த மதச்சார்பற்ற, மேற்குலகிற்கு ஆதரவான இளம் துருக்கியர் இயக்கத்தின் பிரச்சாரம் கமாலுக்குச் சாதகமாக இருந்தது. ஏலவே, களத்தில் ஜாவித் ஹஸன், ஜாவித் போன்ற புல்லுருவிகள் இவனுக்குத் துணையாக இருந்தனர். நியாஸ் பெக், அன்வர் பாஷா போன்றவர்களைத் தலைவர்களாகக் கொண்டிருந்த இளந் துருக்கியர் அமைப்பு கமாலின் பிரச்சாரக் கூடாரமாக மாறியது.

முஸ்தபா கமால் தனது சூழ்ச்சித் திட்டத்தைத் துவங்கினான். தொடக்கத்தில் இஸ்லாத்தில் ஆழ்ந்த பற்றுள்ள முஸ்லிம் போன்று நடித்தான். தூய இஸ்லாமிய போராளியாகவும் இஸ்லாமிய ஆட்சியின் மீது தணியாத தாகம் கொண்டவனாகவும் தன்னை பொதுமக்கள் மத்தியில் காண்பித்தான். ஒரு சமூக சீர்திருத்த வாதியாக தன்னைக் காட்டிக் கொண்ட இவன், வீழ்ந்து கொண்டி ருக்கும் இஸ்லாமிய ஆட்சியை மீண்டும் தூக்கி நிலைநிறுத்த வேண்டும் என்று மக்களிடையே பிரச்சாரம் செய்தான்.


அவன் ஆடுவது ஒரு போலி நாடகம் என்பதைப் புரிந்து கொள்ளாத மக்கள் அவனது மதுரமான வார்த்தைகளில் மயங் கிப் போயினர். எதிர்காலத்தைப் பாதுகாக்க வந்த தலைவர் என்று நம்பினர். அவனது கவர்ந்திழுக்கும் வார்த்தை களால் துருக்கியில் ஆலிம்கள் கூட கவரப்பட்டனர். அவனுக்கு துருக்கி யின் தந்தை (அதா துர்க்) என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர். ஆயினும், அவன் யார்? அவனது உண்மைச் சொரூபம் என்ன? ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் துருக் கியை எங்கே இழுத்துச் செல்லப் போகின்றான் என்பதை அவர்கள் முற்கூட்டியே அறிந்திருக்க வாய்ப்பில்லை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை: அனைத்துத் தரப்புக்குமானதொரு தலைமை

• ஸலாஹுத்தீன்

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் தலைமை ஸ்தானத்தில் யாரை வைத்து நோக்குவது? அல்லது இலங்கை முஸ்லிம் சமூகம் தனக்கெனத் தேர்ந்தெடுத்த தலைமை எது? தலைமையை யாரும் தேர்ந்தெடுத்தார்களா அல்லது அது தானாக உருவெடுத்ததா? அரசியல் தலைமை முஸ்லிம் தலைமையா அல்லது ஆன்மீகத் தலைமை முஸ்லிம் தலைமையா? தற்போது தலைமை ஏதும் இருப்பதென்றால் அது ஆன்மீகத் தலைமையா, அரசியல் தலைமையா, சிவில் தலைமையா அல்லது யாவும் பொதிந்த ஒன்றா? முட்டை இருந்ததால் தான் கோழி வந்ததா, கோழி இருந்ததனால் தான் முட்டை வந்ததா என்ற இது போன்ற கேள்விகளுக்கு முஸ்லிம் சமூகத்திடம் இதுவரையும் விடை இல்லை.



இலங்கை முஸ்லிம் சமூகம் தமக்கென ஒரு தலைமையை இதுவரை தெரிவு செய்யவில்லை என்பதுதான் இதனுடைய யதார்த்தம். இருக்கின்ற தலைமைகள் எல்லாம் தன்னிச்சையாக அல்லது தான்தோன்றித்தனமாக நாங்கள் தான் முஸ்லிம்களின் தலைமை என மார்தட்டிக் கொண்டவையாகவே தோன்றுகின்றன. இவற்றின் நிர்வாகிகள் யார், இவர்களை யார் தெரிந்தெடுத்தார்கள், நாங்கள் எந்த யாப்பின் கீழால் ஆளப்படுகிறோம் என்ற எந்த அறிவும் இன்றி ஒரு சமூகம் கட்டுப்படுவது என்றிருந்தால் அது இலங்கை முஸ்லிம் சமூகமாகத்தானிருக்கும்.

முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் வேலை செய்யும் பல நிறுவனங்கள் எமக்கு மத்தியில் இருக்கின்றன. இவற்றில் எது எமது தலைமை நிறுவனம்? உலமாக்களின் கூட்டாகச் சொல்லப்படுகின்ற அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவா? கதீப்மார்களின் கூட்டான கதீப்மார் முஅஸ்ஸின்கள் சங்கமா? காதி நீதிபதிகளை உள்ளடக்கிய காதி நீதிபதிகள் சங்கமா? பல்கலைக்கழகப் பட்டதாரிகளை உள்ளடக்கிய அனைத்துப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ்களின் சங்கமா? இஸ்லாமிய ஆசிரியர்களை உள்ளடக்கிய இஸ்லாமிய ஆசிரியர் சங்கமா?

இவை ஏதுமில்லாவிட்டால் தப்லீக் ஜமாஅத்தா, தௌஹீத் ஜமாஅத்தா, ஜமாஅதே இஸ்லாமியா, ஜமாஅதுஸ் ஸலாமாவா அல்லது தரீக்காக்களா?

சொல்லப்பட்ட எல்லா நிறுவனங்களும் ஜமாஅத்துக்களும் இன்னும் இருப்பவைகளும் முஸ்லிம் சமூகத்தின் நன்மைக்காகவும் தாய்நாட்டின் விடிவுக்காகவும்தான் உழைக்கின்றன என்றிருந்தால், இவற்றுள் ஒன்று மட்டும் எப்படி தான்தோன்றித்தனமாக தலைமை ஏற்க முடியும்?

பாராளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்டிருப்பது தலைமை தாங்குவதற்கான ஒரு தகுதியாகக் கருதப்படுமென்றிருந்தால், மருதானை பள்ளிவாசல், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ, மாளிகாவத்தை வை.எம்.எம்.ஏ, எம்.எப்.சி.டி, சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையம்... என பல நிறுவனங்கள் பாராளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. இது போன்ற கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள் பல இருக்கையில், ஒன்று மட்டும் எப்படி தன்னிச்சையாக தன்னை தலைமையாக அறிவிக்க முடியும்?

இலங்கை முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் ஒரு ஜமாஅத்தின் கீழால் அல்லது தரீக்காக்களின் கீழால் தான் கட்டுக்கோப்புடன் வாழ்கிறார்கள். இந்த ஜஅமாத்துக்களையும் அமைப்புக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தாத சபைகள் இலங்கை முஸ்லிம்களின் பொதுவான தலைமையாக வர முடியாது. அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவை தலைமையாகக் கொள்வதென்றால் அங்கு எல்லாத் தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒழுங்கொன்று இருக்க வேண்டும். பல்வேறு ஜமாஅத்துக்களையும் சேர்ந்தவர்கள் இதன் அங்கத்தவர்களாகவும் நிர்வாக உறுப்பினர்களாகவும் இருந்த போதிலும் அவர்கள் தத்தமது அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக இல்லை.

இலங்கையில் இருக்கின்ற அனைத்து ஜமாஅத்துக்களையும் பதிவு செய்கின்ற ஒழுங்கொன்றும் கூட ஜம்இய்யதுல் உலமாவிடம் இல்லை. இந்த நிலையில் ஜம்இய்யதுல் உலமா சமூகத்தைத் தலைமை தாங்கி நடத்துவதாக இருந்தால், சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் கட்டுப்பட்டு நடக்கின்ற தலைமையாக ஜம்இய்யதுல் உலமா இருக்கப் போவதில்லை.

உமர் (ரழி) அவர்களது கருத்துப்படி கட்டுப்படுதல் இன்றி தலைமைத்துவம் இல்லை. ஜமாஅத்துக்களாலும் அமைப்புக்களாலும் தான் முஸ்லிம் சமூகம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் முஸ்லிம் சமூகத்துக்கான தலைமை இந்த எல்லா அமைப்புக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகத் தானே அமைய வேண்டும்?

ஜம்இய்யதுல் உலமா உருவாக்கப்பட்ட 19 ஆம் நூற்றாண்டை விட பல மாற்றங்கள் நாட்டிலே தற்போது உருவாகி இருக்கின்றன. இலங்கை முஸ்லிம் சமூகத்தில் பெண்களின் சமூகப் பாத்திரம் முன்னை விடப் பலமடங்கு அதிகரித்திருக்கிறது. பல கலாநிதிகளும் பேராசிரியர்களும் இலங்கை முஸ்லிம் பெண்கள் மத்தியிலே உருவாகியிருக்கிறார்கள். மார்க்கத் துறையிலே கல்வி கற்ற ஆலிமாக்கள் நிறையவே சமூகத்தில் இருக்கிறார்கள்.

பெண்களது விவகாரங்களிலும் பொதுவான விவகாரங்களிலும் கருத்துச் சொல்லக் கூடிய பெண் ஆலிமாக்களுக்கு ஜம்இய்யதுல் உலமாவிலே இடமில்லை. பெண்களது குரல்கள் செவிமடுக்கப்படாமலேயே பெண்களின் விவகாரங்களில் முடிவெடுக்கப்படுகின்ற நிலைமை சமூகத்துக்குள்ளால் இருப்பதனால்தான் சமூகம் பல்வேறு சிக்கல்களிலும் சிலவேளைகளில் மாட்டிக் கொள்கிறது. இந்த வகையில் சமூகத்தின் சரிபாதி என்ற வகையில் பெண்களும் ஜம்மியதுல் உலமாவில் அங்கம் வகிக்கின்ற போதுதானே அது முழு சமுதாயத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சபையாக அமைய முடியும்?

உலமாக்கள் தலைமை வகிப்பது தான் பொருத்தமானது என்று கருதினாலும் அது உலமா சபையாகத் தான் இருக்க வேண்டும் என்பதில் என்ன நியாயம் இருக்கிறது? உலமா சபை ஒட்டு மொத்த உலமாக்களினதும் சபையா? குறைந்த பட்சம் நாட்டிலுள்ள உலமாக்களில் அரைவாசியையாவது அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்களா?

இலங்கையில் உலமாக்களை உருவாக்குகின்ற சுமார் 250 அரபுக் கல்லூரிகளும் மத்ரஸாக்களும் முஸ்லிம் சமய பண்பாட்ட லுவல்கள் திணைக்களத்திலே பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 50 மத்ரஸாக்கள் காலப்போக்கில் கரைந்து போனவைகளாகக் கருதினாலும் 200 மத்ரஸாக்கள் நாட்டிலே இயங்கி வருகின்றன. இவை ஒவ்வொன்றும் வருடாந்தம் குறைந்த பட்சமாக 10 உலமாக்களை வெளியேற்றுவதாக வைத்துக் கொண்டாலும், ஒரு வருடத்தில் 2000 பேர் உலமாக்கள் வரிசையில் இணைகிறார்கள். ஒரு வருடத்தில் 2000 என்றால் கடந்த 10 வருடங்களில் 20,000 பேர் உலமாக்களாக சமூகத்திலே இணைந்திருக்கிறார்கள்.

இலங்கையிலே பல தசாப்தங்களைத் தாண்டி இயங்கி வருகின்ற மத்ரஸாக்களும் இருக்கின்றன. இவற்றையும் தாண்டி, சில உலமா வட்டாரங்கள் சொல்வதன்படி தற்போது இலங்கையில் 15,000 உலமாக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். உலமா சபையிலே - அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவிலே - தற்போது 5,600 அல்லது அதை விடச் சற்று அதிகமானவர்கள் அங்கத்தவர்களாக இருக்கின்றார்கள். இந்த வகையில் இருக்கின்ற மொத்த உலமாக்களில் மூன்றில் ஒரு பகுதியினரே ஜம்மியதுல் உலமாவில் அங்கம் வகிக்கின்றனர். ஏனையவர்கள் உலமா சபைக்கு வெளியே இருக்கின்றனர்.

இந்த வகையில் இலங்கையிலுள்ள உலமாக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சபையாக ஜம்மியதுல் உலமாவை நோக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

இலங்கை முஸ்லிம்களுக்கு ஒரு தலைமை வேண்டும் என்பதனை, பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள நிலைமையில், முஸ்லிம் சமூகம் உணர்ந்திருக்கிறது. தற்போதைய நெருக்கடிகளையும் எதிர்காலச் சவால்களையும் எதிர்கொண்டு நாட்டை வளப்படுத்துகின்ற சமூகமாக முஸ்லிம் சமூகத்தை முன்கொண்டு செல்லக் கூடிய தலைமைகளையே சமூகம் எதிர்பார்க்கிறது. அவ்வாறான தலைமைகள் முஸ்லிம் சமூகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைகளாக வரும் பட்சத்திலேயே முஸ்லிம் சமூகத்தின் கட்டுக்கோப்பைப் பேணி, முன்னுதாரணமான சமூகமாக நாட்டிலே தலைநிமிர்ந்து வாழ முடியும்.

அகில இலங்கை ஜம்மியதுல் உலமா இதற்குப் பொருத்தமானதல்ல என்று இங்கே கூறவரவில்லை. ஆனாலும், -ஆண்கள், பெண்கள், அறிஞர்கள், துறைசார் நிபுணர்கள், ஆலிம்கள், எல்லா ஜமாஅத்துக்களதும் பிரதிநிதிகள் என அனைத்துத் தரப்பினரையும் தழுவிய அமைப்பாக முஸ்லிம்களுக்கான தலைமை இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதாக இருந்தால் ஜம்மியதுல் உலமா தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்.

மாற்றங்கள் ஒருபோதும் தன்னால் நிகழ்வதில்லை.

# அல்-அமீன் வித்தியாலயம் பறிபோய் விடுமா?

மிப்றாஹ் முஸ்தபா
உதவி - அனஸ் அப்பாஸ்

தலைநகரின் கேந்திரமாகத் திகழும் காலி முகத்திடலின் அண்மையில் அமைந்துள்ள ஒரு பாடசாலைதான் அல்-அமீன் வித்தியாலயம். 1946ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 70 ஆவது வருடப் பூர்த்தியை இந்த ஆண்டு நிறைவு செய்திருக்கிறது.

தலைநகரிலுள்ள 17 முஸ்லிம். பாடசாலைகளுள் மிகப் பெறுமதியான நிலத்தில் உள்ள ஒரே பாடசாலையும் இப்பாடசாலைதான். தற்போது இங்கு அதிபராகக் கடமையாற்றும் திருமதி எம்.யூ. சானாஸ் கடந்த வருடம் இப்பாடசாலையை பொறுப்பேற்கும் போது இப்பாடசாலையில் வெறும் 72 மாணவர்கள்தான் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் கொம்பனித் தெருவில் காணப்பட்ட அனைத்து முஸ்லிம் குடியிருப்புக்களையும் அரசாங்கம் அகற்றியமையால் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்ற இப்பாடசாலையிலிருந்து அதிகமான மாணவர்கள் விலகிச் சென்றனர்.

தலைநகரின் முக்கிய இடத்தில் அமைந்துள்ள இப்பாடசாலையில் குறைந்தளவிலான மாணவர்களே கல்வி கற்கின்றனர் என்ற காரணத்தை வைத்து இப்பாடசாலையின் காணியை அபகரிப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னைய அரசாங்கத்தினால் நேரடியாகவும் திரை மறைவிலும் மேற்கொள்ளப்பட்டன.

மேல் மாகாண முதலமைச்சராக இருந்த போது பிரசன்ன ரணதுங்க தனது பரிவாரங்களுடன் இப்பாடசாலைக்கு விஜயம் செய்து பெறுமதி மிக்க இடத்தில் சொற்ப மாணவர்களோடு இயங்கி வருகின்ற இப்பாடசாலையை மூடி விட வேண்டும் என்று தெரிவித்துச் சென்ற வரலாற்றையும் இலகுவில் மறந்து விட முடியாது.

இந்தப் பாடசாலை மூடப்பட்டு விட்டது என்ற மனோநிலையே மக்களிடம் காணப்பட்டது. இதனால் பிள்ளைகளை இந்தப் பாடசாலைக்கு சேர்ப்பதில் பெற்றோர்கள் தயக்கம் காட்டினர். இங்கு கல்வி கற்றுக் கொண்டிருந்த





மாணவர்களின் எண்ணிக்கையும் படிப்படியாக வீழ்ச்சி அடைந்தது. இந்தப் பெறுமதியான இடத்தில் 72 மாணவர்களுக்கு ஒரு பாடசாலை தேவையில்லை என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருந்தது. அந்த வகையில் இந்தப் பாடசாலையை காப்பாற்ற வேண்டுமானால் இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் பாடசாலை நிர்வாகத்திற்குக் காணப்பட்டது.

குறித்த இடத்தில் இப்பாடசாலையை தக்க வைத்துக் கொள்வதற்கு பல்வேறு முயற்சிகள் சமூகத்தால் மேற்கொள்ளப்பட்டன. இதனடியாக இப்பாடசாலையின் புதிய மாணவர் அனுமதி தொடர்பான துண்டுப் பிரசுரங்களை பாடசாலை நிர்வாகம் விநியோகித்தது. இந்த வருடத்தில் 50 வீதமான மாணவர்களை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் இப்பாடசாலை செயற்பட்டது.

அதன் பிரதிபலனாக தற்போது இப்பாடசாலையில் 124 மாணவர்கள் கல்வி கற்று வருவதோடு 22 ஆசிரியர்களும் கடமையாற்றுகின்றனர். தரம் 1 முதல் 11 வரையிலான தமிழ், சிங்கள மொழி மூலமாக மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்கக் கூடிய வசதியும் காணப்படுகின்றது. என்றாலும் இப்பாடசாலையில் சிங்கள மொழி மூலமான மாணவர்களுக்கு விஞ்ஞான, இஸ்லாம் பாட ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது.

சிங்கள மொழி மூலமான இஸ்லாம் பாடத்துக்கான ஆசிரியர் பற்றாக்குறையை கவனத்தில் எடுத்த ஜம்இய்யதுல் உலமா சபை மௌலவி ஒருவரை தற்காலிகமாக நியமித்திருக்கிறது.

1000 மாணவர்கள் கல்வி கற்கக் கூடிய வகையில் சகல விதமான வளங்களும் காணப்படுகின்ற இந்தப் பாடசாலையின் ஒரு சில வகுப்புக்களில் நான்கைந்து மாணவர்கள் கல்வி கற்கின்ற துரதிஷ்டமான நிலையே காணப்படுகின்றது. எனவே தான் இந்தப் பாடசாலையை மூடுவதற்கான சந்தர்ப்பத்தை அரசாங்கம் எதிர்பார்த்திருக்கிறது.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஏனைய முஸ்லிம் பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்கக் கூடிய அதிகமான மாணவர்களின் விண்ணப்பங்கள் இடப் பற்றாக்குறை காரணமாக நிராகரிக்கப்படுகின்ற நிலையில் அத்தகைய மாணவர்களை இப்பாடசாலையில் சேர்ப்பதன் மூலம் எமது சமூகத்துக்கென்று தலைநகரின் முக்கிய இடத்தில் இருக்கின்ற இப்பாடசாலையை பாதுகாக்க முடியும்.

அந்தவகையில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் உதவியோடு இப்பாடசாலைக்கு மாணவர்களின் நுழைவு வீதத்தை அதிகரிப்பதற்காக பாடசாலை நிர்வாகம் பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவசமாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவதோடு, அரசாங்கம் வழங்குவதற்கு மேலதிகமாக சீருடையும் வழங்கப் படுகின்றது.

போக்குவரத்து சிரமங்களினால் அதிகமான பெற்றோர்கள் இப்பாடசாலைக்கு தமது பிள்ளைகளை அனுப்பத் தயங்குகின்றனர் என்பதனால் ஜம் இய்யதுல் உலமாவின் நிதி உதவியோடு இலங்கை போக்குவரத்து சபை பஸ் ஒன்றும் இப்பாடசாலை மாணவர்களுக்காக ஏற்பாடு செய்து கொடுக்கப் பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக இங்கு கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களில் பெரும் பாலானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதன் காரணமாக தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் தயக்கம் காட்டுகின்றனர்.

வறுமை கல்விக்குத் தடையாக அமையக் கூடாது என்ற வகையில் இலங்கை வரலாற்றில் எந்தப் பாடசாலைகளிலும் கிடைக்காத மதிய போசனம் இப்பாடசாலையில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றது. பாடசாலை ஒரு சமூகத்துக்கு எந்தளவு தூரம் முக்கியத்துவமானது என்பதனை சமூகம் உணர்ந்திருப்பது மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

அந்தவகையில் தலைநகரின் கேந்திர முக்கியத்துவமிக்க, கல்வி கற்பதற்கு ஏதுவான அமைதியான ஒரு சூழலில் இப்பாடசாலை அமைந்திருப்பது விசேட அம்சமாகும்.

எனவே 70 வருடங்கள் பழைமை வாய்ந்த பெறுமதி வாய்ந்த சொத்தான இப்பாடசாலையை பாதுகாப்பது எமது சமூகத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்களுக்கு... (06ம் பக்கத் தொடர்)

முஸ்லிம்களை எழுந்து நிற்குமாறு கூறுவதற்கு ஒருவருமில்லை என்கின்ற கவலை எனக்குள்ளது. அஷ்ரபுக்குப் பிறகு இந்த நாட்டிலே முஸ்லிம்களுக் கென ஒரு தலைமை இல்லை. இந்நாட்டில் முஸ்லிம்கள் கட்சிகளாக சிதறிப் போயுள்ளார்கள். முஸ்லிம் சமூகத்தை ஒழுங்குபடுத்த வேண்டிய அவசர நிலையேற்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் முஸ்லிம்களுக்கு எதிராக பாரியதொரு சூழ்ச்சி மேலெழுந்து கொண்டுள்ளது. அது எப்போது வெடிக்கும் எனச் சொல்ல முடியாது. 2,3 வருடங்களுக்கு முன்னர் முச்சக்கர வண்டியில் பயணிக் கும் பொழுது சாரதி முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு வார்த்தையையும் கூற வில்லை. ஆனால், இன்று பயணிக்கும் பொழுது 'பாருங்கள் இக்கட்டிடங்கள் எல்லாம் தம்பிமார்களுடையது தான். அவர்கள் முன்னேறுகிறார்கள். இவர்கள் தமிழர்களை போலில்லை' என கூறுவார்கள்.

2 வருடங்களாக ஞானசார போன்றவர்களே இதுபோன்ற கருத்துக்களை அவர்களுடைய தலையில் போட்டுள்ளார்கள். இது மிகவும் பயங்கரமானதொரு நிலை. இப்பூமியில் பெற்றோல் ஊற்றப் பட்டுள்ளது. இனி ஒரு நெருப்புக் குச்சியை போடுவது மாத்திரமே உள்ளது. சும்மாவே தீப் பற்றி எரியும். இதுபோன்றதொரு ஆபத்து முஸ்லிம் களுக்கு விரைவிலேயே வரவிருக்கிறது என்பதை நான் உதியாகக் கூறுகிறேன். இதையிட்டு முஸ்லிம் சமூகம் அவதானமாக இருக்க வேண்டும்.

நான் பௌத்த மதத்திற்கெதிராக செயற்படுவதாக ஞானசார போன்ற வர்கள் குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் அதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை. நான் ஒருபோதும் புத்த பெருமானுக்கும் பௌத்த சமயத்திற்கும் இழிவேற்படும் வகையில் நடந்து கொள்ளவில்லை. ஞானசார போன்றவர்கள் போதிப்பது போன்ற உபதேசங்கள் பௌத்த சமயத்தில் இல்லை எனக் கூறினேன்.

எல்லோருக்கும் நல்லதை நாட வேண்டும். உலகில் சகலருக்கும் நல்லதே நடக்க வேண்டும் என நினைக்க வேண்டும் என்றே புத்தர் கூறியுள்ளார். அதுவல்லாமல் முஸ்லிம் களின் சொத்துக்களை அழிக்குமாறு கூறவில்லை. 'வாஸெட்ட' சூத்திரத்தி லேயே புத்தர் இது விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்நாட்டில் பிறந்த நாம் எல்லோ ரும் ஒன்றுபட்டு வாழ வேண்டும். சகலருக்கும் சம உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும். அடுத்த சமூகத்தை மதித்து வாழ வேண்டும்.

புத்தர் சிலையை ஏனைய மதத்தவர்கள் உள்ள இடத்தில் வைப்பது எதற்கு? வடகிழக்குப் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை அமைப்பது எதற்கு? இது போன்ற செயல்களால் மக்களின் இயல்பு வாழ்க்கையே பாதிக்கப்படுகிறது.

எனவே சகலரும் ஒன்றுபட்டு நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். முஸ்லிம் சமூகத்தை காட்டிக் கொடுத்த இனவாதக் கும்பல்கள் அழிக்கப்பட வேண்டும். அதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் பட வேண்டும்.

நான் உயிரோடு இருக்கும் வரை யில் சமூக ஒற்றுமை சீர்குலைய இடமளிக்கப் போவதில்லை. முஸ்லிம் சமூகத்திற்குள்ளாலும் இனவாதிகளுக்கு துணை போகின்ற வர்கள் உள்ளார்கள். அண்மையில் முஸ்லிம் முற்போக்கு முன்னணி என்றதொரு அமைப்பினை உருவாக்கி னார்கள். அது எதற்கு? இதுவும் இனவாதிகளின் சுற்று நிரூபத்தின் ஒரு அங்கமாகவே நோக்கப்பட வேண்டும். அது போன்ற அமைப்புக்களை முஸ்லிம் சமூகம் ஆதரிப்பதில்லை என்பது எமக்குத் தெரியும். எனவே எல்லோரும் ஒன்று படுவோம் நாட்டை கட்டியெழுப்புவோம்.

## கொழும்பு நிதி... (01ம் பக்கத் தொடர்)



இந்தத் திட்டத்தில் முதலிடுவதற்காக அழைக்கிறோம் என இலங்கைக்கான சீனத்தூதுவர் யிசிங்லிங் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சீனா தனது இராணுவத் தளங்களை அமைக்க முனைகிறது என இந்தியத் தரப்பினர் அச்சம் வெளியிட்டுள்ள நிலையிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. இதனைச் சமாளிப்பதற்காக இலங்கைத் இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தை இந்த வருட இறுதியில் மேற்கொள்ளவுள்ளது.

கடந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வர்த்தக தொழிற்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்தியா அடுத்து வரும் மூன்று நான்கு வருடங்களில் 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதாகத் தெரிவித்தார். இருந்த போதிலும் இலங்கையின் பாரிய முதலீட்டாளரான சீனா நிதி நகரத்தில் மட்டும் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஏலவே முதலீடு செய்துள்ளது. மேலும் 8 பில்லியன் டொலர்களை அது முதலீடு செய்வதற்கும் தயாராக இருக்கிறது. நிதி நகரம் ஆரம்பிக்கப்பட்டால் அதன் பல்வேறு திட்டங்களிலும் கூட சீனா முதலிடவிருக்கிறது.

இந்த நிலையில் சீனா இந்தியாவுக்கு விடுத்திருக்கின்ற இந்த அழைப்பு, பிராந்தியத்தில் தனக்குக் கீழால் இயங்குமளவுக்கு இந்தியாவை சீனா குறைமதிப்புச் செய்வதாகவே அமைந்துள்ளது என நிதியியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## பருத்திக்கான... (01ம் பக்கத் தொடர்)



தென்னிந்திய ஆடைத் தொழிற்சாலைகளுக்குத் தேவை யான உள்நாட்டு உற்பத்திப் பருத்தி குஜராத், மஹாராஷ்ட்ரா மாநிலங்களிருந்தே பெறப்படுகின்றன. ஆனாலும் இவற்றை வரவழைப்பதற்கான போக்குவரத்துச் செலவுக்காக தென்னிந்தியக் கம்பனிகள் பாரிய தொரு முதலீட்டைச் செய்ய வேண்டியுள்ளது.

இதைவிட வெளிநாடுகளில் இருந்து இந்திய பருத்தி ஆடைகளுக்கு உகந்த பருத்தியை இறக்குமதி செய்து கொழும்பில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்து, தேவை யான பொழுது இந்தியாவுக்கு இறக்குமதி செய்வதன் மூலம் பருத்திக்கு சிறந்த விலையைப் பெற முடிவதாக இந்திய தொழிற்சாலை வட்டாரங்கள் கருதுகின்றன. தென்னிந்திய தொழிற்சாலைகள் சங்கத்துக்கும் இலங்கை துறைமுக அதிகார சபை அதிகாரிகளுக்கும் இடையில் இது தொடர்பிலான பேச்சுவார்த்தை ஒன்று நடை பெற்றுள்ளது.

## மலையக... (01ம் பக்கத் தொடர்)



சிவில் சமூகத்தினால் இந்த விடயம் அவரது கவனத்திற்கு முன் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பிபிசிக்கு கருத்து வெளி யிட்ட ஜனநாயகத்திற்கான மலையக சிவில் அமைப்புகளின் ஏற் பாட்டாளரான சந்திரன் விஜயசந்திரன், 'இலங்கையில் சிங்களவர், இலங்கை தமிழர், மலையக தமிழர் மற்றும் முஸ்லிம் என நான்கு தேசிய இனங்கள் என்ற அடிப்படையில் இனப்பிரச்சினைக்கான தீர்வும் அதிகார பகிர்வும் இடம் பெற வேண்டும்'' என்று தெரி வித்தார்.

இந்த விவகாரத்தில் ஐ. நா மனித உரிமைகள் ஆணையரும், ஐ.நாவும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென இந்த சந்திப்பில் தங்களால் வலியுறுத்தப் பட்டதாகவும் அவர் தெரிவிக்கின்றார். தற்போது மலையக மக்கள் தேசிய இனம் என்று கூறப்பட்டாலும் சட்ட ரீதியான அந்தஸ்து மற்றும் அரச நடைமுறைகளில் அது ஏற்றுக் கொள்ளப்படுவதாக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், ''அரசியலமைப்பு பேரவை மற்றும் சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமனங்களில் கூட சிங்களவர், இலங்கை தமிழர், முஸ்லிம் என இன ரீதியாக நியமனங்கள் இடம் பெறுகின்றன. தமிழர் பிரதிநிதிகளாக நியமனம் பெறுவோர் வடக்கு - கிழக்கு தமிழர்களை பற்றி தான் அங்கு பேசுவார்களே தவிர மலையக தமிழர்களை பற்றி பேச மாட்டார்கள் . அரசாங்கமும் சிங்களம், தமிழ், முஸ்லிம் என பிரச்சினைகளை கையாண்டு பிரதிநிதிகளை நியமனம் செய்கின்றது மலையக தமிழர்களை புறக்கணிப்பதாகவே நடந்து கொள்கின்றது'' என்றார்.

இந்த விடயங்கள் தொடர்பாக ஏற்கனவே அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தாலும், ஐ.நா வின் கவனத்திற்கும் இதனை முன்வைக்க வேண்டிய தேவை உள்ளது என்றும் சந்திரன் விஜயசந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

## சகவாழ்வு... (01ம் பக்கத் தொடர்)



முஸ்லிம் விரோதச் சக்திகளுக்கு எதிராக செயற்பட்டதனால் நான் பலமுறை தாக் குதல்களுக்கு உள்ளாகி இருக்கிறேன். பலமுறை என்னைக் கொல்வதற்கான முயற்சிகள் நடந்திருக்கின்றன. இரண்டு தடவைகள் எனது இடுப்பு முறிக்கப் பட்டது. ஊன்றுகோலின் உதவியுட னேயே நான் தற்போது நடமாடுகிறேன். இருந்தாலும் எனது மரணம் வரை நீதி நியாயத்துக்காக குரல் கொடுப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனது தொழில் பறிக்கப்பட்டது. மூன்று வருடங்களாக தொழிலின்றி இருக்கிறேன். சகவாழ்வு முயற்சிகளில் ஈடுபட்டதனால் வந்த பாதிப்புகளுக்கு எதிராக 14 வழக்குகள் தாக்கல் செய்தி ருக்கிறேன். ஒரு மாதத்தில் மூன்று வழக் குகளுக்கு நான் பிரசன்னமாக வேண்டி யிருக்கிறது. இதற்கென மஹியங்கனை யிலிருந்து பல இடங்களுக்கும் அலைய வேண்டியிருக்கிறது. நான் இருக்கும் நிலைமையில் தொடர்ந்து இயங்குவது என்பது முடியாத காரியமாக இருக்கிறது.

முஸ்லிம் சகோதரர்கள் பலரும் அவ் வப்போது எனக்கு உதவி செய்து வரு கிறார்கள். மொஹமட் வட்டரக்க என்று தான் நான் செல்லுமிடமெல்லாம் எனது சமூகம் என்னை அழைக்கிறது.

சகவாழ்வுக்கு எதிரான செயற்பாட் டாளர்களுக்கு எதிரான சாட்சியங்களும் ஆதாரங்களும் என்னிடம் இருக்கின்றன. எனது மரணத்துடன் இவை அழிந்து போகக் கூடாது என்பதற்காகவே நான் எனது இயலாமைக்கு மத்தியிலும் போராடுகிறேன். இது தொடர்பில் சக வாழ்வை விரும்புபவர்கள் கூடுதலான ஒத்துழைப்பினை எனக்கு வழங்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன் என வட்டரக்க விஜித்த ஹிமி மீள்பார் வைக்குக் கருத்துத் தெரிவித்தார்.

## மஹிந்தவுடன்... (07ம் பக்கத் தொடர்)



பகுதிகளிலுள்ள வீதிகள் மணல் வீதிகளாகவே காட்சியளிக் கின்றன. இதுபோன்ற சில்லறைப் பிரச்சினை கள் அதிகம் உள்ளன.

- முஸ்லிம் முற்போக்கு முன்னணி உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

முஸ்லிம் முற்போக்கு முன்னணி என்பது நாம் தமிழர்கள் என்பது போல் நாம் முஸ்லிம்கள் என்ற கருத்தில் உருவாக்கப்பட்டது. இதில் எவ்வித கட்சிபேதமும் இல்லை. எல்லோரும் ஒன்றிணைந்து எதிர்காலத்தில் முஸ்லிம் நலன்களுக்கான செயற்பாடுகளில் ஈடு படுதல். ஏனைய சமூகங்களைப் பகைத் துக் கொண்டு எமது உரிமைகளை ஒரு போதும் வெல்ல முடியாது.

இவ்வரசாங்கம் உறுதியானதல்ல. இவ்வரசாங்கம் நீண்ட காலம் நீடிக்காது. எதிர்வரும் அரசாங்கம் மஹிந்தவின் அரசாங்கமாக இருக்கும். மஹிந்தவின் அரசாங்கத்தில் நாம் அவர்களுடைய கட்சிக்குள் சேர்ந்து கொண்டால் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடி யாது. அதனால் நாம் தனியமைப்பாக பிவிதுரு ஹெல உறுமய போன்று முஸ்லிம் முற்போக்கு முன்னணியை உருவாக்கியுள்ளோம்.

எதிர்காலத்தில் மஹிந்த அரசு வந்தால் அதில் முஸ்லிம்களுக்கு நிம்மதியாக வாழக் கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதே இதன் நோக்கம். புதிய அரசியலைப்பு உருவாக்கத்தில் நிறைய பிரச்சினைகள் உள்ளன். முஸ்லிம் சமூ கம் இவ்வரசின் கீழ் புறக்கணிக்கப் பட்ட சமூகமாக உள்ளது. பெரும்பான் மையினருக்கு மத்தியில் முஸ்லிம்கள் தொடர்பில் ஒரு சந்தேகப் போக்குள்ளது.

கடந்த தேர்தலில் மஹிந்தவை தோற் கடித்தது முஸ்லிம்களல்ல. இருந்தாலும் முஸ்லிம்கள் தான் எம்மை தோற்கடித் தார்கள் என்ற கோபம் சிங்களவர்கள் மத்தியில் உள்ளது. எனவே இக்கருத்தை நாம் போக்க வேண்டும். முஸ்லிம்களை ஒன்று சேர்த்து அரசியல் ரீதியாக அவர்களுக்கு தீர்வு வழங்குவதும் எமது நோக்கம்.

- முஸ்லிம் முற்போக்கு முன்னணி கட்சியாக பதிவு செய்யப்பட் டுள்ளதா?

தனிக்கட்சியாக பதிவு செய்யும் நோக் கம் எமக்கு இல்லை. அன்று பதியுதீன் மஹ்மூத் காலத்தில் சிறி லங்கா சுதந் திரக் கட்சிக்குள் சோசலிஸ முஸ்லிம் முன்னணி என்ற அமைப்பு இருந்தது. அதனூடு நிறையப் பணிகளைச் செய் தார்கள். பிற்காலத்தில் அது கலைக்கப் பட்டு, அதில் இருந்த அங்கத்தவர்கள் சுதந்திர கட்சியுடன் இணைந்தார்கள். அதனால் எமது விடயங்கள் அவ்வளவு பெரியளவில் நடைபெறவில்லை.

சுதந்திரக் கட்சியோடு இல்லாமல் தனியான அமைப்பில் இயங்குவதே எமது நோக்கம். தேவைப்பட்டால் பிற் காலத்தில் கட்சியாகப் பதிவோம். இம் முன்னணியில் தேசிய அமைப்பாளராக நான் செயற்படுகிறேன். முன்னாள் பா. உறுப்பினர் அஸ்வர் ஊடகப் பேச்சாள ராகச் செயற்படுகிறார். முன்னாள் பாராளுமன்ற உப்பினர்கள், மாகாண சபை உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகள், உலமாக்கள் என எம் மோடு பலர் கைகோர்த்துள்ளார்கள்.

- முஸ்லிம் முற்போக்கு முன்னணி யின் அடுத்த கட்ட நடவடிக் கைகள் என்ன?

நாம் மாவட்ட ரீதியாக எமது பணி களை ஆரம்பிக்கவுள்ளோம். ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை குருனாகலை யில் ஆரம்பிக்கவுள்ளோம். முஸ்லிம் கள் கூடுதலாக உள்ள தேர்தல் தொகுதி களுக்குச் சென்று அவர்களுடன் சுமுக மாகக் கதைத்து, அவர்களின் பிரச்சினை களை இனங்கண்டு, எம்மைப் பற்றிய நல்லதொரு அபிப்பிராயத்தையும் தெளி வுபடுத்தல்களையும் வழங்கவுள்ளோம்.

முஸ்லிம் காங்கிரஸையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸையும் சேர்ந்த பலர் எதிர்காலத்தில் எம்முடன் இணைய உள்ளார்கள்.

## எம்.ஐ.எம். முகைடீனுக்கு... (01ம் பக்கத் தொடர்)



இலங்கை முஸ் லிம்களின் காணிப் பிரச்சினைகள், மனித உரிமை மீறல்கள், அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தில் முஸ் லிம்கள், வடக்கு முஸ்லிம்களின் மீள் குடியேற்றம், அளுத்கம முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களும் பள்ளிவாசல் உடைப்புக்களும், கொழும்பு முஸ்லிம் களின் அவலநிலை என பல விடயங் களை ஆவணம் செய்த ஒருவராக இவர் திகழ்கிறார்.

இவரினால் தமிழ் மற்றும் ஆங்கி லத்தில் எழுதப்பட்ட சுமார் 15க்கு மேற் பட்ட புத்தகங்களே இலங்கை முஸ்லிம் களின் பிரச்சினைகளை தேசிய ரீதியாக மட்டுமன்றி சர்வதேசத்திற்கும் கொண்டு சென்றுள்ளன.

இன்று முஸ்லிம்கள் தொடர்பில் எழும் பிரச்சினைகளுக்கான தரவுகளும் புள்ளிவிபரங்களும் இவரிடமே உள் ளன. இவர் வெளியிட்டுள்ள ஆவணங் களே துல்லியமான தரவுகளையும் பிரச் சினைகளுக்கான தீர்வுகளையும் முன் வைக்கின்றன.

தற்போது 81 வயதாகியுள்ள இவர் தனது முதுமைப் பருவத்தில் வாழ்ந்து வருகின்றார். இன்றும் வடக்கு முஸ்லிம் களின் மீள்குடியேற்றம் தொடர்பான ஆவணப்படுத்தல்களை மேற்கொண்டு வருகின்றார்.

எம்.ஐ.எம்.முகைடீன் என்பவர் சமூ கச் செயற்பாட்டில் ஈடுபடாமல் தனது கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந் திருப்பார் என்றால் இலகுவாக கலா நிதிப் பட்டங்களைப் பெற்றிருப்பார். எனினும் இவர் தன்னை விட தனது சமூகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட்டுள்ளார். சுமார் ஐம்பது வரு டங்களை முஸ்லிம்களின் பிரச்சினை களை ஆவணப்படுத்துவதற்கு செலவழித் துள்ளார்.

எம்.ஐ.எம்.முகைடீன் போன்ற சமூக செயற்பாட்டாளர்களை முஸ்லிம் சமூகம் கௌரவிப்பதன் மூலமே எதிர்கால முஸ் லிம் சமுதாயத்திற்கான சமூக செயற் பாட்டாளர்களை உருவாக்க முடியும்.

இவ்விடயம் தொடர்பில் அதிக அக் கறை செலுத்துமாறு கிழக்கு முஸ்லிம் களின் உரிமைகளுக்கான அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது.

## முஸ்லிம்கள்... (01ம் பக்கத் தொடர்)

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையில் ஆய்வாளர்களையும் ஆசிரியர் களையும் பரிமாறிக் கொள்வது தொடர் பிலும், இல ங்கை மாணவர்களுக்கு அல் குத்ஸ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயில் வதற்காக இலங்கை அரசாங்கத்தின் செல வில் புலமைப் பரிசில் வழங்குவது தொடர்பிலும் ஒப்பந்தங்கள் கைச்சாத் தாகியுள்ளன.

ரமல்லாவிலுள்ள பலஸ்தீன அதிகார சபையின் தலைமையகத்தில் நடந்த சந்திப்பின் போது இஸ்ரேலிய ஆக்கிர மிப்பினாலும் காஸா முற்றுகை போன்ற வற்றினாலும் பலஸ்தீன மக்கள் அடை கின்ற துன்பங்கள் இலங்கைத் தூதுக் குழுவிடம் முன்வைக்கப்பட்டன. இதன் போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் ராஜித்த சேனாரத்ன, பலஸ்தீனர்களின் குறிக்கோள் நியாயமானது, பலஸ்தீன் விடுதலையாகும் நாளை நாங்கள் ஆவ லுடன் எதிர்பார்க்கிறோம் எனத் தெரி வித்தார்.

ஆனாலும் பரிஸில் அண்மையில் நடைபெற்ற யுனெஸ்கோவின் அமர்வில் பலஸ்தீன மக்கள் விடுவிக்கக் கோரு கின்ற மஸ்ஜிதுல் அக்ஸா மீது இஸ்ரேலி யர்களுக்கு எதுவித உரிமையுமில்லை என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது அதற்குச் சார்பாக இலங்கை வாக்களிக்காமல் விட்டமை பலஸ்தீன முஸ்லிம்கள் தொடர்பிலான இலங்கை யின் இரட்டை நிலைப்பாட்டை வெளிப் படுத்துகிறது.

இலங்கையில் கூட்டாட்சி அமைத் துள்ள இரண்டு அரசுகளும் முஸ்லிம்கள் தொடர்பில் இரண்டு விதமான நிலைப் பாட்டை வெளிப்படுத்துகிறது. முன் னாள் பிரதமர் ஸ்ரீமாவோ அம்மையார் காலத்திலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பலஸ்தீனத்தின் மீதான நட்பை வெளிப் படுத்தி வருகிறது.

நல்லாட்சி அரசின் மற்றுமொரு பக்க மான ஐ.தே.க.வின் அப்போதைய பிரத மராக இருந்த ரணில் விக்கிரமசிங்ஹ, ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்ட மூர்க்கத்தனமான ஆக்கிரமிப்பை கண் டிப்பதற்கான பிரேரணையொன்று 2003 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட போது அதற்கு ஆதரவாகவும் வாக்களிக்க வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயாதீன ஆணைக்.... (05ம் பக்கத் தொடர்)



தில்ருக்ஷியை நியமித்தது பிரதமர் ரணில் என்பது குறிப்பிடத்தக்கது. தில்ருக்ஷி ராஜினாமாவுக்கான காரணத்தை ஊடகங்களிடம் தெரிவிப்பதற்கு மறுத்து விட்டார். எவ்வாறாயினும், அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஆணைக்குழு உட்பட்டிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்களே ராஜினாமாவுக்கான உடனடிக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மொத்தத்தில் நல்லாட்சி அரசாங்கத்தில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை தகர்த்தெறிவதான ஜனாதிபதியின் கூற்று அரசியல் அரங்கில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. ரணில்-மைத்ரிக்கு இடையிலான முரண்பாட்டின் ஆரம்பமே இது எனவும், இதன் இறுதி விளைவு நல்லாட்சி அரசாங்கத்திற்குள் பாரிய சிக்கலை உருவாக்கும் எனவும் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில், ஊடகங்களால் தான் பிழையாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், ஜனாதிபதி மற்றும் ஐ.தே.க.வுக்கிடையிலான உள்ளார்ந்த அரசியல் உராய்வுகளின் பிரதிபலிப்பே ஜனாதிபதியின் இக்கூற்று என்பது மிகவும் தெளிவானது. இதன் அரசியல் விளைவுகள் என்னவாக இருக்கப் போகின்றது என்பது இன்னும் மங்கலாகவே உள்ளது.

## தேசிய ஒற்றுமை.... (04ம் பக்கத் தொடர்)

இடங்களில் சந்திகள் தோறும் விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் உருவாக்குவதனாலும் இந்நாட்டில் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடிய சமாதானத்தை கட்டியெழுப்ப முடியாமல் போகும்.

இவ்வாறான நடவடிக்கைளால் அச்சமும் சந்தேகமுமே வளர்ச்சியுறும். நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக 1956, 1972 மற்றும் 1978களில் அரங்கேற்றியது போன்று சிங்களப் பெரும்பான்மைப் பலத்தை, தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்குவதற்கும் அதன் மூலம் அவர்கள் இரண்டாம் பட்ச பிரஜைகளின் நிலைக்கு தள்ளப்படுவதை தடுப்பதற்கும் தமிழ் மக்களிடம் வாக்குறுதியளிக்க வேண்டும்.

1972 மற்றும் 1978 அரசியலமைப்புகளை விடவும் முற்றிலும் வித்தியாசமான அமைப்பில் இந்நாட்டின் பிரஜைகளது உரிமைகள் சமமான முறையில் பேணப்படுவதாக புதிய அரசியலமைப்பில் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறான அரசியலமைப்பொன்றை கொண்டு வருவதாக தற்போதைய அரசாங்கம் கடந்த இரண்டு தேர்தல்களின் போதும் வாக்குறுதியளித்திருந்தது.

விக்கியின் நடவடிக்கைகளும் ராஜபக்ஷ உள்ளடங்களான ஏனைய இனவாத அமைப்புக்களின் செயல்களும் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்திற்குத் தடையாக உள்ளது. தமிழ் தேசியப் பிரச்சினையைத் தீர்க்காமல் தமிழ், சிங்கள தரப்பினருக்கு இன்னும் பல சந்ததிக்கு மரணத்தையும் அழிவையும் விட்டுச் செல்வதே இவர்களின் நோக்கமாக உள்ளது.

முடியுமென்றால் அதற்குள் முஸ்லிம் பிரச்சினையொன்றையும் ஏற்படுத்தி நாட்டிலுள்ள மக்கள் சண்டையிட்டுக் கொள்ளும் பொழுது அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதே இவர்களின் உடனடி நோக்கமாக உள்ளது.

ஏமாற்றப்படும் அளவுக்கு நாம் சிறு பிள்ளைகள் இல்லை. ஒவ்வொருவரது கருத்துக்களையும் ஏற்று உரிமைகளை மதித்து பொறுமையோடு செயலாற்றும் பொழுதே நீண்ட கால ஐக்கியத்தை உறுப்படுத்த முடிகிறது. 1956 மற்றும் 1983 களில் விழுந்த பாதாளத்தில் 2016, 2017 களில் விழும் அளவுக்கு நாம் சீர்கெட்டுப் போயுள்ளோமா?

விக்னேஷ்வரன் தமிழ் மொழியிலும் பொது பல சேனா மற்றும் ராவண பலய சிங்களத்திலும் பாடுகின்ற சூழ்ச்சிக் கீதங்களுக்கு நாம் பலிக்கடாக்களாவோமா?

## மனித... (03ம் பக்கத் தொடர்)



மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்காவின் வாடிக்கையாளரான இஸ்ரேலை பலப்படுத்துவதற்காக, ஜோர்ஜ் புஷ் ஈராக் மீது யுத்தம் மேற்கொண்டு, ஈராக்கை துவம்சம் செய்து, பல தசாப்தங்கள் பின் நோக்கி ஈராக்கை கொண்டு சென்றதாக ஈராக்கியர்கள் குறிப்பிடுகின்றனர். 2009 ஜனவரி 20 ஆம் திகதி, அமெரிக்க ஜனாதிபதியான பராக் ஒபாமா, 2011 இல் ஈராக்கிலிருந்து கடைசி துருப்புக்களை வெளியேற்றிய போதும், இன்னும் அங்கு அமெரிக்க படையினர் உள்ளனர்.

ஈராக்கில் அமெரிக்காவுக்காக பணியாற்றி, Bell Pottinger நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் முதன்முதலாக ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணலில், 'கேம்ப் விக்டரியில் பணியாற்றியமை, ஆச்சரியமாகவும், கண்களைத் திறந்து விட்டதாகவும், வாழ்வை மாற்றியமைத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மார்டின் வேல்ஸ் (Martin Wells) என்ற இவர் Bell Pottinger நிறுவனத்தின் வீடியோ எடிட்டராகப் பணியாற்றியுள்ளார். இவர் தற்போது இந்நிறுவனத்தில் பணியாற்றுவதில்லை.

இராணுவத்திடமிருந்து கிடைக்கப் பெறும் கடுமையான அறிவுறுத்தல்களுக்கு அமையவே, அல்காயிதா பிரசார வீடியோக்களும், செய்திகளும் தயாரிக்கப்பட்டதாகவும், இராணுவம் சோதனை நடத்தும் இடங்களில் இந்த சிடிக்கள் (CD) கைவிடப்படுவதாகவும் மார்டின் வேல்ஸ் குறிப்பிடுகிறார். இந்த சிடிக்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் குறியீடு மூலம், இந்த போலி வீடியோக்களை தயாரித்தவர்களுக்கு, அல் காயிதா அனுதாபிகளை அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அல் காயிதாவின் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்களின் தகவல்கள் அடங்கிய சிடிக்கள் தயாரிக்கப்பட்டு, உலகெங்கும் ஒளிபரப்பப்பட்டன. இவற்றில் சில வீடியோக்களில், மேற்கு நாடுகளின் தலைநகரங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாகவும் எச்சரிக்கப்பட்டிருந்தன. இந்த போலியான வீடியோக்கள், அமெரிக்காவில் உள்ளவர்களை, எமது இராணுவமும், கூலிப்படையினரும் - Black Water கூலிப்படையை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்- உலகின் இன்னுமொரு பகுதியில் நியாயமான ஒரு யுத்தத்தை மேற்கொள்கின்றனர் என்று சமாதானப்படுத்துவதற்கு உதவியாக ஊக்குவிக்க முடியும். .

தொலைக்காட்சி சேவை, வானொலி, வீடியோ தயாரிப்பு, விளம்பர பலகைகள், பிரசார நடவடிக்கைகள், கருத்துக் கணிப்புக்கள் என்று பல்வேறு சேவைகளையும் வழங்கும் மேலும் 40 அளவிலான அமெரிக்க சார்பு நிறுவனங்கள், ஏற்கனவே ஈராக்கில் செயற்பட்டு, அவற்றுக்கு கூலியும் வழங்கப்படுகின்ற நிலையில், பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட ஒரு நிறுவனத்துக்கு ஏன் பென்டகன் இவ்வளவு பெரிய தொகையைச் செலவழிக்க வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது.

கேம்ப் விக்டரி கட்டிடத்தில் Bell Pottinger பணியாளர்களும், அமெரிக்க இராணுவமும் ஒரே கட்டடத்தில், ஆனாலும் பாதுகாப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் பணியாற்றினர் என்பதும் நோக்கத்தக்கதாகும். இந்த வாய்ப்பு ஏனைய 40 ஊடகங்களுக்கும் ஏன் கிடைக்கவில்லை?.

2012 இல் Bell Pottinger நிறுவனத்தைக் கொள்வனவு செய்ததன் பின்னர், அதன் நிர்வாகமும் மாறியுள்ளது. துப்பறியும் ஊடகவியல் பணியகத்தின் தகவல்களின் படி, இப்போதுள்ள நிர்வாகத்துக்கு, அமெரிக்காவில் செயற்பட்டு, 2011 மூடப்பட்ட குழுவுடன் எந்த தொடர்பும் இல்லை என்பது கவனிக்கத்தக்கதாகும்.

அல்காயிதா அனுதாபிகளை அடையாளம் காணுதல் என்ற பேரில். பொய்யான செய்திகளைக் கொண்டு ஈராக்கியர்களை ஏமாற்றி, அநேகமாக அமெரிக்கர்களையும், ஒருவேளை முழு மொத்த உலகத்தாரையும் ஏமாற்றுவதற்காக பென்டகன் எவ்வாறெல்லாம் நிதி வழங்கியுள்ளது என்பதும் துப்பறியும் ஊடகவியல் பணியகத்தின் விசாரணைகளின் மூலம் திடுக்கிடும் தகவல்களாக வெளியாகியுள்ளன. துப்பறியும் ஊடகவியல் பணியகத்தின் கண்டறிவுகளை பென்டகன் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த கண்டிக்கத்தக்க பொய் செய்திகளை உருவாக்கும் செயல்களுக்கு பொறுப்பானவர்கள், துப்பறியும் ஊடகவியல் பணியகத்திற்கு தமது விளக்கங்களை வழங்குவதன் மூலமே, இதனை செய்ய முடியும். இவ்விவகாரங்கள் குறித்து பொதுவெளியில் விளக்கமளிக்கப்படல் வேண்டும். அதேநேரம். இரகசியம் பேணுதல் என்ற போர்வைக்கு இது உட்படவும் கூடாது. திருப்திகரமான பதில்கள் கிடைக்காதபோது, ஈராக் விவகாரம் குறித்த 'சில்கோட் விசாரணை போன்ற ஒரு பொது விசாரணை குறித்து துப்பறியும் ஊடகவியல் பணியகம் சிந்திக்கலாம். இதனை ஐ.நா. மனித உரிமை ஆணையகம் மற்றும் அதுபோன்ற நிறுவனங்களும் சீர்தூக்கி பார்க்கலாம்.

ஐ.எஸ்.ஐ.எஸ்ஸுக்கு எதிராகவும் இவ்வாறான உபாயங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்றும் விளக்கமளிக்கப்படல் வேண்டும். ஐ.எஸ்.ஐ.எஸ். இனரால் கைது செய்யப்பட்டவர்களின் தலைகள் துண்டிக்கப்படப் போகும் கொடூரமான காட்சிகளின் படங்களை இந்த உலகம் அடிக்கடி கண்டது. இவை உண்மையானவையா? போலியானவையா? இவை ஆக்கிரமிப்புக்களை நியாயப்படுத்துவதற்கான உளவியல் போரின் ஒரு பகுதியா? இந்தக் கேள்விகள், பிரித்தானிய ஊடகவியலாளர்களின் அதிர்ச்சி தரும் அம்பலப்படுத்தல்களிலிருந்து எழுகின்றன.

அதேநேரம். ஐ.எஸ்.ஐ.எஸ் சம்பந்தப்பட்ட சில செய்திகள் நம்ப முடியாதளவுக்கு வேடிக்கையாகவும் உள்ளன. ஒக்டோபர் 06 ஆம் திகதி செய்தி வெளியிட்டிருந்த மெட்ரோ நியூஸ் (Metro News), 'ஐ.எஸ்.ஐ.எஸ். பூனைகளுக்கு எதிராக பத்வா வெளியிட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். இன் சிரேஷ்ட மதப் போதகர் ஒருவர், இஸ்லாமிய சட்டத்தின் பிரகாரம், பூனைகள் வீடுகளுக்கு உள்ளே இனப்பெருக்க நடவடிக்கைளில் ஈடுபடுவதை தடைசெய்துள்ளார் என்று அச்செய்தி குறிப்பிட்டுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ் அங்கத்தவர்கள் வீட்டுக்கு வீடு சென்று, பூனைகளை வேட்டையாடி வருவதாக மெட்ரோ நியூஸ் குறிப்பிட்டுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். இனருக்கு பைத்தியம் பிடித்தவிட்டதா அல்லது இந்த செய்தியை எழுதியவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் அவ்வாறு தோற்றமளிக்கும் வகையில் செய்தியை எழுதினார்களா?

கடந்த 100 வருடங்களாக பல்வேறு காரணங்களைக் கூறி, ஒன்றன் பின் ஒன்றாக, மேற்கு உலகு, மூன்றாம் உலக நாடுகள் மீது மேற்கொண்டுவரும் யுத்தங்கள் சட்டபூர்வமானவையா? நியாயமானவையா? என்று அறிந்து கொள்ளும் உரிமை உலகத்தாருக்கு உள்ளது. அதே வேளை மேற்கு ஊடகங்களில் கணிசமானவை, ஆயுத உற்பத்தி தொழிற்சாலைகள் தொடர்ந்தும் இயங்கவும், மூன்றாம் உலக நாடுகள் மீது நவீன ஆயுதங்களைப் பரிசோதித்துப் பார்க்கவும் ஏற்ற வகையில், ஆயுத உற்பத்தி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுகின்றன என்ற கருத்து உலகம் முழுவதும் பரவி வருகின்றது.

'போலி செய்திகளும், பொய்யான டி.வி.டிகளும்' அறிக்கை, மேற்கின் சர்வதேச ஊடகங்களில் இடம்பிடிக்காமை, மேற்கு ஊடகங்கள் அடைந்திருக்கும் பரிதாபமான நிலையைக் காட்டுகின்றது. ஆனாலும் லோடின் துப்பறியும் ஊடகவியலாளரின் பாராட்டத்தக்க அறிக்கையையும் 'சில்கொட்' அறிக்கையையும் விதிவிலக்காகக் கொள்ளலாம். என்றாலும் உலகில் பலம்வாய்ந்த நாடுகள் உலகை ஏமாற்றும் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு முஸ்லிம் உலகம் தயாராக இல்லை என்பது அதனை விடவும் கவலைக்குரிய விடயமாகும்.

## மஸ்ஜிதுல் அக்ஸா... (03ம் பக்கத் தொடர்)

தீர்மானத்தின் மீது வாக்களிக்காமல் இலங்கை தவிர்ந்து கொண்டமை இலங்கை அரசு நீதியையும் நியாயத்தையும் புறக்கணித்துள்ளது என்பதை புலப்படுத்துகின்றது. பலஸ்தீன மக்களின் நியாயமான கோரிக்கையை இலங்கை அரசு புறக்கணித்துள்ளது. உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்களை அது உதாசீனம் செய்துள்ளது. இஸ்ரேலின் சட்டத்தை மதிக்காத காட்டுமிராண்டித்தனமான போக்கிற்கு இலங்கை அரசு ஆதரவளித்துள்ளது.

எல்லாவிதமான தார்மீக கோட்பாடுகளையும் ஒழுக்க விதிமுறைகளையும், சட்ட ரீதியான இன ரீதியான விழுமியங்களையும் தட்டிக் கழித்து விட்டு உருவாக்கப்பட்ட நாடுதான் இஸ்ரேல். 1930 முதல் பலஸ்தீன மக்களுக்கு எதிராக அது 60க்கும் அதிகமான பாரிய மனிதப் படுகொலை சம்பவங்களுக்கு காரணமாக இருந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாரம்பரிய மேலைத்தேய ஆதரவு சிந்தனையின் அடிப்படையில் நோக்குகின்ற போது இலங்கை இந்த வாக்கெடுப்பில் இருந்து தவிர்ந்து கொண்டமை ஒன்றும் புதுமையாகவும் இல்லை. எண்ணெய் வளம் மிக்க ஈராக்கை 2003 இல் ஆக்கிரமித்து சுமார் 15 லட்சம் மக்களை கொன்று குவித்து அந்த நாட்டை அமெரிக்கா சூறையாடிய போது அதை கண்டிக்க மறுத்த விரல் விட்டு எண்ணக் கூடிய உலகின் அப்போதைய பிரதமர்களுள் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவர் என்பது இங்கே நினைவூட்டத்தக்கது.

ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை அப்போதைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கண்டிக்க முனைந்தார்கள். ஆனால் அரசாங்கத்தை விட்டு விலகி நின்று அதை செய்யுங்கள் என்று ரணில் விக்கிரமசிங்க, அவர்களிடம் கூறியதாகவும் சில தகவல்கள் உள்ளன.

1960 களிலும் 1970 களிலும் உலக அமர்வுகள் பலவற்றில் சுதந்திரத்துக்காவும் அடக்கு முறைக்கு எதிராகவும் இலங்கையின் குரல் ஓங்கி ஒலித்தபோது அது மிகவும் கௌரவத்தோடு செவிமடுக்கப்பட்டது. இன்றைய நிலையில் சர்வதேச அரங்கில் நியாயத்துக்காக குரல் கொடுத்து இலங்கையின் நற்பெயரை சர்வதேச அரங்கில் மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும் என்பதே இன்றைய அவசர தேவையாகும். கொடூரமான இஸ்ரேலிய யுத்தக் குற்றவாளிகளுக்கு செங்கம்பளம் விரிப்பதால் இது சாத்தியமாகாது.

ஆறு தசாப்தங்களுக்கு மேலாக இஸ்ரேல் இலங்கைக்குள் தனது மூக்கை நுழைக்க பல தடவைகள் முயன்றுள்ளது.



ஆனால் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசுகளால் அது வெளியேற்றப்பட்டு வந்துள்ளது.

பலஸ்தீனர்களின் உரிமைகளுக்கான குரலாக தன்னை சித்தரித்துக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் இஸ்ரேலுக்கான கதவுகளை மீண்டும் திறந்து விட்டவர். அந்த சந்தர்ப்பத்தை சியோனிஸ்ட்டுகள் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க ஆகியோரும் சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான பாராளுமன்ற தூதுக் குழுவுக்கும் இஸ்ரேலில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அன்று முதல் பல அமைச்சர்களும் உயர் அரச அதிகாரிகளும் இஸ்ரேல் சென்று வந்துள்ளனர். உண்மையில் இஸ்ரேலைப் பொறுத்தமட்டில் இது பெரும் சாதனையாகும்.

இஸ்ரேலுக்கு சார்பான இந்தக் கொள்கை தற்போது மிகத் தீவிரமாகப் பின்பற்றப்படுகின்றது. ஐ.தே.க தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்தது முதல் யூதர்களுக்கு இந்த நாட்டின் கதவுகள் தாராளமாகத் திறந்து விடப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அழித்தொழிக்க வேண்டும் என்பதுதான் இவர்களின் உலகளாவிய வேலைத் திட்டமாகும். எனவே இலங்கையுடன் இஸ்ரேல் உறவுகளைப் பேணுவது உண்மையில் எந்த வகையிலும் இலங்கைக்கு உதவுவதற்காக அல்ல. மாறாக அவர்களது நிகழ்ச்சி நிரலை இலங்கையில் அமுல் செய்து இலங்கையை கொலைகளமாக மாற்றி இரத்த ஆறை ஓட வைப்பதுதான் அவர்களின் திட்டமாகும்.

ஜெர்மனின் நாசிப் படைகளால் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாக நாடகமாடி உலக அரங்கில் தமக்கான ஆதரவை திரட்டும் முயற்சியில் யூதர்களால் ஜெர்மனியில் நிறுவப்பட்டுள்ள ஹொலோகோஸ்ட் நூதனசாலைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை விஜயம் செய்ய வைத்தது அவர்களுக்கு அண்மைக்காலத்தில் கிடைத்துள்ள குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

அமெரிக்க ஐரோப்பிய ஆதரவில் பலஸ்தீன பூமியில் தமக்கான ராஜ்யத்தை நிலை நிறுத்திக் கொள்ளும் ஒரு முயற்சியே இந்த நூதனசாலையாகும். இந்த விஜயத்தின் பாரதூரத் தன்மை அது ஏற்படுத்தும் தாக்கங்கள் என்பனவற்றை புரிந்து கொள்ளத் தவறிய ஒரு மனிதராகவே மைத்திரிபால சிறிசேன அங்கு விஜயம் செய்துள்ளார்.

அகன்ற இஸ்ரேலிய ராஜ்யத்தை உருவாக்கும் நோக்கில் உலகம் முழுவதும் பயங்கரவாத எதிர்ப்பு போராட்டம் எனும் போர்வையில் முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்துக்கும் முடிவு கட்டும் வகையில் மத்திய கிழக்கு பிராந்தியத்தை அழிப்பதில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் பணியாற்றி வருகின்றன.

இந்த அமெரிக்க, ஐரோப்பிய, இஸ்ரேல் அச்சில் இந்தியாவின் ஆர்.எஸ்.எஸ் அரசும் தற்போது இணைந்துள்ளது. இவர்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அழிப்பதை தங்களது பிரகடனமாகவே வெளியிட்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தச் சக்கர அச்சில் இப்போது இலங்கையும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவே எண்ணத் தோன்றுகின்றது. அதற்கான அறிகுறிகளைக் காணக் கூடியதாக உள்ளது. சிவசேனா அமைப்பு இலங்கையின் வவுனியாவில் தோற்றம் பெற்றுள்ளமையும் நல்லாட்சி அரசு அதனைக் கண்டும் காணாமல் விட்டு வைத்துள்ளமையும் இதற்கு உதாரணமாகும்.

ஆனால் இந்த சில்லுக்குள் சிக்குண்டும் கூட இலங்கை எதிர்பார்க்கும் வெளிநாட்டு முதலீடு இன்னும் போதிய அளவில் கிடைக்கவில்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும். மாறாக வளைகுடா நாடுகளில் இருந்து அனுப்பப்படும் புலம் பெயர்ந்த உழைப்பாளிகளின் வருமானத்திலேயே இலங்கை இன்றும் பாரிய அளவில் தங்கியுள்ளது. இந்த வருமானம் இல்லையென்றால் நாட்டின் பொருளாதாரமே ஆட்டம் கண்டு விடும் என்பதே யதார்த்தம்.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - | 5500.00 |
| 13 இதழ்கள் | - ரூபா 650.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - | 6500.00 |
| 26 இதழ்கள் | - ரூபா 1300.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - | 4700.00 |
| | | | | | | சீனா | - | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0112661258 People's Bank A/C: 056100150078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் வைத்தியரின் தஃவா சார்ந்த பணி

முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் ஓர் அழைப்பாளனே. அவரது குறிப்பிட்ட துறைசார் நிபுணத்துவத்தையும் தொழின்மையையும் இதற்கான களமாக அவர் பயன்படுத்த வேண்டும்.

அல்குர்ஆன் ஆலஇம்றான் எனும் அத்தியாயத்தில், உங்களில் ஒரு சமூகத்தினர் இருக்கட்டும். அவர்கள் நன்மை ஏவி, தீமையைத் தடுக்கட்டும். நன்மையின் பக்கம் மக்களை அழைக்கட்டும். அவர்களே வெற்றியாளர்கள் என வலியுறுத்துகின்றது.

இந்த வசனத்தில் வரும் 'கும்' எனும் வார்த்தைக்கும் 'உம்மதுன்' எனும் வார்த்தைக்கும் விளக்கமளிக்கின்ற ஷெய்க் ரஷீத் ரிழா, அவரது அல் மனார் எனும் விளக்கவுரை நூலில் மிக அற்புதமான ஒரு விளக்கத்தை முன்வைக்கின்றார்.

அல்குர்ஆன் முழு மனித குலத்திற்கும் இறக்கப்பட்ட வேதமாகும். எனவேதான் கும் என்பது ஒட்டுமொத்த மனித குலத்தையும் குறிக்கின்றது. அப்படியாயின், இவ்வசனத்தில் இடம்பெறும் 'உம்மா' என்ற சொல் முழு முஸ்லிம் உம்மத்தையும் குறிக்கின்றது.

அதன்படி, குறிப்பிட்ட காலத்தில் மத்ரஸாக்களில் சேர்ந்து மார்க்கத்தைப் பயின்றவர்கள் மாத்திரமே 'தாஈ' என நாம் வரையறுப்பது பொருத்தமன்று. ஆசிரியராக, அதிபராக, வைத்தியராக, பொறியியலாளராக என நீண்டு செல்லும் எந்தத் தொழின்மை சார்ந்தவராக இருப்பினும், அவர் முஸ்லிமாக இருக்கும் நிலையில் அவருக்கென்று தஃவாவில் ஒரு பணி உள்ளது. அது அவரது தொழின்மை சார்ந்தது என்பதையும் இஸ்லாம் அழுத்தமாக வலியுறுத்துகின்றது.



அத்தியாயம் அத்தூரை படித்துப் பார்க்கும்போது, இயற்கையை, அதற்குப் பின்னாலுள்ள படைப்பின் ரகசியங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்வது ஒருவரது விசுவாசம் பலம் பெறுவதற்குத் துணை செய்கின்றது எனும் கருத்தைப் புரிந்துகொள்ளலாம்.

மனித உடலும் அதன் நுணுக்கமான படைப்பும் அளவுப் பரிமாணமும் பற்றிய அறிவு மனிதன் அல்லாஹ்வை விசுவாசம் கொள்வதற்கும் விசுவாசத்தை உறுதிப்படுத்தவும் துணை செய்கின்றது. நாம் எமது அத்தாட்சிகளை அவர்களுக்கு முன்னால் தோன்றும் வான வெளியிலும் அவர்களிலும் (அவர்களின் உடல்களிலும்) காண்பிக்கின்றோம் என்று குர்ஆன் இவ்வுண்மையை பிரஸ்தாபிக்கின்றது.

மனித உடலில் மறைந்துள்ள அல் லாஹ்வின் அற்புத நுணுக்கங்களையும் படைப்பு ரகசியங்களை யும் குர்ஆன் மற்றொரு இடத்தில் ஓர் அருள் என்று வர்ணிக்கின்றது. உடற் கூற்றியலில் அடங்கியுள்ள அல்லாஹ்வின் தெய்வீக அற்புதங்களை மனித குலத்திற்கு வெளிப்படுத்தும் மகத்தான பொறுப்பை மருத்துவர்களே ஏற்றுள்ளனர்.

மார்க்கத்தை முழுமையாகப் பின்பற்றும் ஒரு முஸ்லிம் வைத்தியர் நோயாளிக்கும் இறைவனுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்துவதற்கு தனது மருத்துவ அறிவை பிரயோகிப்பதையே ஒரு மருத்துவர் மேற்கொள்ளும் தஃவா என்கிறோம்.


அதேபோன்று ஒரு முன்மாதிரி முஸ்லிமாக இருந்து, வைத்தியத்துறை ஒழுக்கங்களை முறையாகப் பின்பற்றுவாராயின், அதுவே அவரது தஃவாவாக இருக்கும்.

எனக்குத் தெரிந்த ஒரு வைத்தியர், கற்கும் காலத்தில் தனது பீட மாணவர்களுக்கு குத்பா நிகழ்த்தியதோடு, மருத்துவரானதற்குப் பின்னர் அல்குர்ஆனை முழுமையாக மனனம் செய்து, ஒரு ஹாபிழாகவும் மாறியுள்ளார். நவீன இஸ்லாமிய அறிஞர்களின் அறபு நூல்களை வாசிக்கும் அளவுக்கு அறபு மொழியையும் ஆழமாகக் கற்றுள்ளார். இவையெல்லாம் நாடினால் சாத்தியமாகக் கூடியவை என்பதை அவர் நிறுவியுள்ளார்.

இவரைப் போன்றுதான் எல்லா முஸ்லிம் வைத்தியர்களும் இருக்க வேண்டும் என்று நான் வாதடவில்லை. குறைந்த பட்சம் நோயாளிகளிடம் அல்லாஹ்வை நினைவுகூர்வதற்கும் அவனை நெருங்குவதற்கும் துணை செய்யும் வகையில் மருத்துவர்களால் தமது மருத்துவ அறிவைப் பயன்படுத்தலாம்.

மதச்சார்பற்ற முஸ்லிம் மருத்துவர்கள் இப்படி இருப்பதில்லை. அடிப்படையில் இஸ்லாமியப் பற்றுறுதியும் மார்க்கத்தைப் பின்பற்றும் ஆர்வமும் கொண்ட பல வைத்தியர்கள் உள்ளனர். அவர்கள் தமது தொழின்மை சார்ந்தும் நேரடியாகவும் இஸ்லாமிய தஃவாவுக்குப் பங்களிக்கின்றனர். இதுபோன்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

**குறிப்பு:** இதழ் 352 இல் புலமைப் பரிசில் பெறும் மருத்துவ மாணவர்களில் எவருமே அதனை மீளச் செலுத்துவதில்லை எனக் குறிப்பிட்டிருந்தோம். ஆயினும், சில மாணவர்கள் பட்டம் பெற்றதன் பின்னர் அதனைத் திருப்பிச் செலுத்தியுள்ளனர். எவரும் திருப்பிச் செலுத்திவில்லை என்று குறிப்பிட்டமைக்கு வருந்துகிறோம்.



# கற்றலில் ஞாபகம்

படிப்பு எனும் வார்த்தையை பள்ளி வாழ்க்கை முழுவதும் நாம் கேட்கின்றோம். குறிப்பிட்ட மனனச் செயற்பாட்டைக் குறிப்பதற்கு இந்தச் சொல்லைப் பயன்படுத்துகின்றோம். ஆயினும், படிப்பு என்பதற்குள் பலதும் அடங்குகின்றது. குறிப்பேட்டையோ பாடப் புத்தகத்தையோ மீண்டும் படிப்பது, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, விடையைச் சரிபார்ப்பது ஆகியவை இதில் அடங்கும். இதில் பெரும் பகுதி மனனம் செய்து படிப்பதுதான்.

பாடங்கள், சூத்திரங்கள், வரைவிலக்கணங்கள், கேத்திர கணித வாய்ப்பாடுகள், ஆவர்த்தன அட்டவணைகள், செய்திகள், வழிமுறைகள் என பலதையும் நினைவில் வைக்க வேண்டும். சிலபோது முழுப் பந்தியையும் மனனம் செய்ய வேண்டும். மாணவர்கள் இதற்கென சில உத்திகளைப் பின்பற்றினாலே தவிர இவற்றை முழுமையாக ஞாபகத்தில் வைக்க முடியாது.

இங்கு கற்றலில் ஞாபகம் வகிக்கும் பாத்திரத்தைத் தெளிவாக உணரலாம். ஞாபகம் என்பது நாம் கற்ற செய்திகளை மனதில் தேக்கி வைப்பதும், தேவைப்படும் பட்சத்தில் அவற்றை மீட்டிப் பெறுவதுமாகும். கற்றலும் நினைவாற்றலும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. கற்ற ஒன்றை நினைவுபடுத்தல் பல்வேறு வகையில் அமைய முடியும். பகுதிக் குறியீடுகளை வைத்து நினைவுபடுத்தல், மீட்டிப் பார்த்தல், அறிந்துகொள்ளல், மீண்டும் கற்றல் போன்ற வடிவங்களில் அவை நினைவுபடுத்தப்படுகின்றன.

முன்பு அனுபவப்பட்ட ஒரு செயலினை அதன் பகுதிக் குறியீடுகளை வைத்து முழுவதும் நினைவுகூர்வதை பகுதிக் குறியீடு அடிப்படையில் நினைவுகூர்தல் (Re-integrative Memory) எனலாம். உதாரணமாக ஒரு திருமண வைபவத்தை அதனுடன் தொடர்பான ஏனைய நிகழ்வுகளை வைத்து முழுமையாக நினைவுகூர்வது.

ஒரு பாடத்தினை சிறப்பாகக் கற்று ஞாபகத்தில் வைத்திருப்போம். தேவைப்படும்போது அதனை ஞாபகத்திற்குக் கொண்டு வர முடியும். இதனையே மீட்டிப் பார்த்தல் (Re-call) என்கிறோம். எடுத்துக்காட்டாக சிறுவயதில் கற்ற ஹதீஸ்கள், துஆக்கள் தேவைப்படும்போது நினைவுக்குக் கொண்டுவருவதைக் குறிப்பிடலாம்.

நாம் ஏற்கனவே படித்த ஒன்று அல்லது அனுபவப்பட்ட நிகழ்ச்சியொன்று மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் நமது அனுபவத்திற்கு வந்தால் அதை அறிந்துகொள்ளல் அல்லது இனங்காணல் எனலாம். உதாரணமாக பரீட்சைத் தாள்களில் வழங்கப்படும் பல்தேர்வு வினாக்களிலிருந்து ஒன்றைத் தெரிவுசெய்வதற்கு இவ்வகை நினைவுகூர்தலே உதவுகின்றது. அங்கு நான்கு விடைகள் வழங்கப்பட்டிருக்கும். ஏற்கனவே நாம் கற்றதை அடிப்படையாக வைத்து சரியானதைத் தெரிவுசெய்கிறோம். அத்தகைய தெரிவுக்கும் நினைவாற்றலே உதவுகின்றது.

நாம் ஒரு முறை கற்ற விடயம் முற்றிலும் மறந்து விட்டது போலத் தோன்றினாலும், மீண்டும் ஒரு தடவை அதனை திரும்பக் கற்பதன் மூலம் எளிதில் நினைவுபடுத்திக் கொள்ளலாம். உதாரணமாக, ஒரு பாடல் தற்போது மறந்துவிட்டது போல் இருந்தாலும், அதைப் படிக்கும்போது நன்கு நினைவுக்கு வரும். இப்பாடத்தைப் படிப்பதற்கு ஆரம்பத்தில் 9 மணி நேரமும் 8 முறைகளும் எடுத்திருக்கலாம். இப்போது 10 நிமிடத்தில் ஒரே தடவையில் நினைவுக்கு வரலாம்.

நினைவில் வைப்பதும் மீட்டியெடுப்பதும் பல்வேறு செயன்முறைகளைக் கொண்டது. முதலில் நாம் ஞாபகத்தில் வைப்பது குறியீடாக மாற்றப்பட்டு, நினைவில் சேமிக்கப்படுகின்றது. பின்னர் அது மீட்டப்படுகின்றது. அதாவது நினைவு வைக்கத் தக்க வகையில் அனுபவங்கள் செய்திகளாகவும் குறியீடுகளாகவும் மாற்றப்பட்டு, மூளையில் சேமிக்கப்படுகின்றது. பின்னர் அவை தேவைப்படும்போது மீட்கப்படுகின்றன.

ஒருவருக்கு இம்மூன்று நிலைகளும் சரிவர செயல்படவில்லையாயின் அவரது நினைவாற்றல் குறைவாகும் என்பது உளவியலாளர்களின் கருத்தாகும். உளவியலாளர்களும் கல்வியியலாளர்களும் ஞாபகத் திறனை மேம்படுத்துவதற்கு பல்வேறு வழிகளைக் காண்பிக்கின்றனர். அவற்றை இன்னொரு பத்தியில் காண்போம்.

**மீள்பார்வை 20 ஆவது ஆண்டு நிறைவில்...**

# மொனராகலை மாவட்ட கள அனுபவம்

மீள்பார்வை அலுவலகம் திஹாரியில் இயங்கிய காலம். கிடைத்த கள அனுபவங்களும் பயண அனுபவங்களும் மறக்க முடியாதவை. 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒரு நாள் ஒரு வைகறைப் பொழுதில் அம்பாறை நகரிலிருந்து எனக்குத் தெரிந்த உறவுக்காரர் ஒருவரோடு (அவர் எனது பெரியப்பாவின் மகன்) பிபிலை பேரூந்தில் உட்கார்ந்திருந்தோம்.

2 மணித்தியாலங்களில் பிபிலை நகரை அடைந்த நாம், அங்கிருந்து மற்றொரு பேரூந்தில் கனுல்வெல எனும் ஊரைச் சென்றடைந்தோம். அது ஒரு கடும் கோடை. கிணற்றில் நீரை அள்ளுவதற்கு வாளியை இறக்கினால் அது மண்ணையும் சேர்த்து காவிக்கொண்டு வரும் அளவு கிணறுகள் வற்றிப் போன ஒரு வரட்சிக் காலம். மொனராகலை மாவட்டம் இயல்பாகவே வரட்சியானது. மழை வீழ்ச்சி குறைந்த மாவட்டங்களில் அதுவும் ஒன்று.

எனினும், இலங்கை முஸ்லிம் சமூகத்தில் அறிமுகமற்ற மொனராகலை முஸ்லிம்கள் குறித்து ஆராய வேண்டும் என்ற நோக்கில் எமது பயணம் அமைந்திருந்ததனால் வரட்சியைக் கண்டு நாம் வாடிவிடவில்லை. சுட்டெரிக்கும் வெயிலில் பயணித்து, இந்தக் கள ஆய்வை எப்படி நிறைவுசெய்யப் போகின்றோம் என்ற கேள்வி பேரூந்தை விட்டு இறங்கும்போதே எழுந்துவிட்டது.

கனுல்வெலயில் என்னோடு வந்தவருக்குத் தெரிந்த ஒரு வீட்டில் மதிய உணவை உட்கொண்டு சிறிது நேரம் ஓய்வெடுத்த பின்னர் எங்களது பணியைத் துவங்கினோம். முதலில் கனுல்வெலயின் வரலாறு, கல்வி, கலாசாரம் குறித்து போதுமான தகவல்களைத் திரட்டினோம். அங்கு சல்ஸபீல் மௌலவி மிகுந்த உற்சாகத்துடன் நாம் கோரிய தகவல்களையெல்லாம் வழங்கினார்.

மொனராகலை ஊவா மாகாணத்தில் பதுளையை எல்லையாகக் கொண்ட மாவட்டம். பயிர்ச் செய்கைக்குப் பெயர் போனது. பிரித்தானியர் ஆட்சியின்போது அது முப்பனை வெளி என்றே அழைக்கப்பட்டது. தற்போது மொனராகலை நகரிலுள்ள சந்தைப் பகுதியில் ஒரு காலத்தில் மூன்று பனை மரங்கள் அருகருகே நின்றதனால் அந்நகரம் முப்பனை வெளி என்றே அழைக்கப்பட்டதாக ஒரு வரலாற்றுக் குறிப்பு உள்ளது. ஆரம்பத்தில் முஸ்லிம்களும் தமிழர்களுமே நகரில் பெரும்பான்மையாக இருந்துள்ளனர். நகரம் தமிழ்ப் பெயரினால் அழைக்கப்பட்டமைக்கு இதுவும் ஓர் ஆதாரமாகும்.

மொனராகலை நகரின் கிழக்குத் திசையில் அம்பாறை வீதியில் தற்போது 'சிறிகல' என அழைக்கப்படும் பிரதேசத்திலுள்ள ஒரு கற்பாறையில் மயிலின் சின்னமொன்று பொறிக்கப்பட்டுள்ளது. இதுவே இம்மாவட்டம் சிங்களத்தில் மொனராகல என அழைக்கப்படுவதன் பின்புலமாகும்.

இப்பிரதேசத்திற்கு சிங்கள வரலாற்றில் இன்னொரு பெயரும் உள்ளது. இன்றளவிலும் அப்பெயர் பிரபலம் பெற்றுள்ளது. இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களில் இப்பிரதேசத்தில் நெற்செய்கைக்கான வயற்காணிகள் நிறைந்துள்ளதனால் இதனை வெல் லக்ஷ என்றும் அழைத்தனர். அதுவே பின்னர் வெல்லஸ்ஸ என மருவியது. இன்றும் இப்பிரதேசம் ஊவா வெல்லஸ்ஸ என அழைக் கப்படுவதற்கு இதுவே பிரதான காரணமாகும்.

இம்மாவட்டத்தில் முஸ்லிம்களின் சனத்தொகை ஒப்பீட்டு ரீதியில் மிகக் குறைவாகும். 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தொகை மதிப்பீட்டின்படி, மொனராகலை மாவட்டத்தில் 9702 முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இலங்கை முஸ்லிம் சனத்தொகையில் இது 0.5 வீதமாகும். முஸ்லிம்கள் இதைவிடக் குறைவான எண்ணிக்கையில் வாழும் மாவட்டங்கள் மூன்றே உள்ளன. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி என்பவையே அவை.

மொனராகலை மாவட்டத்தில் மெதகம, கனுல்வெல, கொடிகாம (கொட்டபோவ), பகினிகஹவெல, படல்கும்புர, அலுபெத்த, வெல்லவாய, மொனராகலை நகரம் போன்வற்றிலேயே முஸ்லிம்கள் ஓரளவு செறிவாகவும் பரந்தும் வாழ்கின்றனர்.

எங்களது தேடல் கனுல்வெலயிலிருந்து ஆரம்பித்தது. ஆசிரியர்கள், கிராம அதிகாரி, பள்ளிவாசல் தலைவர், ஊரில் மிக வயது முதிர்ந்தோர், அரச ஊழியர்கள் என பல்வேறு தரப்பினரிடமிருந்தும் ஊர் பற்றிய முழுத் தகவல்களையும் சேர்த்தோம். தேவையானவற்றை பதிவுசெய்ததோடு, குறிப்பேட்டில் குறிப்பும் எடுத்துக் கொண்டோம்.

என்னோடு வந்தவரின் உதவி இல்லாமல் இந்த மாவட்டத்திற்குள்ளேயே என்னால் நுழைந்திருக்க முடியாது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. முன் பின் எவரையும் தெரியாத நிலையில், சிங்கள மொழியும் சுத்த சூனியமாக இருந்த ஒரு காலத்தில், இப்படியொரு பயணம் எப்படியும் சாத்தியமில்லை. எனினும், எனது உறவுக்காரரின் உற்சாகமும் உதவியுமே இம்மாவட்டத்தின் அனைத்து முஸ்லிம் பகுதிகளுக்கும் சென்று, முஸ்லிம்கள் குறித்த தகவல்களைத் திரட்டி எழுதுவதற்கு வாய்ப்பளித்தது.

இரண்டாம் நாள் மெதகம, மூன்றாம் நாள் கொடிகாம என எங்களது அலைச்சலும் தேடலும் தொடர்ந்தது. கொடிகம என்ற ஊரில் எங்கள் ஊரைச் சேர்ந்த சிலர் நீண்டகாலமாக வாழ்ந்து வருவதை அங்கு சென்றதன் அறியக் கிடைத்தது.

இன்னொரு சுவாரஸ்யமான விடயமும் எங்கள சிந்தனையைக் கிளறியது. அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் பூர்வீகமும் மொனராகலை மாவட்ட முஸ்லிம்களின் பூர்வீகமும் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ள விடயத்தை அன்றுதான் நாம் அறிந்தோம். முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் எம்.எச்.எம். அஷ்ரபின் தந்தை வழி மூதாதையர்கள் இங்கிருந்துதான் கல்முனைக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இன்றுவரை எங்கள் ஊருக்கும் கொடிகாமத்திற்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருந்து வருகின்றது.

தென் கிழக்குப் பிராந்தியத்திற்கு மொனராகலையிலிருந்தே முஸ்லிம்கள் குடிபெயர்ந்துள்ளனர். இப்படி சுவாரஸ்யமான சில வரலாற்றுத் தகவல்களை கள ஆய்வினூடாகக் கற்றுக்கொண்டோம். என்னுடன் உதவிக்கு வந்தவர், நான்காம் நாள் அவசரமாக ஊருக்குச் செல்ல வேண்டும் என்று வெளிக்கிளம்பி விட்டார். ஐந்தாம் நாள் நான் தனித்தலைய வேண்டியிருந்தது.

அலுபெத்த எனும் கிராமம் குறித்து ஆராய்வதற்கு தயாராகிக் கொண்டிருந்தேன்.

அபூ ஆகிப் ஸெய்ன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானத்தில் தீர்மானிக்கப்பட்டு பூமியில் புழக்கத்துக்கு விடப்படும் அன்பு



இரண்டு மரணங்களால் இலங்கை கொஞ்சம் ஆடிப் போயிருக்கின்றதென்றால் அது மிகையான கூற்றல்ல என்றே நினைக்கிறேன். அந்த இருவருடனும் எனக்கு எவ்வித சம்பந்தமும் இருந்ததில்லை. ஒருவரைப் பற்றி இதற்கு முன் கேள்விப்பட்டிருக்கிறேன், மற்றவரைப் பற்றி நேற்றுத் தான் கேள்விப்பட்டேன், அவரது மரணத்துக்குப் பின்னர். ஷைகுல் ஃபலாஹ் அப்துல்லாஹ் ஹஸரத் அவர்களதும், ஆதில் பாக்கிர் மாக்காரினதும் மரணங்களே அவை.

மரணம் இருபதுகளிலும் வரும் எண்பதுகளிலும் வரும் என்பதற்கான இன்னுமோர் உதாரணம்.

ஆனால் எப்போது மரணிக்கின்றோம் என்பதை விட எப்படி மரணிக்கின்றோம் என்பதுவும் எதனை விட்டுச் செல்கிறோம் என்பதுவுமே முக்கியத்துவம் பெறுகின்றது. மரணித்தவரின் நலவைப் பேச வேண்டும் என்பதற்காக வேண்டி மாத்திரமே எல்லோரும் அவ்வாறு பேசுவதில்லை. மிகப் பெரும்பாலும் நல்லவர்களின் மீதான மக்களின் அன்பானது வானத்தில் தீர்மானிக்கப்பட்டே பூமியில் புழக்கத்துக்கு விடப் படுகின்றது. நிச்சயமாக ஈமான் கொண்டு, ஸாலிஹான அமல்களிலும் ஈடுபடுகின்றார்களே, அவர்கள் மீதான அன்பை அர்ரஹ்மான் ஏற்படுத்தி விடு கின்றான்'' என்று ஸூறா மர்யமின் 96வது ஆயத்தில் அல்லாஹ் சொல் கின்றான்.

இருபதுகளில் மரணித்த ஆதிலைப் பற்றி மனிதர்கள் பேசு வதையும் எழுதுவதையும் பார்க்கும் போதும், அகவை எண்பதைத் தாண்டி மரணித்த அப்துல்லாஹ் ஹஸரத்தின் பணிகள் மற்றும் வாழ்க்கை பற்றி பேசப்படுவதையும் எழுதப்படுவதையும் பார்க்கும் போதும் அவர்களின் மீதான மனிதர்களின் அன்பும் அபிமானமும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்த தாகவே மனது சொல்கிறது. இந்த மரணச் செய்திகளும் தொடர்ந்து வந்த அவர்களைப் பற்றியதான செய்திகளும் இப்படியொரு மனநிலையை ஏற்படுத்தி விட்டது.

இப்படியானதொரு ஆலிம், பண்பாளர் இவ்வளவு காலம் நம் நாட்டில் இருந்தும் கூட அவரை ஒரு முறையாவது சந்திக்க முடியாமல், அவரிடம் கால் மடித்து உட்கார்ந்து நாலு வார்த்தைகளைக் கற்க முடியாமல் போய்விட்டதே என்றதோர் எண்ணம் அப்துல்லாஹ் ஹஸரத் விடயத்திலும், ஒரு நல்ல சமூக உணர்வுள்ள, இளம் வயதிலேயே பல தளங்களில் கால் பதித்த, சிறந்த ஆளுமையும் பண்பாடும் கொண்ட ஓர் இளைஞனுடன் நட்பு வைப்பதற்காகக் கூட அவன் பற்றி அறியாமல் இருந்திருக்கின்றோமே என்ற எண்ணம் ஆதில் விடயத்திலும் மனதில் ஒரு பச்சாதாபமாய் இருக்கின்றது.

நல்ல மனிதர்களின் வாழ்க்கையும் மரணமும் ஏற்படுத்துகின்ற அதிர்வுகள் அவர்கள் பற்றி அறியாதவர்களின் தெரியாதவர்களின் உள்ளங்களையும் தட்டும் வல்லமை படைத்தவை என்பதற்கு இது நல்லதொரு சான்று. நிச்சயம் இவ்வாறான எண்ண அலைகளுக்கு ஆட்பட்டவன் நான்



வயதால், பணியால், அனுபவத்தால், அடைவுகளால் என அனைத்தினாலும் வித்தியாசமான இரண்டு ஆளுமைகள். ஆனால் இருவரது மரணமும் சமூகத் தளத்தில் ஏற்படுத்திய அதிர்வுகளும், மரணம் என்ற வயது வித்தியாச மின்றிய அல்லாஹ்வின் பிடியும் பொதுவானதென்பதே இங்கு இருவரைப் பற்றியும் பேசிய தற்கான காரணம்.

நளீம் ஹாஜியாரின் மரணத்துக்கு சில நாட்களுக்கு முன்பு அவரை சந்தித்து விட்டு வந்ததால் மட்டுமாக இருக்க முடியாது என்று உறுதியாக நம்புகிறேன்.

தென்னிந்தியாவின் பல்வேறு வகைப்பட்ட தாக்கங்கள் இலங்கை முஸ்லிம்களின் மார்க்க விடயத்தில் கலந்திருக்கின்றன. அவை பெரும் பாலான சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட சிந்தனைகளாக மட்டுமே இருந்திருக்கின்றன. ஆனால் ஆறு தசாப் தங்காக ஓரிடத்தில் இருந்து தொண்டாற்றுவதற்காய், மார்க்கத்தையும் மனித நேயத்தையும் விதையாக நட்டு விருட்சமாக மாறும் வரை அதனைக் கண்காணித்து வளர்த்தெடுப்பதற்காய் அவர் மேற்கொண்ட ஒரு ஹிஜ்ரத்தாகவே அதிராம்பட்டிணம் முதல் காத்தான்குடி வரையிலான அவரது பயணத்தைக் கருத வேண்டியிருக்கின்றது.

அப்துல்லாஹ் ஹஸரத்தும் ஆதில் பாக்கிர் மாக்காரும் ஒரே இடத்தில் வைத்து ஒப்பிடக்கூடியவர்களல்லர்.

ஏற்பட்டிருந்த மனநிறைவும், மனித வெள்ளத்தில் அவரது சந்தூக் மிதந்து வந்த போது அவருக்காகத் தயார் செய்யப்பட்டிருந்த மண்ணறையைச் சுற்றி மனித வளையம் ஏற்படுத்தி ஒரு கேடயமாய் நின்று அந்த மனித வெள்ளத்தின் அலைகளுக்கான தடுப்புச் சுவராக மாறி அன்னாரின் சந்தூக் மாத்திரம் எம்மைத் தாண்டிச் செல்வதற்கு அனுமதித்த ஐம்பது அறுபது பேர்களில் ஒருவனாய் இருந்த போது ஏற்பட்ட உணர்வுகளும் காலத்தால் அழியாதவை. ஆனால் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மேற்கில் உதித்த ஒரு படிக்காத அறிவுத் தந்தை போல கிழக்கில் வாழ்ந்த படித்த மேதையான இன்னுமோர் அறிவுத் தந்தையான அப்துல்லாஹ் ஹஸரத்தின் மரணமும், அவரின் இறுதிப் பயணத்தில் திரண்டிருக்கும் கூட்டமும் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பிடித்து விட்டன.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் ஒரு தசாப்த இடைவெளியில் இரு பெரும் சகாப்தங்கள் முடிவுக்கு வந்திருக்கின்றன. அல்லாஹுத் தஆலா இலங்கையின் அறிவொளி பரப்பிய அவ்விரு அறிவுத் தந்தையரையும் பொருந்தி, அவர்களது தவறுகளை மன்னித்து சுவனத்தின் உயர்ந்த பாக்கியங்களை அவர்களுக்கு நஸீபாக்குவானாக. இளம் வயதிலேயே உலகைப் பிரிந்தாலும் பலரின் மனதை வென்று உள்ளங்களில் வாழும் அந்த இளைஞனின் பாவங்களையும் மன்னித்து சுவனப் பூங்காவின் சொந்தக்காரர்களில் ஒருவனாய் மாற்றி விடுவானாக. எமது வாழ்வையும் மரணத்தையும் அவனுக்குப் பொருத்தமானதாகவும் உலகுக்குப் பிரயோசனமானதாகவும் மாற்றியருள்வானாக.

- அப்ரிபான் அப்துல் ஹலீம்

# நண்பனா? எதிரியா? முடிவு செய்

அந்தக் கிராமத்தில் ஒரு ஏழை விவசாயி இருந்தான். அவனுக்கு பக்கத்து வீட்டில் ஒரு வேட்டைக்காரன் இருந்தான்.

வேட்டைக்காரனிடம் அவன் வேட்டைக்கு பயன்படுத்தும் வேட்டை நாய்கள் சில இருந்தன.

வேட்டைக்காரனின் நாய்கள் அடிக்கடி வேலி தாண்டி சென்று விவசாயியின் ஆட்டுக்குட்டிகளை துரத்துவதும் கடித்து குதறுவதும் இருந்தன.

இதனால் கலக்கமுற்ற விவசாயி தன் அண்டைவீட்டுக்காரனான வேட்டைக்காரனை சந்தித்து ''அப்பா உன் நாய்களை கொஞ்சம் பார்த்துக்கொள். அவை அடிக்கடி என் பகுதிக்கு வந்து ஆடுகளை தாக்குகின்றன. காயப்படுத்துகின்றன'' என்றான்.

வேட்டைக்காரன் அதை சட்டை செய்யவேயில்லை. செவிடன் காதில் ஊதிய சங்காக அவை எந்த பயனும் இன்றி போனது.

ஒரு முறை நாய்கள் இதே போல வேலி தாண்டி வந்து பட்டிக்குள் புகுந்து பல ஆட்டுக்குட்டிகளை கடித்துக் குதறின.

இந்த முறை இரண்டில் ஒன்று பார்த்துவிடுவது என்று மீண்டும் வேட்டைக்காரனிடம் புகார் செய்ய சென்றான் விவசாயி.

வேட்டைக்காரன் இந்த முறை சற்று கோபத்துடன், ''இதோ பார் ஆட்டை துரத்துறது கடிக்கிறது இதெல்லாம் நாயோட சுபாவம். அதுக்கெல்லாம் நான் ஒன்னும் செய்யமுடியாது. உன்னால முடிஞ்சதை பார்த்துக்கோ'' என்றான்.

இதைத் தொடர்ந்து ஊர் பஞ்சாயத்து தலைவரை சென்று சந்தித்த விவசாயி, வேட்டைக்காரனின் நாய்களால் தான் படும் துன்பத்தை எடுத்துக்கூறி, அவன் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

முன்பொரு முறை பஞ்சாயத்து தலைவரின் மகளை ஒரு சிறிய விபத்திலிருந்து விவசாயி காப்பாற்றியிருப்பதால் பஞ்சாயத்து தலைவருக்கு விவசாயி மீது பெரும் மதிப்பு உண்டு.

விவசாயிக்கும் வேட்டைக்காரனுக்கும் இடையே உள்ள பிணக்கை பற்றி விசாரித்து தெரிந்துகொண்ட பஞ்சாயத்து தலைவர், ''என்னால் பஞ்சயாத்தை கூட்டச் செய்து அந்த வேட்டைக்காரனை தண்டித்து, அபராதம் விதித்து அவன் நாய்களை கட்டிப்போடச் செய்ய முடியும்.

ஆனால், நீ தேவையின்றி இதனால் ஒரு எதிரியை சம்பாதிக்க நேரிடும். உனக்கு அது சொந்த வீடு. அவனுக்கும் அது சொந்த வீடு. இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் தினசரி பார்க்கவேண்டும். அப்படியிருக்கையில் பக்கத்துவீட்டுக்காரன் நண்பனாக இருப்பதில் உனக்கு விருப்பமா அல்லது எதிரியாக இருப்பதில் விருப்பமா?''

பஞ்சாயத்து தலைவர் சொல்வதில் உள்ள யதார்த்தத்தை புரிந்து கொண்ட விவசாயி, அண்டை வீட்டுக்காரனை ஒரு நண்பனாக பார்ப்பதில் தான் தனக்கு வி ப்பம் என்றான்.





''சரி உன் ஆட்டுக்குட்டிகளும் பத்திரமாக இருப்பது போலவும் அவனும் உன் நண்பனாக இருப்பது மாதிரியும் நான் ஒரு தீர்வை சொல்கிறேன் கேட்பாயா?''

''நீங்கள் எதைச் சொன்னாலும் கேட்கிறேன்''

அடுத்து பஞ்சாயத்து தலைவர் சில விஷயங்களை அவரிடம் சொன்னார்.

வீட்டுக்கு வந்த விவசாயி பஞ்சாயத்து தலைவர் தன்னிடம் சொன்ன விஷயங்களை பரீட்சித்து பார்க்க முற்பட்டான்.

தனது பட்டியில் இருக்கும் ஆட்டு குட்டிகளிலேயே மிகவும் அழகான இரண்டு குட்டிகளை எடுத்துச் சென்று, வேட்டைக்காரனின் இரண்டு மகன்களுக்கும் தலா ஒரு குட்டி விளையாட பரிசளித்தான்.

குழந்தைகளுக்கு தாங்கள் விளையாட புதிய தோழர்கள் கிடைத்ததில் ஒரே குஷி. இருவரும் அந்த குட்டிகளுடன் விளையாடி மகிழ்ந்தார்கள்.

தன் குழந்தைகளின் புதிய தோழர்களை பாதுக்காக்க, தற்போது வேட்டைக்காரன், நாய்களை சங்கலியில் கட்டிப்போட வேண்டியிருந்தது. யாரும் சொல்லாமலே அவன் நாய்களை சங்கிலியால் பிணைத்தான்.

தனது மகன்களுக்கு விவசாயி ஆட்டுக்குட்டிகள் பரிசளித்ததை தொடர்ந்து பதிலுக்கு அவனுக்கு ஏதேனும் பரிசளிக்க விரும்பி, தான் காட்டிலிருந்து கொண்டு வந்த சில அரிய பொருட்களை பரிசளித்தான் வேட்டைக்காரன்.

ஆக இருவருக்குள்ளும் நல்லுறவு வளர்ந்து நாளடைவில் நல்ல நண்பர்களாகிவிட்டனர்.

மேற்கூறிய கதை அன்றாடம் பலருக்கு நடப்பது தான்.

பிரச்சனை தான் வேறு வேறு.

நம்மிடம் நியாயம் இருக்கிறது என்பதற்காகவோ, நம்மிடம் வலிமை இருக்கிறது என்பதற்காகவோ வீணாக எதிரிகளை சம்பாதித்துக்கொள்ளக்கூடாது.

ஆடுகள் முக்கியம் தான்.

ஆனால் அதைவிட மனஅமைதி முக்கியமல்லவா.......???




# துரோகி

துரோகி என்பது ஒரு நிரந்தர
கதாபாத்திரம்,
அந்தக் கதாபாத்திரத்தை
மாறிமாறி ஒவ்வொருவராக ஏற்றுக்
கொள்கிறார்கள். சமயங்களில்
நம்மையறியாமலேயே நாமும்
அந்தப் பாத்திரத்தை ஏற்றுக்கொண்டு
இயன்றவரை நம்பிக்கைகளைக்
கொன்று களைகிறோம்.
ஆனால் நேற்றைய பொழுதில்
மிக நெருக்கமாக இருந்த நண்பன்
அந்தப் பாத்திரத்தைத் திறம்பட ஏற்று
நடத்தும்போதுதான் நாம் மிகுந்த மன
உளைச்சலுக்கு உள்ளாகிறோம்.

- நிஷா மன்சூர் -



Publis... Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org